பக்கங்கள்: 20 விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:13 24.07.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION

BUILD THE NATION TOGETHER

த.விஜயசங்கர்



## ஹிஷாலினி வெளிப்படுத்திச் சென்றுள்ள உண்மை:

# மலையகச் சிறுவர்களும் வாழப்பிறந்தவர்களே

“இப் பகுதி மக்களின் வறுமை நிலையினைச் சாதகமாகக் கொண்டு ஏனைய பகுதியில் வாழும் செல்வந்தர்கள், பிரமுகர்கள் குறைந்த ஊதியத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வயதுக்கு மீறிய சுமையினை அக்குழந்தைகளின் மீது சுமத்துகின்றனர். இன்னும் சிலர் அத்தகைய பிள்ளைகளை தமது பாலியல் இச்சைகளுக்கும் பலியாக்க முனைகின்றனர். அத்தகைய ஒரு நிலையே ஹிஷாலினிக்கும் நிகழ்ந்திருக்கிறது.”

கடந்த 3 ஆம் திகதி எரிகாயத்துக்குள்ளாகி 16 ஆம் திகதி மரணமடைந்த டயகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் மரணம் நாட்டில் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கச் செய்துள்ளது. இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நான்கு காரணங்களை முன்வைத்து மேற்கொள்ளப்படுகின்றது. ஒன்று, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல். இரண்டாவது, சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகம். மூன்றாவது, மரணத்திற்கான காரணம் தொடர்பிலான சந்தேகம். நான்காவது, அரசியல் செல்வாக்குநிலையில் உள்ள ஒருவர் வீட்டில், இத்தகைய கொடூரமான சம்பவம் நிகழ்ந்துள்ளமை என்பனவே அவையாகும்.

கடந்த 2020 ஆம் ஆண்டு மலையகத்தின் பிரதேசமான டயகம பகுதியில் இருந்து 15 வயதுச் சிறுமியாக, முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீனின் வீட்டுவேலைகளைச் செய்வதற்காக, தரகர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட சிறுமியே ஹிஷாலினி ஆவாள். ஏறத்தாழ எட்டு மாதங்கள் அவ்வீட்டில் வேலைக்காரப் பெண்ணாக இருந்து வந்துள்ள நிலையிலேயே அச் சிறுமிக்கு இத்தகைய கொடூரமான சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

▶ 18



தாமிரன்

“இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதனைவிட பாடசாலைக் கல்வியை வினைத்திறனாக வழிநடத்துவதே முக்கியமானது. நாட்டில் உள்ள எல்லாப் பாடசாலைக்கும் கற்றலுக்கான வளங்கள் கிடைக்கின்றனவா? என்பதை முதலில் ஆராய வேண்டும். கல்வியில் சம வாய்ப்பு என்பது கல்வியை அனைவரும் பெறுவதற்கான உரிமை மட்டுமல்ல, கல்விக்கான வளங்களை அனைத்து மாணவர்களும் பெறவேண்டும் என்பதுமாகும். இன்றைய நெருக்கடிக் காலத்தில் இணைய வழியிலான கல்வியின் பயன் சரியான விதத்தில் அனைத்து மாணவர்களையும் சென்றடைகிறதா? எனச் சிந்திக்க வேண்டும்.”



# இராணுவப் பயிற்சி

## ஒழுக்கத்தை மேம்படுத்துமா?

# அப்படியென்றால்...

அண்மையில் பாணந்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உரையாற்றும் போது “ஒழுக்கமான சமூகத்தை உருவாக்க வேண்டுமானால் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்க வேண்டும் எனவும், நாட்டில் தற்போது சீர்குலைந்து போயுள்ள ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இராணுவப் பயிற்சி ஒன்றே தீர்வாக அமையும் எனவும் கூறியிருந்தார். ஏற்கனவே கொத்தலாவலப் பல்கலைக்கழகச் சட்ட மூலத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அமைச்சரின் இந்தக் கூற்று நாட்டை மேலும் போராட்டக்களமாக மாற்றிவிடுவதான அபாயத்தையே உருவாக்கிவிடும். இந்த அரசு திட்டமிட்டே நாட்டைக் குழப்பி ஒரு இராணுவப் பொறி முறைக்குள் கொண்டுவர முயல்கின்றதா? என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகின்றது.

உலகில் இருபத்தெட்டுக்கு மேற்பட்ட நாடுகளில் கட்டாய இராணுவப்



பயிற்சி இருக்கின்றது. இந்த நாடுகளில் பெரும்பான்மையானவை, எல்லைப் புற அச்சுறுத்தல்களுக்கும் அல்லது மேற்குலக நாடுகளின் நேரடியான அல்லது மறைமுகமான நெருக்கீடுகளையும் எதிர்கொண்டு வருபவை. இலங்கையைப் பொறுத்த வரையில் 2009 வரையான காலப்பகுதிக்குப் பின்னர் நாட்டில் போர்ச்சூழ்நிலை இல்லை என்றே அரசாங்கமும் இராணுவமும் தெரிவித்திருக்கின்றது. எனவே யுத்த அச்சுறுத்தலை முன்னிலைப்படுத்தி, கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்க முடியாது என்பதும் வெளிப்டை.

▶ 14

லக்சனா பாலகுமாரன்



போராட்டக்காரர்கள் சிலரைப் பாதுகாப்புப் படையினர் இழுத்துச் சென்றனர்



பல இடங்களில் போராட்டக்காரர்கள் வாகனங்களைக் கவிழ்த்தனர், கடைகளை உடைத்தனர்

# அமெரிக்காவின் தந்திரோபாய நகர்வுகள் கியூபாவை வீழ்ச்சி காண வைக்குமா?

கொரோனா முதல் அலையின் போது மருத்துவத் துறையில் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்கும் வகையில் செயல்பட்ட கியூபா நாட்டில் பொருளாதாரச் சரிவு, உணவு மற்றும் மருந்துகள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு மற்றும் கொரோனா நெருக்கடியைத் தவறாகக் கையாண்டதன் காரணமாக அந்நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிராக அன்று (04.07.2021) திரளாக போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர். இதில் ஏராளமான இளைஞர்களும் பங்கேற்றனர். தலைநகரில் பெரிய அளவிலான பேரணி நடைபெற்றதால் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. சில இடங்களில் போலீசார் மீது கல்வீச்சுச் சம்பவங்களும் நிகழ்ந்தன. போராட்டத்தில் பங்கேற்றவர்களை அரசாங்கம் கைது செய்துள்ளது என்று செய்தி வெளியானது. ஆனால் கியூபா அரசாங்கமோ, இது அமெரிக்காவின் சதி எனக் குற்றம் சாட்டியுள்ளது. அத்துடன் கம்யூனிச ஆதரவாளர்கள் போராட்டங்களில் ஈடுபடுவோருடன் மோதலில் ஈடுபடவும் கியூபா ஜனாதிபதி மிகுயேல் டையாஸ் கேனல் உத்தரவிட்டுள்ளார். கியூபாவில் அரசுக்கு எதிராகப் பேசுவோருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்பதால் அங்கு நடந்திருக்கும் போராட்டங்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. 1959 இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைத்த பிறகு அந்நாட்டின் வரலாற்றில் அரசுக்கு எதிராக மக்கள் நிகழ்த்தும் மிகப்பெரிய போராட்டமாக இப்போராட்டம் கருதப்படுவதற்கான காரணங்கள் மற்றும் அமெரிக்கா இப்போராட்டத்துக்கு பின்னணியிலுள்ளதா? என்பன பற்றிய தேடலாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கியூபா மக்களின் போராட்டத்தினைத் தூண்டிய காரணங்கள் தொடர்பாக நோக்கும் போது முதலாவதாக, சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியினை முக்கியமாகக் குறிப்பிடலாம். அதாவது கியூபாவின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடி நிலையினை எதிர்கொண்டு வருகின்றது. கொரோனாவால் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளால் மிக முக்கியமான துறைகளில் ஒன்றான சுற்றுலாத் துறை அழிந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டிலிருந்து கியூபாவின் சுற்றுலாத்துறை முடக்கப்பட்டுள்ளதால் கியூபாவில் பொருளாதாரம் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இன்று பொருளாதாரத்தின் நிலைமை இன்னும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பெரும்பாலான கியூபா மக்கள் சுற்றுலாத்துறையில் நேரடியாக வேலையில் ஈடுபட்டு வருமானம் பெற்றுக் கொள்பவர்களாக உள்ளனர். மேலும் சில தொகுதி மக்கள் சுற்றுலாத் துறையில் மறைமுகமான வேலைகளில் ஈடுபட்டு, தங்களின் அன்றாட தேவைகளுக்குரிய வருமானத்தினை ஈட்டிக் கொள்பவர்களாகக் காணப்பட்டனர்.



போராட்டத்தின்போது அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்தின் புகைப்படக் கலைஞருக்கு காயம் ஏற்பட்டது

இரண்டாவதாக, உலகின் சர்க்கரைக் கிண்ணம் என போற்றப்படும் வகையில் சர்க்கரை உற்பத்தியில் முன்னணி நாடாக கியூபா திகழ்ந்தது. பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படும் சர்க்கரை உற்பத்தியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அஸ்கியூபா அமைப்பு எரிபொருள் பற்றாக்குறை மற்றும் இயந்திரங்களின் பழுது உள்ளிட்டவை சர்க்கரை உற்பத்தி குறைந்து போனதற்கு காரணங்கள் என்று கூறுகிறது.

மூன்றாவதாக, அமெரிக்காவினால் கியூபா மீது முன்வைக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும் மக்களினை போராட்டத்திற்கு தூண்டிய காரணங்களில் ஒன்றாகும். கியூபா, காஸ்ட்ரோவின் காலத்திலிருந்து அமெரிக்காவிற்கு ஒரு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்து வரும் நிலையில், கிட்டத்தட்ட 1962 ஆம் ஆண்டிலிருந்து அந்நாட்டின் மீது பல தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. கியூபாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்காவின் இந்தத் தடையும் காரணம். அதாவது 1959 ஆம் ஆண்டு கியூபாவில் புரட்சியின் மூலம் பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைப் பிடித்தார். அப்போது அங்கிருந்த அமெரிக்க நிறுவனங்களின் கச்சா எண்ணெய் நிறுவனங்களைக் கியூபா தேசியமயமாக்கியது. இதனால் 1962 ஆம் ஆண்டிலிருந்து கியூபா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்து வருகிறது. எனினும் அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்த காலத்தில் இருநாடுகளுக்குமிடையே நட்புறவு ஏற்பட்டது. பொருளாதாரத் தடைகளை நீக்குவது குறித்தும் கூட ஆலோசிக்கப்பட்டது. இருப்பினும் டிரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் மீண்டும் பொருளாதாரத் தடைவிதிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்த ஆண்டும் ஜனவரி மாதம் கியூபா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது. அத்துடன் டிரம்ப் காலத்தில் கியூபா மீது பொருளாதார மற்றும் வணிக தடைகள் கடுமையாக்கப்பட்டது. அமெரிக்கர்கள் கியூபா செல்லத் தடைகள் விதிக்கப்பட்டது. இது கியூபாவின் சுற்றுலாத்துறைக்கு மிகப்பெரியளவில் நஷ்டத்தை ஏற்படுத்தியது. இந்தத் தடைகளால் கியூபாவிற்கு சுமார் 5 பில்லியன் டாலர் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2019 ஆம் ஆண்டு கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 193 நாடுகளைக் கொண்ட ஐ.நா சபையில் 184 நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. ஐ.நா. சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதன் மூலம் தடைகளை நீக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியாது. ஆனால் அவை உலக நாடுகளின் கருத்தைப் பிரதிபலிக்கின்றன.

நான்காவதாக, தற்போது நிலவும் கொரோனாவைக் கையாண்ட விதமும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றின் முதல்

**“மாபெரும் ஆயுதப் புரட்சியின் மூலம் 1959 இல் கியூபாவில் அமெரிக்கா ஆதரவு சர்வாதிகாரி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர் பிடல் காஸ்ரோ. 2006 ஆம் ஆண்டு வரை கியூபாவில் பிடல் காஸ்ரோ ஜனாதிபதியாக இருந்தார். பிடல் காஸ்ரோ 2016 இல் மரணிக்கும் வரை அரசியலில் அதிகாரம் செலுத்தும் தலைவராகவே காணப்பட்டார். கடந்த ஆண்டு ராவுல் காஸ்ட்ரோ பதவி விலகிய பின்பு கியூபாவின் காஸ்ரோ பரம்பரையில்லாத ஆட்சியாளர் அதிகாரத்திற்கு வந்தார்.”**

அலை ஏற்பட்ட போது கியூபா பெரிதும் சமாளித்துக் கொண்டது. கியூபா தன் நாட்டு மருத்துவர்களைப் பிற நாட்டிற்கு அனுப்பி வைக்கும் அளவிற்கு ஸ்திரத்தன்மையுடன் விளங்கியிருந்தது. ஆனால் இந்த இரண்டாம் அலையினை சரியான விதத்தில் எதிர்கொள்ள கியூபா தவறிவிட்டது. நாள் ஒன்றுக்கு அங்கு ஐந்தாயிரம் பேருக்கு மேல் தொற்று ஏற்படுகிறது. சமீபமாக ஒரே நாளில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். எனவே கொரோனாத் தொற்றை அரசு சரியாகக் கையாளவில்லை என்பதே போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் சொல்லும் காரணம். இரண்டாம் அலையில் பலர் மருத்துவமனையில் இடம் கிடைக்காமல் இறந்துள்ளனர். ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத் தரவுகளின்படி, நாட்டில் 250-500க்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் மற்றும் 1600க்கும் மேற்பட்ட கோவிட் - 19 இறப்புக் கூட பதிவாகியுள்ளன என்று அறிந்து கொள்ள முடிகிறது.

ஐந்தாவதாக, கியூபாவில் ஏற்பட்டுள்ள மருத்துவப் பொருட்களுக்கான தட்டுப்பாடு பாரிய பிரச்சினையாக உள்ளது. அதாவது கொரோனாப் பெருந்தோற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை ஒரு பக்கம் அதிகரிப்பதும் மறுபுறம் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் மக்களை கடுமையான கோபத்திற்குள்ளாக்கியுள்ளது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசியைச் சில நாட்களுக்கு முன்னர் கியூபா அறிமுகப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாகவே கியூபாவில் போராட்டங்கள் அதிகரித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தவிர கடுமையான மின்வெட்டும், மக்களை அதிருப்தியின் உச்சத்திற்கு அழைத்து சென்றுள்ளது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டக் களத்தை தேர்ந்தெடுத்துள்ளனர். கியூபா மீதான அமெரிக்காவின் 60 ஆண்டுகால தடை காரணமாக

(15 ஆம் பக்கம் பார்க்க)

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# சிறுவர் உரிமையும், பாதுகாப்பும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அல்ல வாழ்க்கை முறைக்குமுரியது

இலங்கையின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்துவந்த டயகம பகுதியைச் சேர்ந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி தனியாகவும் திரளாகவும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 3 ஆம் திகதி எரிகாயங்களுக்குள்ளாகி 16 ஆம் திகதி குறித்த சிறுமி மரணமடைந்த நிலையில் இதுவரை மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. மரண விசாரணையில் அச் சிறுமி தொடர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. இந்நிலையிலேயே பெண்கள் அமைப்புக்கள், சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தனிநபர்கள் என்று பல்வேறு தரப்பினரும் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாகச் சிறுவர் தொடர்பான இத்தகைய துஸ்பிரயோகங்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாக அமைகிறது. நாட்டில் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு பிள்ளையாவது இவ்வாறு துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமையை ஊடகங்களின் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கிறது. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் இறுக்கமான சட்டங்கள் இலங்கையில் இருப்பதாகச் சொல்லப்படுகின்ற போதும் தொடர்ந்தும் நடைபெற்று வரும் இவ்வாறானதொரு நிலைமை எதனை வெளிப்படுத்துகின்றது?

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் நாட்டில் பல்வேறு இடங்களிலும் பதினாறு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் வீட்டு வேலைகளிலும், சாப்பாட்டுக் கடைகளிலும், தெருவோர வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர் என்பது வெளிப்படையான போதும் ஏன் சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில்லை? ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் என்ன செய்கின்றார்கள்? ஒரு குற்றம் நடப்பதற்கு முன் தடுப்பதற்கான முயற்சியை இங்கு எவரும் எடுப்பதாகத் தெரியவில்லை. மாறா கக் குற்றம் நடந்ததன் பின்னர் அது தொடர்பில் தீவிரமான விசாரணை நடத்தப்படுவதாக கருத்துத் தெரிவிக்கும் சூழமைவே இலங்கையில் இருப்பதாகத் தெரிகிறது. டயகம சிறுமி ஹிஷாலினியின் விடயத்திலும் இதுவே நடந்திருக்கிறது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள சிறுவர்கள் நாட்டின் பலபகுதிகளிலும் வேலைக்கு தரகர்களால் கொண்டு செல்லப்படுவது வழமையான செயலாகவே இருந்து வருகிறது. அவ்வாறு வேலைக்குச் செல்லும் பிள்ளைகள் தங்களது ஊரின் விஷேட நிகழ்வுகளுக்கு வரும் போது தங்களை வசதிபடைத்தவர்கள் போலக் காட்டிக் கொள்வதும் வண்ணமயமான ஆடைகளை அணிவதும் கைத் தொலைபேசிகளைப் பாவிப்பதும் ஏனைய பிள்ளைகளையும் அவ்வாறு வேலைக்குச் செல்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவதாக அமைகின்றதென அப்பகுதியில் வசிப்பவர்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அப்படியென்றால் சிறுவர்கள் வேலைக்குச் செல்வதென்பது இரகசியமான விடயமாக அமையவில்லை. பொதுவாக எல்லோருக்கும் தெரிந்தே நிகழ்ந்து வருகிறது. ஆனால் அது தொடர்பில் அங்குள்ள எந்தச் சமூக ஆர்வலர்களும் சிறுவர் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் கவனம் கொள்ளாமல் இருக்கின்றனர். அங்குள்ள அரசியல் தலைவர்களும் எந்தவிதமான கரிசனையும் அற்றவர்களாகவே செயற்பட்டு வருகின்றனர். இது அம் மக்களின் வாழ்வியல் தொடர்பில் யாருக்கும் எந்த அக்கறையும் இல்லை என்பதனையே வெளிப்படுத்துகிறது. சம்பந்தப்பட்டவர்கள் சரியான செயற்பாடுகளை முற்கூட்டியே முன்னெடுத்து வருவார்களேயானால் அப்பகுதியில் வாழும் சிறுவர்களும் ஏனைய பிரதேசத்துப் பிள்ளைகள் போல கல்வி பெறுவதற்குச் சந்தர்ப்பம் உடையவர்களாய் இருந்திருப்பார்கள். இப்படி வீடுகளிற்கு வேலைக்குச் சென்று துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகவும் உயிரை இழக்கவும் அவசியம் ஏற்படாது.

அங்கு வாழ்பவர்களின் வறுமையே அவர்கள் தமது பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு அனுப்புவதற்குக் காரணம் என்று அறிய முடிகிறது. ஆனால் ஏனைய பிரதேசங்களில் அவர்கள் போல எத்தனையோ வறுமைக்குள்ளான குடும்பங்கள் தங்களது பிள்ளைகளைப் படிக்க வைத்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு சேர்க்கின்றார்கள். ஆக, இது அவர்களின் விழிப்புணர்வற்ற நிலையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சுரண்டலாக அமைவதும் வெளிப்படையானது. இந்த இடத்தில் அம் மக்களுக்குரிய சரியான விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை இன்று ஹிஷாலினிக்காகக் குரல் கொடுக்கும் அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்ள முன்வரவேண்டும். ஹிஷாலினிக்கு நிகழ்ந்த அநீதிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடும் அதேவேளை ஹிஷாலினிக்கு நிகழ்ந்தது போல இனிமேல் எந்தவொரு பிள்ளைக்கும் நிகழாமல் இருப்பதற்குரிய செயற்திட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். பொதுவாக இலங்கையில் எழுகின்ற பெரும்பாலான ஆர்ப்பாட்டங்கள் குறித்த சம்பவங்கள் மறக்கப்பட்டதும் மறைந்துவிடும் ஒன்றாகவும் பிறிதொரு சம்பவம் நிகழும் வரை காத்திருக்கும் ஒன்றாகவுமே அமைகின்றன. ஆனால் இன்று மலையகச் சிறுமிக்கு ஆதரவாக எழுந்துள்ள கோசங்களும் ஆர்ப்பாட்டங்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் வரை ஓய்ந்து போகாது இருப்பதோடு இன்னும் இப்பொறிக்குள் அகப்பட்டுள்ள பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கான ஆயுதமாகவும் மாற்றம் பெறவேண்டும். சிறுவர் உரிமையும், சிறுவர் பாதுகாப்பும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் என்று இல்லாமல் வாழ்க்கை முறைக்குரியதாக மாற்றுவது பற்றி யோசிப்போம். ■

தந்திரன்

# வெற்றியின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளாமல் வெற்றியை எப்படிப் பெறமுடியும்?

2024இல் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தானே ஜனாதிபதி வேட்பாளர் என தற்போதைய ஜனாதிபதியும் மொட்டுக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான கோத்தபாய ராஜபக்ஷ அதிரடியாக அறிவித்துள்ளார்.

'நாட்டு மக்களுக்கு நான் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் எனது பதவிக் காலத்தில் நிறைவேற்றியே தீருவேன். மக்களை ஏமாற்றுபவன் நான் அல்லன். அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதே எனது இலக்கு. அதனால் அவர்கள் எப்பொழுதும் எனது பக்கமே நிற்பார்கள்' என்ற நம்பிக்கையினையும் முன்வைத்துள்ளார்.

அதேநேரம் தனது திட்டங்களைச் செயற்படுத்த மூன்று வருடங்கள் மாத்திரமன்றி மேலும் ஐந்து வருடங்கள் இருக்கின்றன. அதனால் தன்னை நம்பும் மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை செவ்வனே செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கையின் நிமிர்த்தம் அண்மையில் நடைபெற்ற ஊடக பிரதானிகளுடனான சந்திப்பின் பொழுது கூறியிருக்கின்றார். 2024 இல் நடைபெற உள்ள தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவது மட்டுமல்லாது அதில் வெற்றி பெறுவதாகவும் நம்பிக்கை கொண்டுள்ளார். இவ் நம்பிக்கையானது கடந்த நாட்களில் நிகழ்ந்துவரும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் பின்னும் வந்திருக்கின்றது என்றால் அது எந்த நம்பிக்கையின் அடிப்படையில் என்று சிந்தித்தே ஆக வேண்டியுள்ளது.

கட்சிக்குள் பலவகையான எதிர்ப்பலைகள் எழுந்துள்ள போதும் இதுவரையில் யாரும் வெளியேறவில்லை என்பதனைக் கொண்டும், தென்னிலங்கையில் அவர் எதிர்பார்த்த அளவு எதிர் அலைகள் தோன்றவில்லை என்பதனைக் கொண்டும் கட்சியும் மக்களும் தன்பக்கமே உள்ளனர் என நம்பும் மனோநிலையே இவ்வாறு அவரைச் சொல்ல வைத்திருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது.

மேற்குறித்த அறிவிப்பானது, சில தற்காலிக பிரச்சினைகளை அரச மட்டத்தில் தவிர்த்திருக்கும் என்றே எண்ண முடிகிறது. அதாவது பசில் ராஜபக்ஷவினது மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கும் இடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் பனிப்போரை ஓரளவு குறைக்கும் என நம்பலாம். அல்லது கோத்தபாய ராஜபக்ஷவின் மீதான நம்பிக்கையை மகிந்த ராஜபக்ஷ குடும்பம் இழக்கின்ற சூழ்நிலையும் ஏற்படலாம்.

ஏற்கனவே இலங்கையில் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் அண்மையில் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராகி நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பசில் ராஜபக்ஷவே போட்டியிடுவார் என நம்பப்பட்டது.

அதேவேளை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிடலாம் எனவும் நம்பப்பட்டது. அதிலும் மகிந்த ராஜபக்சவின் மனைவி சிராணி ராஜபக்ஷ அவர்கள் நாமல் ராஜபக்க்ஷவை அடுத்தமுறை ஜனாதிபதி ஆக்குவதில் குறியாக உள்ளார் என அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.



இத்தகைய பனிப்போரின் நடுவிலேயே ஜனாதிபதியின் இத்தகைய அறிவித்தல் வெளியாகியிருக்கிறது. இந்த அறிவித்தல் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினைப் பொறுத்தவரையில் உவப்பானதாக இருக்கப்போவதில்லை. மேலும் ஜனாதிபதியின் இந்த அறிவித்தல் வெளியான பின்பு அது தொடர்பான கருத்துக்களை இன்னும் மகிந்த ராஜபக்க்ஷ தரப்போ குடும்பமோ வெளியிடவில்லை. அல்லது வெளியிடுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர் என்றே தோன்றுகின்றது.

இந்தத் தயக்கம் அச்சத்தின் காரணமாகவா? அல்லது தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை குழப்பக் கூடாது என்பதற்காகவா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. எது எப்படியிருந்தாலும் தற்போது அரசுக்கு எதிராக எழுந்துவருகின்ற எதிர்ப்பலைகளை சமாளித்து, நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் இயல்பான வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்குரிய நம்பிக்கையான செயற்பாடுகளை மேற்கொண்டு மக்களின் மனங்களை வெல்வதில்தான் அடுத்துவரும் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி சார்ந்த எவரும் ஆட்சிபீடம் ஏற முடியும் என்பதனை மதிப்புக்குரிய ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துகொள்வாரா? ■



# வெறும் சோற்றுக்கே வந்தவர்கள்

அவதானி

கிளிநொச்சியில் காட்டை அண்டிய சிறிய கிராமத்திலிருந்து பதினொரு வயதுச்சிறுமி வள்ளி, ஒரு குழந்தைத் தொழிலாளர் முகவரினால் ஐம்பது ரூபாய்க்குப் பெறப்பட்டு, கொழும்பில் வசதி வாய்ப்புகளுடன் வாழும் கணவன் மனைவி மாத்திரம் கொண்ட செல்வந்தக்குடும்பத்தின் வீட்டுக்கு வேலைக் காரியாக வருகிறாள்.

தினமும் கோதுமைப்புட்டும் தேங்காய்ச் சம்பலும் சாப்பிட்டவளுக்கு கொழும்பில் வீட்டு வேலைக்குச் சென்றால் தினமும் இறைச்சியும் மீனும் முட்டையும் உணவாகக் கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைகள் தரப் பட்டு அழைத்துச் செல்லப்படுகிறாள் அந்த வள்ளி.

ஆனால், அவள் கிராமத்தில் கண்ட காட்சிகளை, ஓடி ஆடி விளையாடிய சகோதர சகோதரிகள், அயல் வீட்டுச்சிறுவர், சிறுமியர் இன்றி தனித்துவிடப்பட்டு, பொன்கூண்டுக்குள் சிறைப்பட்ட பறவையாகிறாள்.

சத்தான உணவுக்கு ஆசைப்பட்டு, தமக்கும் எஞ்சியி ருக்கும் ஆறு குஞ்சுகுருமன்களுக்குக் கிடைக்காது போனாலும் இவள் வள்ளி ஒருத்திக்காவது அவை கிடைக்கட்டுமே, அத்துடன் அவளது உழைப்புக்கான ஊதியத்தையும் அங்கே சென்று பெற்றுக்கொள்ளலாம் என நினைக்கும் குடிகாரத் தந்தைதான் வள்ளி என்ற அந்தச் சிறுமியைப் பெற்றவன்.

ஒருநாள் மகளைப் பார்க்க அவன் கொழும்பிலிருக் கும் வனப்பு மிக்க அந்த வீட்டுக்கு வந்து மெய்சிலிர்த் துப்போகிறான். குடிசையில் வாழ்ந்த தனது மகளுக்கு இங்கே வசிக்க மாளிகையே கிடைத்திருக்கிறதே என்று அகமும் முகமும் மலர, அவளது ஊதியத்தை மாத்திரம் எஜமான் எஜமானியிடம் பெற்றுக்கொண்டு திரும்பிச் செல்லத்தயராகும்போது, வள்ளி தானும் உடன் வரப் போவதாக உரத்துக் குரல் எழுப்புகிறாள்.

இக்கதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெறும் சோற்றுக்கே வந்தது என்ற தலைப்பில் வத்தளையிலிருந்து வெளிவந்த அஞ்சலி என்ற மாத இதழில் வெளிவந்தது. அதாவது 1971 ஆம் ஆண்டு வெளிவந்தது.

> **குழந்தைப் போராளிகளை, குழந்தைத் தொழிலாளர் களை உருவாக்குதல் சட்டப்படி குற்றம் எனச் சொல்லப்பட்டிருப்பது சட்டப் புத்தகங்களில் மாத்திரம் தான். ஆனால், நடைமுறை யில் சட்டம் தெரிந்த படித்த பெரிய மனிதர்களின் வீடு களில்தான் குழந்தைத் தொழிலாளர்கள் மாடாக உழைத்துக் கொண்டிருக்கி றார்கள்.**

செல்வந்தர்களின் வீடுகளில் வேலைக்கு அமர்த்திப் பணம் சம்பாதிப்பதற்காக ஏழைச் சிறுவர் சிறுமியரை அழைத்துச் செல்லும் தரகர்களை நம்பி, தங்கள் குழந் தைகளை அனுப்பும் பெற்றோர்களும் - சத்தான உண வும் உடுபுடவையும் கிடைக்கும் என்ற கனவுகளோடு கொழும்புக்கு வரும் குழந்தைகளும் எத்தனை ஆண்டு கள் சென்றாலும் பிரச்சினைகள் நேரும்போது மாத்திரம் தான் செய்தி ஊடகங்களில் வலம் வருவார்கள்.

அவ்வாறு ஒரு செய்திதான் அண்மையில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரிஷார்ட் பதியூதினின் வீட்டிலிருந்து வெளிவந்துள்ளது.

ஈழத்து எழுத்தாளர் செ. கதிர்காமநாதன் 1971 ஆம் ஆண்டு எழுதிய வெறும் சோற்றுக்கே வந்தது சிறுகதை யில் வந்த கிளிநொச்சிக் கிராமத்துச் சிறுமி வள்ளி, குடி சையாயினும், கோதுமைச் சாப்பாடாயினும் தன் தாய் வீட்டுக்குத் திரும்பிச் செல்லவே விரும்பினாள். அதற்காகவே உரத்துக் குரல் கொடுத்தாள்.

ஆனால், இந்த மாதம் நிஜத்தில் நடந்திருக்கும் கதையில் மலையகத்தில் நுவரெலியா டயகம மூன்றாம் பிரிவுத் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி, எரிகாயங்களு டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பன்னிரண்டு நாட்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருக்கிறாள்.

இச்செய்தி வெளியானதும், அந்தச்சிறுமி இறந்து இரண்டு நாட்களில் வீட்டு எஜமான் ரிஷார்ட் பதியூ தீனுக்கு எங்கிருந்தோ மாரடைப்பும் வந்துவிட்டது. இப்போது அவரும் மருத்துவமனையில்.

அரசியல்வாதிகளுக்கு நீதி சார்ந்த நெருக்கடிகள் வந்ததும் இந்த எதிர்பாராத மாரடைப்பும் வந்துவிடும் என்பதும் எழுதப்படாத விதி போலும்.

இந்தச்செய்தியையடுத்து மலையக அரசியல் தலை வர்கள் ஊடகங்களில் அறிக்கை விடுகிறார்கள். மலைய கத்தில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கிறார்கள்.

இவர்களது தொகுதிகளிலிருந்துதானே தரகர்களினால் ஏழைச்சிறுவர் சிறுமியர் எத்தனையோ வருடகாலமாக குழந்தைத் தொழிலாளர்களாக தரகர்களினால் ஆசை வார்த்தை காண்பித்து அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்தத் தலைவர்களின் வீடுகளில் பணியாற்றும் வேலைக்காரர்கள் எத்தனைபேர் என்பதை வெளியே சொல்வார்களா..?

சிறுவர் நலன்களைப் பாதுகாக்கும் அரச நிறுவனங்கள் என்ன செய்கின்றன..? அதற்காகவே இயங்கும் தன்னார் வத் தொண்டு அமைப்புகள் இது விடயத்தில் எத்தனை விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

முன்னர் தோட்டப் பாடசாலைகளுக்கு வடபகுதியி லிருந்து ஆசிரியப் பணியாற்றச் செல்லும் ஆசிரியர்கள், விடுமுறைக்கு ஊர் திரும்பும்போது, கையோடு ஒரு ஏழைச்சிறுவனையோ சிறுமியையோ அழைத்து வந்து விடுவார்கள் தங்கள் குடும்பத்தலைவிக்கு ஊழியம் பார்ப்பதற்காக.

இது பற்றிய கதைகள் ஏராளம். தங்கள் வீடுகளில் பணிக்கமர்த்தப்பட்ட சிறுமிகளை வன்கொடுமை செய்த பெரிய மனிதர்களும் நிரம்பிய புனித பூமியில்தான் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் கிழக்கிலங்கை மூதூரில் 1988 ஆம் ஆண்டு பிறந்த ரிசானா நஃபீக் என்ற பெண்ணை 1982 ஆம் ஆண்டு பிறந்தவள் என பொய்யான பிறப்புச் சான்றிதழ் காண்பித்து, மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைத்தும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுத்து, இறுதியில் அவளை தலையற்ற முண்டமாக அவள் பெற்றோரிடம் ஒப்ப டைத்த முகவர் நிறுவனங்கள் - அரசியல் தலைவர்களை நாம் மறக்கவில்லை.

மலையகத் தோட்டங்களில் வதியும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்து சிறு வர் சிறுமியரை தலைநகரின் செல்வச் சீமான் சீமாட்டிகள் ஆடம்பரமான வாழ்க்கை வாழும் பங்களாக்களில் சமைப்பதற்கும் பாத்திரம் கழுவுவதற்கும் உடு புடைவை கழுவிக் காயப் போட்டு அயர்ன் போட்டு வைப்பதற்கும் அவர்களுக்கு பணிவிடை செய்வதற்கும், பூமரங்களுக்குத் தண்ணீர் வார்ப்பதற்கும் வீட்டுச் செல்லப் பிராணிகளுக்கு வேளா வேளைக்கு உணவு தருவதற்கும், தங்கள் பால்ய காலத்துக் கனவுகளையும் பள்ளிப் படிப்பையும் பெற்றோரின் அரவணைப்பையும் முற்றாக இழந்து செல்லும் குழந்தைத் தொழிலாளர் களாக மாற்றப்படும் பிஞ்சுகள் எத்தனை எத்தனை..?

குழந்தைப் போராளி



களை, குழந்தைத் தொழிலாளர்களை உருவாக்குதல் சட்டப்படி குற்றம் எனச் சொல்லப்பட்டிருப்பது சட்டப் புத்தகங்களில் மாத்திரம்தான். ஆனால், நடை முறையில் சட்டம் தெரிந்த படித்த பெரிய மனிதர்களின் வீடுகளில் தான் குழந்தைத் தொழிலாளர்கள் மாடாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளுக்குச் சத்தான உணவும் ஆரோக்கியமான வாழ்வும் சிறந்த கல்வியும் வழங்காத தேசங்கள் உருப் படப்போவதில்லை. எத்தனை அகலமாக்கப்பட்ட விரைந்து செல்லக்கூடிய வீதிகள் அமைத்தாலென்ன?



எத்தனை மாடிக்கட்டிடங்களை தாமரைக்கோபுரங்க ளாக வான் நோக்கி உயர்த்திக் காட்சிப்படுத்தித்தான் என்ன? கடலிலே உல்லாச மாநகரம் அமைத்தால்தான் என்ன? நாளைய எதிர்காலத்திற்கான சந்ததிகளின் வாழ்வில் சுபீட்சத்தைக் காணாமல், அவர்களை உல்லாசி களின் வீட்டு அடிமைகளாக்கி வைத்திருப்பதைக் கண்டும் காணாமலிருக்கும் அரசின் தலைவர்கள் இறுதியில் குழந்தைகளின் சாபத்தையே சம்பாதிப்பார்கள்.

நல்லவை யாவும் குழந்தைகளுக்கே என்று சொன்ன வர் மாமேதை லெனின்.

இலங்கை அரசு குழந்தைகளுக்கு நல்லதை செய்யா விட்டாலும், பள்ளி செல்லவேண்டிய குழந்தைகளை வீட்டு வேலைகளுக்கு அமர்த்துவதைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்களையாவது நடைமுறைப்படுத் தட்டும்.

இல்லையேல் அரசுக்கும் மாரடைப்பு வந்துவிடும்.



# தொடரும் அநீதி நீதி மறுப்பும் நீதி கோரலும்

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்க வில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களி லேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வா கம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக் களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையி லும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

ஆசிரியர்

(03)

“குரலற்றவர்களுக்கு நீதியுமில்லை. கருணையில் இடமுமில்லை. தனித்து விடப்பட்டவர்களின் துயரங்களே அவர்களுடைய வழி நீளமும்.”

தங்களுடைய நிலையைத் தாமே வெளிப்படுத்தவும் முடியாது. தங்களைப் பற்றி பிறரும் பேசாத ஒரு நிலையே வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுடைய வாழ்க்கையாக இருந்தது. இதனால்தான் இவர்கள் பேசாப் பொருளாக விலக்கப்பட்டனர். குரலற்றோராக வாழ நிர்ப்பந் திக்கப்பட்டனர். வடக்கு நோக்கி வந்து 60 ஆண்டுகள் கடந்த பின்னும் இவர்களைப் பற்றி, இவர்களுடைய சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளைப் பற்றி எந்தத் தரப்பினாலும் எத்தகைய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வளவுக்கும் இவர்கள் வடக்கில் கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு அண்மையான சனத்தொகைத் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நான்கில் ஒரு பகுதியினர் என்ற அளவுக்குள்ளனர்.

அப்படியென்றால் அரசியல் பிரதிநிதித்துவத்திலும் பண்பாட்டு அடையாளத்திலும் சமூகப் பொருளா தாரத்திலும் வளப்பகிர்விலும் பிற அதிகாரங்களிலும் இவர்களுடைய இடம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஏனென் றால் இவர்கள் கூலிகள். கூலிகளிலும் பல வகையுண்டு. குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் உள்ள கூலிகள் அந்த நிலத்தின் வாழ்க்கைத் தொடர்ச்சியைக் கொண்ட வறிய மக்கள். அல்லது ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட சமூகத்தினர். இவர்களுக்கு அந்தந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியா கவே வாழ்ந்த வாழ்க்கை அனுபவப் பலமும் வரலாற் றுத் தொடர்ச்சி என்ற வலுவும் இருந்தது. ஏற்ற இறக்கமுடைய சமூக நிலை என்றாலும் அயலவர்களுடனான உறவு இருந்தது.

எனவே இவர்கள் கூலிகள் என்ற நிலையிலும் சற்றுப் பலமானவர்களாகவே இருந்தனர்.

அத்துடன் கொலனிக்காலத்தில் (கடந்த நூற் றாண்டின் தொடக்கத்தில்) கிடைத்த வாய்ப்புகளைக் கொண்டும் தொடர்ச்சியாக ஏற்பட்ட அரசியற் பொருளாதார மாற்றங்களினாலும் வடக்கிலிருந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் மெல்ல மெல்ல வலுவான நிலையைப் பெற்று முன்னேறத் தொடங்கினர்.

கல்வியிலும் பண்பாட்டிலும் கடினமான நிலைக ளில் எப்படியோ தமக்கான இடத்தை நிறுவிக் கொண்டவர்கள், தங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றனர்.

ஆனால் மலையகத்திலிருந்தும் தென்பகுதியி லிருந்தும் இடம்பெயர்ந்து வந்த இந்தக் கூலிகள் அப்படியல்ல. இவர்களுக்கு இது புதிய சூழல். இடமும் தொழிலும் முற்றிலும் புதியது. அயலவர்கள் புதியவர்கள் - அந்நியர்கள். அதைப்போல வாழ்விடமும் முற்றிலும் புதியதாக இருந்ததால் இவை எல்லாவற் றையும் கூட்டாக எதிர்கொள்வதில் மிகக் கடினமான நிலைகளை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

முக்கியமாக வடக்கிலுள்ள அனைத்துத் தரப்பினராலும் இவர்கள் புறத்தியாராகவே பார்க்கப்பட்டனர். நடத்தப்பட்டனர். ஆக மிக அடிநிலை யிலிருந்தே தம்மைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு நல்ல உதாணம், இவர்க ளுக்கு வடக்கு மக்களால் இடப்பட்ட அடை யாளக் குறியாகும். வடக்கத்தையார், இந்தியாக்காரர், தோட்டக்காட்டார், வந்தேறிகள் என்ற அடையாளப்படுத்தல்களால் குறிப்பிடப்பட்டதிலிருந்தே இவர்களைக் குறித்து வடக்கு மக்களிடம் எத்தகைய மனநிலை இருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். மிகப் பிந்தியே மலையக மக்கள் என்ற சொற்பதம் பிரயோக நிலைக்கு வந்தது. இதற்குக் காரணம், விடுதலை இயக்கங்களே.



மற்றும்படி இவர்கள் விவசாயக் கூலிகளாகவும் நகரங்களிலும் கிராமங்களிலும் விளிம்பு நிலைத் தொழிலைச் செய்வோராகவுமே இருந்தனர்.

காணியற்றவர்கள் என்பதால் குடியிருப்பே பெரும் சவாலாக இருந்தது. இந்தப் பிரச்சினை இன்றும் (2021 இலும்) தொடர்கிறது என்பது எவ்வளவு அவலம்?

1958 இல் வந்தவர்களுக்கு, தருமபுரத்தில் ஒரு தொகுதி காணி வழங்கப்பட்டது. அப்பொழுது தருமபுரம் பெருங்காடு. அந்தக் காட்டையே இவர்கள் வெட்டித் துப்புரவு செய்து குடியேறினர். பின்னர் வந்தவர்களுக்கு இதுவும் இல்லை. அவர்கள் தாமாக வே காடுகளை வெட்டி அங்கங்கே குடியேறினார்கள். வவுனியாவில் 1977 இல் சில இடங்களில் காணிகள் கிடைத்தன. இதற்குக் காந்தியம் உதவியது. ஆனால் இதெல்லாம் நீர்ப்பாசனக் காணிகளே அல்ல.

இதற்கு வன்னியின் குடியமைப்பு விவரத்தைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் இந்த இடத்தில் வேண்டும். முதலாவது பூர்வீக வன்னி மக்கள். இவர்கள் காலாதி காலமாக வன்னிக் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய குடியிருப்புகள் இரண்டு வகையான அடிப்படைகளில் அமைந்தது. ஒன்று, குளங்களை - அதனையொட்டிய நீராதாரங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் குடியிருப்புகள். வன்னியிலுள்ள பெரும்பாலான ஊர்கள் குளங்களின் பெயரோடு இணைந்திருப்பதை நீங்கள் இந்த இடத்தில் நினைவு கொண்டு பார்க்கலாம். கொந்தக்காரன்குளம், கூமாங்குளம், ஒட்டறுத்தகுளம், ஐயன்குளம், அனிஞ்சியன்குளம், பன்றிக்கெய்தகுளம், பாண்டியன் குளம், பாவற்குளம், செட்டிகுளம், உக்கிளான்குளம், பண்டாரிகுளம், திருநாவற்குளம், தவசிகுளம், கோயில்குளம், இறம்பைக்குளம், சமளங்குளம், ஆசிகுளம், மாதர்பனிக்கங்குளம் என பல நூறு குளக்குடியிருப்புகள் உண்டு.

இரண்டாவது, கடலோரங்களில் அமைந்த மீனவக் குடியிருப்புகள். இரண்டும் நீரை அடிப்படையாகக் கொண்டமைந்தவை. இவையே பூர்வீக வன்னியின் குடியிருப்பு முறைமையும் இதனோடிணைந்த பொருளாதார முறைமையுமாகும்.

1950 களில் இதனோடிணைந்த விவ சாயக் குடியேற்றங்கள் புதிதாக வன்னியில் ஆரம்பிக்கப்பட்டன. இரணைமடு, வவுனிக்குளம், முத்தையன்கட்டுக்குளம், அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், விசுவமடுக்குளம் என பல குளங்கள் புதிதாக இதற்கெனக் கட்டப்பட்டன.

இந்தக் குளங்கள் அத்தனையும் நீர்ப்பாசனக்குளங்களாகும். அதாவது பூர்வீக வன்னியின் சிறிய குளங்களைப் போலன்றி இவை பிரமாண்டமான பாசன வசதியைக் கொண்டமைந்தவை.

இந்தப் பாசன நீரை ஆதாரமாகக் கொண்ட நெல் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கான ஏற்பாடுகளோடு இந்தக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட் டன. இதற்கான குடியிருப்பாளர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தே கொண்டு வரப்பட்டனர்.

இவர்களுக்குப் பாசனத்தில் பயிர் செய்யக் கூடிய நிலமும் குடியிருப்புக்கான நிலமும் வழங்கப்பட்டது. அத்துடன், இவர்களுக்கான குடியிருப்புக்கு வீடுகளும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

இந்தக் குடியேற்றத்திட்டங்கள் பல வகையான அடிப்படைகளில் வேறு அமைக்கப்பட்டது. மத்திய வகுப்புத்திட்டத்தில் 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கர் வரையில் வழங்கப்பட்டது. படித்த வாலிபர் திட்டம். இதில் ஐந்து ஏக்கரிலிருந்து மூன்று ஏக்கர் வரை வழங்கப்பட்டது. படித்த மகளிர் திட்டம், விவசா யிகள் திட்டம் எனப் பல வகையான திட்டங்க ளுக்கூடாக பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வன்னியெங்கும் குடியேற்றப்பட்டன.

இன்றைய வன்னி மாவட்டங்களில் கணிசமானோர் இவ்வாறு குடியேற்றப்பட்டவர்களால் நிரப்பப்பட்டோரே. இவர்களுக்கான பாடசாலைகள், வீதிகள், தபால் நிலையங்கள், மருத்துவமனைகள், சந்தைகள், கூட்டுறவுக்கடைகள், விவசாய நிலையங் கள், நிர்வாகப் பணிமனைகள், மின்சாரம் என அனைத்தும் சிறப்பு ஏற்பாடாகச் செய்து கொடுக்கப்பட்டன.

இதனால் இந்தக் குடியேற்றவாசிகள் மிக விரைவாக வன்னியில் புதியதொரு வலுவான சமூகமாகத் திரட்சியடைந்தனர். பெருமளவு நிலத்தையும் வளத்தையும் கொண்டவர்களாக இருந்த காரணத் தினாலும் யாழ்ப்பாணத் தொடர்பினாலும் இவர்களுடைய வளர்ச்சி விரைவாக நிகழ்ந்தது.

ஆனால், வன்னிக்கு வந்த - வடக்கிற்கு வந்த மலையக மக்களுக்கு இதெல்லாம் கிடைக்கவே இல்லை. இதைப்பற்றி யாரும் சிந்திக்கவுமில்லை.

இவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் புறம்போக்கு நிலம் என்ற கிறவல் பிட்டிகளே. இதைக்கூட இவர்கள் மிகச் சிரமப்பட்டு அத்துமீறலாக பிரவேசித்து, வெட்டித் துப்புரவு செய்துதான் எடுத்துக் கொண்டனர்.

இதில் ஒரு துளி நீரைக் காண்பதே அபூர்வம்.

ஆனாலும் இதை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் வேறு என்னதான் செய்ய முடியும்?

இந்தச் சூழ்நிலையில்தான் இவர்கள் தங்கள் குடியிருப்புகளை அமைத்தனர். அத்தனையும் சின்னஞ்சிறு குடிசைகள்.

1958 தொடக்கம் 1977, 1983 எனத் தொடர்ந்த வன்முறைப் பெயர்வுகளில் வந்த இந்த மக்களின் இரண்டாவது கட்ட அவலம் இந்தக் குடிசைகளில் தொடர்ந்தது.

மலையகத்தில் உள்ள லயங்களுக்கு நிகராகவே இந்தக் குடிசைகள் அப்போதிருந்தன.

(தொடரும்)



# யாவரும் கேளிர்

குகபரன்

சங்ககாலத்தில் வாழ்ந்த பூங்குன்றனார் அதிகார வர்க்கங்களை வியந்து பாடாது மனித விழுமியங்களை முன்நிறுத்தி கவி புனைந்தவராகவே அடையாளங் காணப்படுகிறார். போர்கள் மலிந்த சமூகக்களத்தில் அதிகாரப் போட்டிகள் தலையெடுத்து அரசியல் பொருளாதார, தனிமனித நலன்களுக்காக முரண்பாடுகள் வலுப்பெற்ற புறநிலையிலேயே பூங்குன்றனாரின் பாடல் பிறந்துள்ளது. வாழ்வு குறித்தான தனது பார்வையை வெளிப்படுத்துவதாய் அமைந்த "யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற பாடல் ஆழ்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

"யாது மூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர் வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே "

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் சிந்தனையானது அனைவரையும் ஒருங்கு நோக்குந் தன்மை கொண்டது. சங்க காலத்தில் இடையறாது முன்னெடுக்கப்பட்ட போர்கள், அவற்றுக்காக முன்வைக்கப்பட்ட காரணங்கள், தமிழ்ச்சமூகம் கூறுபட்டுப் போன நிலை பூங்குன்றனார் போன்ற புலவர்களையும் வருத்தியிருக்கும் இவற்றின் பின்னணியில் அனைவரும் உறவுகளே என்னும் உணர்வை அழுத்தமாய் வெளிப்படுத்தும் காலத்தின் குரலாக இப்பாடல் வெளிப்பட்டிருக்க வேண்டும்.

குறுகிய குலமரபுகள் உடைந்து அரசு உருவாகும் போது அனைத்தையும் ஒருநிலைப் படுத்தும் தேவை உருவாகின்றது என்பர். 'ஒருநிலைப்படுத்தல்' என்பது அரசியல் மயப்பட்ட அதிகாரவர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒலிக்கப்பட்ட குரலா? அன்றி போரினால் துயருற்ற நிலையில் முரண்களற்ற பொதுமையைக் குறித்தெழுந்ததா? என்ற கேள்விகளுக்கு விடைகாணல் பிரதானமாகும்.

இன்றைய உலகமயமாக்கலின் விளைவாக வளர்ச்சியடைந்த நாடுகள் தமது நலன்களை முன் நிறுத்தி செயற்படும் வேளைகளில் 'தேவைக்கு மட்டும் இவ் ஒருமைப்பாடு பற்றிய கோஷத்தைக் கையாள்வதைக் காணமுடிகிறது. உலகில் நீண்ட வரலாற்றுப் பழமை கொண்ட இனங்களின் இருப்பை, அவை தம் அடையாளங்களைச் சிதைப்பதற்கும் கூட இவ்வாறான 'சர்வ தேசியம்சார்' கருத்துக்கள் பயன்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட மனித வாழ்வில் அதிகார உருவாக்கம் விரிவான வகையில் நிலை பெறும் போது போர்களற்ற உயர்ந்த புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் பாடலை புலவர் பாடியிருக்கக் கூடும் எனக் கருதுவது பொருத்தமானதாக உள்ளது. அதே வேளை இன்றைய சூழல் புறநிலைகள் ஊடாக அன்றைய நிலையை நோக்குவதில் உள்ள இடர்களையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.



வேதனைகள் மலிந்த சமூகத்தில் மனதை ஒருநிலைப் படுத்தி செம்மையாக வைத்துக்கொள்வதன் உளவியல் அறிகையை பூங்குன்றனார் தெளிவாக உணர்ந்துள்ளார். "தீதும் நன்றும் பிறர்தரவாரா" , " நோதலுந் தணிதலும் அவற்றோரன்ன " என்னும் பாடலடிகள் பிரச்சினைகளுக்கு ஏதோ ஒருவகையில் நாமே காரணம் என்பதையும், துன்பப்படுத்தலும் அது தீர்த்தலும் அவற்றை ஒத்தன என்று சுட்டியுள்ள பாங்கு சிந்திக்கத்தக்கது.

எப்பொழுதோ ஒருமுறை நிச்சயமாய் வரும் மரணத்திற்காக தினமும் எம்மைச் சிதைப்பது பொருத்தமற்றது. அதேவேளை

"வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே
முனிவின் இன்னா தென்றலு மிலமே"

எனும் அடிகளின் மூலம் வாழ்க்கையை இனியது என்று கொண்டாடும் இயல்பு அற்று, வெறுப்பு வந்த வேளை இன்னாதது என இருத்தலுமற்று வாழ்வோம் எனச்சுட்டியுள்ளார். பூங்குன்றனாரிடம் 'விதி' குறித்த நம்பிக்கையும் இருந்துள்ளது.

" கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் "

எனும் அடியில் வாழ்க்கையின் திசையைத் தீர்மானிப்பதில் மனித இயலுமைக்கு அப்பாற்பட்ட சக்தியின் சுழலைக் காட்டியுள்ள பாங்கு முக்கியத்துவம் உடையதாகும். கல்லை மோதி ஒலிக்கும் பேரியாற்றில் நீரின் போக்கிற்கு ஏற்ப நகரும் மிதவை போல உயிர்வாழ்வின் பயணம் அமையும் எனவே யாவற்றிலும் விதியின் பலமே பெரிது என ஆறுதலடையும் தன்மை இங்கு வெளிப்படுகிறது.

சங்க காலத்தின் பிற்பகுதியில் போரினூடாக சடுதியாக மேற்கிளம்பியவர்கள் தம்மை பெரியராக அடையாளப்படுத்திய போது நேர்மையான வழியில் நடந்தோர்க்கு அது பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆகவே அம் முரண்களிலிருந்து தேறுவதற்கு ஊழ் பற்றிய கருத்தியல் ஆறுதலைத் தந்திருக்கக் கூடும். வாழ்வு பற்றிய தெளிவிற்கு "திறவோர் காட்சியின் தெளிந்தனம்" எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். நன்மை தீமைகளின் வகையறிந்தோர் திறவோர் ஆவர். வாழ்க்கையை அதன் இயல்பான நிலையில் தன்னிலை இழக்காது அணுகுவதையே பூங்குன்றனார் விரும்பியுள்ளார். நெருக்கடியில் அமிழ்ந்து போகாதிருக்க விதி பற்றிய தெளிவு உதவும் என்பது பூங்குன்றனாரின் கொள்கை. சங்ககாலம் தமிழர்கள் தம் அடையாளங்களை தக்கவைத்த, வீரம் வெளிப்பட்ட தமிழ் வளர்ந்த காலம் எனினும் தொடர்ச்சியான போர்கள் வாழ்வின் இயல்பு நிலையை சிதைத்திருக்கும் என்பதை நாம் மனங்கொள்ள முடியும், கற்றறிந்த புலவர்கள் அரசுகளையும், நிலக்கிழார்களையும் புகழ்ந்து பாடினார்கள். ஆனால் இப்பண்பிலிருந்து பூங்குன்றனார் விலகியே நின்றுள்ளார். "பெரியவர்களை பாடி அன்றைய அரசியல் நெருக்கடியில் சிக்குவதை புலவர் விரும்பவில்லைப்போலும்.

"பெரியோரை வியத்தலும் இலம்
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

எனும் பாடல்கள் பூங்குன்றனாரின் உளநிலையைத் தெளிவாகக்காட்டுகின்றன.

இவ்வகையில், போர்கள் நிறைந்த சங்ககாலச் சமூகத்தில் அமைதியை அவாவிய குரலாய் தமிழர் தம் விழுமிய சிந்தனைகளின் வெளிப்பாட்டாய் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடல் அமைந்துள்ளது. தற்காலத்தில் அதிகாரப் போட்டிகள் வலுப்பெற்றுள்ள சூழலில் இனத்தாலும், மதத்தாலும் மொழியாலும் இன்னும் எத்தனையோ கூறுகளாலும். உலகம் சிதறுண்டுள்ள நிலையில் உலகிற்கு உண்மையான ஒற்றுமையை எடுத்துச் சொல்லும் மந்திரமாக கணியன் பூங்குன்றனாரின் பாடல் உள்ளது. துயரம் நிறைந்த இனத்தின் வரலாற்று இயங்கியலில் கண்டுவந்த பிரச்சினைகள், அவற்றைத் தாண்ட மேற்கொண்ட எத்தனங்களின் குறியீடாகவும் பூங்குன்றனாரின் பாடலைக் கொள்ள முடியும்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மூலிகைகளும் தொற்று நீக்கி மூலிகைகளும்

டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

மூலிகைகள் நோய் எதிர்ப்பு சக்தியை (Immutity Power) அதிகரிப்பதன் மூலம் நுண்ணங்கிகளுக்கு (Micro Organism) எதிராகத் தொழிற்படுவதுடன் வைரஸ்களுக்கு எதிராக (Antiviral ), பற்றீரியாக்களுக்கு எதிராக (Anti bacterial), பங்கஸ்களுக்கு எதிராகத் (Anti fungal) தொழிற்பட வைக்கின்றன. மூலிகைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் நுண்ணுயிர் கொல்லிகளாக, கிருமித் தொற்று நீக்கிகளாகத் (Anti septic) தொழிற்படுகின்றன. வேறு சில மூலிகைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் திண்குழியச் செய்கை ( Phagocytic Action), பிறபொருளெதிரி உருவாக்கம் (Anti body formation) ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதன் மூலம் நோய்க் கிருமிகளை அழிக்கின்றன.

வேம்பு, மஞ்சள், உள்ளி, சந்தனம், வெங்காயம், மரமஞ்சள், புங்கு, சாம்பிராணி, குங்கிலியம், பற்படாகம், மிளகு, வெற்றிலை, அறுகு, கோரை, கராம்பு, பனை, மருதோன்றி போன்ற மருத்துவத் தாவரங்கள் கிருமித் தொற்றுநீக்கி மூலிகைகளாக சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. பச்சிலை மூலிகைகள், கீரை, பழங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து தொற்று நோய் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கைப்புச் சுவையுள்ள உணவுகளும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகின்றன. நூறு வயது முதிர்ந்த வேப்பம் பட்டை, வேப்பங் கள் வைரஸ் மற்றும் மலேரியாக் கிருமிகளுக்கு எதிராகத் தொழிற்படும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. காய்கற்ப மூலிகைகள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதாகவும் ஆரோக்கியமாக வாழ உதவுவதாகவும் நீண்ட ஆயுளைக் கொடுப்பதாகவும் அமைந்திருக்கின்றன.





துளசியானது நோய் வராமல் தடுப்பதுடன், தொற்றுக் கிருமிகள் உடலைத் தாக்காமல் பாதுகாப்பதுடன் விஷஜந்துக்களை நெருங்க விடாமல் காக்கும் தன்மை கொண்டதுடன், நோய்நிலையானது தீவிர நிலை அடையாமல் பாதுகாக்கும் மூலிகையாக அமைகின்றது. துளசியின் 4,5 இலைகளை நாள்தோறும் தேனில் ஊறப்போட்டுச் சாப்பிட்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதுடன் வைரஸ் கிருமிகளுக்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தி சிறப்பாக அதிகரிப்பதோடு தடிமன், காய்ச்சல் போன்ற வைரஸ் கிருமித் தொற்றுக்கள் ஏற்படாமல் தடுக்கலாம். தடிமன், சளி ஏற்படும்போது துளசிச் சாற்றுடன் தேன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

வெற்றிலைச்சாற்றை தேனுடன் கலந்து இருமல், சளி, மூச்சு கஷ்டம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறும் சேர்த்து பயன்படுத்தும் பொழுது நுரையீரல் சார்ந்த நோய்கள் குணமாகும். வெற்றிலையில் எண்ணெய் தடவி அனலில் வாட்டி சிறு குழந்தையின் மார்பின்மேல் போடும் பொழுது மூச்சுக் கஷ்டம் தீரும். தூதுவளைச் சம்பல், மொசு மொசுக்கைச் சம்பல், இஞ்சிச் சம்பல் போன்றவற்றை உணவாகச் சாப்பிடும் போது சளித் தன்மை குறைவதைக் காணலாம். உள்ளியும் வெங்காயச் சாறும் சிறப்பான கிருமித்தொற்று மூலிகைகளாக இருப்பதுடன் சளி, இருமல் போன்ற சுவாசத் தொகுதி நோய்களை (Respiratory Disease) குணப்படுத்துவதாகவும் அமைகின்றது. மிளகைத் தூளாக்கி அதனுடன் கல்லாக்காரத் தூளையும் சேர்த்து சளி, இருமல், தடிமன், வைரஸ் நோய் நிலைகளில் பயன்படுத்தலாம்.

அரச பதிவு இலக்கம் -10,294
கிளவ் வீதி, தெல்லிப்பளை.

# ஆப்கான் எனும் மயான வலை

எல்றோய் அமலதாஸ்





ஆப்கானிஸ்தானில் அதிபர் மாளிகை. பக்ரீத் பண்டிகையையொட்டி சிறப்புத்தொழுகை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரம். அடுத்தடுத்து 3 ராக்கெட் குண்டுகள் அதிபர் மாளிகையின் எல்லைச் சுவருக்கு அருகில் விழுந்து வெடித் துச் சிதறின. செய்தியாளர்களது காணொளியில் சம்பவத்தின் நேரலை காட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தின.

**இன்றைய தேதியில் பல நாடுகளை அச்சம்கொள்ள வைக்கப் போகும் ஆப்கான் விவகாரம் இன்றைய உலக அரசியலோடு ஆராயப்படவேண்டியது.**

வேகமாக வெளியேறிக்கொண்டிருக்கும் அமெரிக்கப் படைகள், மாவட்டங்கள் பலவற்றைக் கைப்பற்றி முன்னேறிக்கொண்டிருக்கும் தலிபான் படைகள். ஏற்கனவே ஆப்கானிஸ்தானின் 85 சதவீதப் பகுதிகளை கைப்பற்றிவிட்டதாக தலிபான்கள் அண்மையில் அறிவித்தனர். தனது படைகளைத் திரும்பப் பெறுவது என்ற அமெரிக்காவின் முடிவு. ஆப்கான் தேசிய அரசை மட்டுமல்ல. ஒட்டுமொத்த உலகையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

## பௌதீக வரலாறு

ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு நாடு ஆகும். இது நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்டு தெற்கு ஆசியாவிற்கும் மத்திய ஆசியாவிற்கும் நடுவில் அமைந்துள்ளது. மத்திய கிழக்கு நாடாகவும், தெற்காசியாவின் நாடாகவும் நோக்கப்படுவதுண்டு. மேற்கே, ஈரானையும் தெற்கிலும் கிழக்கிலும் பாகிஸ்தானையும் வடக்கே துர்க்மெனித்தான், உஸ்பெகித்தான், தாஜிகிஸ்தான் என்ற நாடுகளையும் கிழக்கில் சீனாவை எல்லையாகக் கொண்டுள்ளது. பாகிஸ்தானுடனான இதன் எல்லையின் ஒரு பகுதி இந்தியாவால் உரிமை கோரப்படும் காஸ்மீர் ஊடாகச் செல்கிறது.

## சாம்ராஜ்யங்களின் மயான பூமி

இப்படி ஒரு அடைமொழியும் ஆப்கானிஸ்தானுக்கு உண்டு. இந்நாட்டின் அரசியலானது வரலாற்று ரீதியாகப் பல்வேறுபட்ட குழப்பங்கள் நிறைந்தது. 1747 முதல் 1973 வரை ஆப்கானிஸ்தான் ஒரு முடியாட்சி நாடாகவே இருந்தது. பல்வேறுபட்ட ஆட்சி அதிகார மாற்றங்களால் இராணுவ ஆட்சி, அரசாட்சி, குடியரசு, சமவுடைமை அரசு, ஆயுதக்குழுக்களின் கட்டுப்பாடுகள் என்று பல்வேறுபட்ட ஆட்சி முறைகளின் கீழ் இருந்துள்ளது.

## தலிபான்கள்

நாட்டில் மொத்தமுள்ள 400 மாவட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டதாக நிரூபிக்கமுடியாத சில கணிப்புகள் கூறுகின்றன. கடந்த வாரத் தொடக்கத்தில் கந்தஹாரை ஒட்டிய பாகிஸ்தானிய எல்லையைக் கடக்கும் போல்டக் என்ற பகுதியில் தலிபான்களின் கொடி பறக்கும் காட்சியை சமூக வலைத்தளங்களும் சில செய்தி ஊடகங்களும் பகிர்ந்திருந்தன.

கடந்த ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த டொனால்ட் ட்ரம்ப் தலிபான்களுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்குப் பிறகு நிலைமை இன்னும் மோசமடைந்தது. இந்த உடன்பாட்டின்படி அமெரிக்காவுடன் அதன் நேட்டோ தோழமைப் படைகளும் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற வேண்டும். தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வேறு எந்தப் பயங்கரவாத இயக்கத்துக்கும் தலிபான்கள் அனுமதி அளிக்கக் கூடாது என்பன உள்ளிட்ட நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஆனால் ஆப்கானிஸ்தானியப் படைகளுடன் சண்டையிடுவதை நிறுத்துவதற்கு தலிபான்கள் ஒப்புக்கொள்ளவில்லை.
ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கப் படைகளை அனுப்பும் திட்டத்தைத் தொடங்கிய முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபுள்யூ புஷ்ஷும் இதே அச்சத்தை வெளிப்படுத்துகிறார். விளைவுகள் “நம்பமுடியாத அளவுக்கு மோசமாக” இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

தலிபான்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டாலும், கடந்த இருபது ஆண்டுகளில் பல்வேறு தாக்குதல்கள் மூலம் தங்களது இருப்பை உணர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

***

‘இது வெல்ல முடியாத போர்’ ஆப்கானிஸ்தான் போர் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்த கருத்து இது. இதுவரை அமெரிக்க தரப்பில் 2400ற்கு மேற்பட்ட வீரர்கள் பலியாகியுள்ளனர். 3 லட்சம் வீரர்களைக் கொண்ட ஆப்கான் படைகள் ஆண்டொன்றுக்கு 8000 உயிரிழப்புக்களை எதிர்கொள்கின்றார்கள். மற்றும் 71000 க்கும் மேலான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக்காலம் முதலே ஆப்கானிஸ்தானில், அமெரிக்க படைகளைத் திரும்பப் பெறப்பட்டு வருகின்றன. அதையே பின்பற்றி முற்றாக படைகளை செப்டெம்பர் 11க்குள் வெளியேற்றுவதற்காகத் தற்போதைய ஜோ பைடன் நிர்வாகமும் தொடர்கின்றது.

## ஆப்கானிஸ்தான் 40 ஆண்டு காலத்தில் கடந்து வந்த பாதையின் முக்கிய நிகழ்வுகளின் சுருக்கம்

*1980:* பாகிஸ்தான் சர்வாதிகாரி முகமது ஜியா உல் ஹக் மூலம் பண உதவியும், ஆயுத உதவியும் அமெரிக்க சி.ஐ.ஏ ஆப்கானிஸ்தானுக்கு வழங்கியது.

*1983:* அமெரிக்க அதிபர் றொனால்ட் ரீகன், ஆப்கானிஸ்தான் முஜாகிதீன் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்துப் பேசினார்.

*1986:* ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்களுக்கு தேவையான ஆயுதங்களையும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வழங்கியது. சோவியத் யூனியனுடன் பேச்சு வார்த்தை தீவிரமானது.

*1987:* ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் தலைவர் நஜிபுல்லா தேசிய மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டுவந்து, முஜாகிதீன்களை புதிய அரசில் பங்கேற்க அழைத்தார். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர்.

*1992:* (ஏப்ர) முஜாகிதீன் படையினர் காபுலுக்குள் புகுந்து நஜ்புல்லாவை விடுவித்தனர். ஆனால் விமான நிலையம் வரும்போது அவர் சிறைபிடிக்கப்பட்டு ஐ.நா. முகாமில் தங்கவைக்கப்பட்டார்.

*1994-* முஜாகிதினின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் சேர்ந்து தெற்கு காந்தகாரில் தலிபான் படையினராக உருவெடுத்தார்கள்

*2001-மார்ச்:* பாமியன் மாகாணத்தில் இருந்த மிகப்பெரிய புத்தர் சிலையை உடைத்தனர். இது உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

*2001-செப்-* பில்டேனை ஒப்படைக்குமாறு முல்லா ஓமருக்கு அமெரிக்க இறுதி கெடு விதித்தது.

*2001 அக்டோபர் 7:* அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்த தலிபான்கள் மற்றும் அல்-கய்தா முகாம்கள் மீது முதல் முறையாக வான் வெளித் தாக்குதலைத் தொடங்கின. காபூல், காந்தஹார், உள்ளிட்ட இடங்கள் தாக்கப்பட்டன. பின் லேடனை ஒப்படைக்க தலிபான்கள் மறுத்தனர்.

*2001 நவம்பர் 13:* மேற்கு நாடுகளின் ஆதரவுடன் தாலிபன்களுக்கு எதிரான படைகள் காபூலைக் கைப்பற்றின. தலிபான்கள் காபூலை விட்டு வெளியேறினர்.

*2001-டிச 7-* காந்தகாரில் இருந்து முல்லா ஓமர் விலகிச் சென்றபின், தலிபான் ஆட்சி சீர்குலையத் தொடங்கியது.

*2006 மே:* ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் மாகாணத்தில் தாலிபன்களுக்கு எதிரான போரில் பிரிட்டிஷ் படை களமிறங்கியது.

*2009 பெப்ரவரி 17:* ஒபாமா அமெரிக்க அதிபரான பிறகு ஆப்கானிஸ்தானில் படைகளை அதிகரிக்க உத்தரவிட்டார். ஒரு கட்டத்தில் 1.4 லட்சம் வீரர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்தனர்.

*2011 -மே 2:* பாகிஸ்தானின் அபோட்டாபாத் நகரில் ஒசாமா பின் லேடன் அமெரிக்க நேவி சீல் படையின் ரகசிய தாக்குதலில் கொல்லப்பட்டார்.

*2013 ஏப்ரல் 23:* தலிபான்கள் இயக்கத்தை நிறுவிய முல்லா முகமது ஓமர் மரணமடைந்தார். ஆப்கன் உளவுத்துறை தகவலின் அடிப்படையில், அவர் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்ததாகத் தெரியவந்தது.

*2014-ஏப்.5 :* ஆப்கானிஸ்தானில் நடந்த தேர்தலில் அஸ்ரப் கானி, அப்துல்லா இருவரும் வெற்றி பெற்றவர்களா அறிவிக்கப்பட்டனர். அதன்பின் அதிகாரப்பகிர்வு அடிப்படையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி பேச்சுவார்த்தையில் அஷ்ரப் கானி அதிபராகவும், அப்துல்லா தலைமை நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டனர்.

*2014 -டிசம்பர் 28:* நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் தங்களது நடவடிக்கைகளை முடித்துக் கொண்டன. அமெரிக்காவும் தங்களது படைகளை வெகுவாகக் குறைக்கத் தொடங்கியது.

*2015-201:* தலிபான்கள் மீண்டும் வலிமையாக உருவெடுத்து, நாள்தோறும் ஆப்கன் அரசுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் எதிராகத் தாக்குதல் நடத்தினர். கிழக்குப்பகுதியில் ஐஎஸ் தீவிரவாதிகள் ஆதிக்கம் உருவாகியது, தலிபான்கள் பாதிக்கும் மேற்பட்ட நாட்டை கைப்பற்றினர்.

*2018- செப்.:-* அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறும் வகையில் தலிபான்களுடன் பேச்சு நடத்த அமெரிக்க அதிகாரி ஜல்மே கலிஜாத்தை நியமித்தார்.

*2019 - செப்.:* ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடத்தப்பட்டு பலமாதங்கள் முடிவு அறிவிக்கப்படவில்லை.

*2019 நவம் 2:* ஆப்கானிஸ்தான் சென்று அமெரிக்கப் படைகளை அதிபர் ட்ரம்ப் பார்வையிட்டார். தலிபான்களுடன் அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சை அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

*2020, பிப்18-:* ஆப்கானிஸ்தான் தேர்தலில் அஷ்ரப் கானி வெற்றி பெற்றதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் அப்துல்லா தேர்தல் முடிவை ஏற்க மறுத்துவிட்டார்.

*2020 பிப்ரவரி 29:* அமெரிக்காவும் நேட்டோ கூட்டுப் படைகளும் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவதற்கு தாலிபன்களுடன் உடன்பாடு செய்து கொண்டன.

*2021 செப்டம்பர் 11:* அமெரிக்காவில் தாக்குதல் நடத்தப்பட்டு சரியாக 20 ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாளில் அமெரிக்கப் படைகளை முழுமையாக விலக்கிக் கொள்வதற்கு நாள் குறிக்கப்பட்டது.

*2020, பிப்29:* அமெரிக்கா, தலிபான் இடையே கத்தார் தலைநகர் தோஹாவில் அமைதி ஒப்பந்தம் கையொப்பமானது. அமெரிக்கப் படைகள் அடுத்த 14 மாதங்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற முடிவு செய்யப்பட்டது.

***

தொடரும் இந்த உள்நாட்டு போரால் இப்போது பெருமெடுப்பிலான அகதிகள் தலைநகர் காபூலை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள். எல்லையோர மாவட்டங்களை சேர்ந்த பெரும்பாலான ஆப்கான் மக்களுக்கும் தத்தமது அருகிலிருக்கும் நாடுகளை நோக்கி அடைக்கலம் கோருகின்றார்கள். ஆட்சி குழப்பம் ஏற்பட்டு ஆப்கான் நிர்வாக அரசு தப்பி ஓடிவிடும், ஆப்கான் அரசு படைகள் கலைந்துவிடும் என்று தலிபான்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

பிற நாடுகளில் அமெரிக்கா தலையிடும் போதெல்லாம் தனது இலக்கை முழுமையாக அடையாமல் தோல்வியுடன் திரும்பியது என்பதுதான் வரலாறு. வியட்நாம், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்க முன்மொழிந்த இராணுவ முயற்சிகள் அரைகுறையாக முடிந்தன என்பதை உலகறியும். அதுபோல் இதுவரை ஆப்கானில் நல்லாட்சியும், அமைதியும் முழுமையாக திரும்பவில்லை. ஆப்கான் தேசிய இராணுவத்தையும் அமெரிக்கா முழுமையாக நம்பவில்லை. அமெரிக்கப் படைகளின் இந்த திடீர் வெளியேற்றம் அரைகுறையாக இருந்தாலும் ஆப்கானிஸ்தானின் எல்லைநாடுகளை அச்சம்கொள்ள வைத்திருக்கின்றது. மேலும் ரஷ்யா, பாக்கிஸ்தான், துருக்கி, இந்தியா போன்ற நாடுகளுக்கும் கடந்த காலத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு வெளியுறவு வியூகங்களுக்கான தேவை எழுந்திருக்கிறது. இதை மத்திய ஆசியாவை மையப்படுத்திய இராஜதந்திரமாகவும் அமெரிக்கா இனி கையாளலாம். அதற்காக நேற்றைய எதிரிகளாக தலிபான்களுடன் அவர்கள் புதிய நட்பு கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் ஆப்கான் வெற்றிடத்தை எதிர்நோக்கி எல்லைவிரிவாக்க வேட்கையில் கால்பதிக்க காத்திருக்கும் சீனாவுக்கு விரிக்கப்பட்ட வலையாகவும் அமெரிக்க படைகளின் வெளியேற்றம் இருக்கக்கூடும். சீனாவின் வடமேற்கில் உள்ள ஜின்ஜியாங் மாகாணப் பகுதியில் வசிக்கும் உய்குர் மக்களின் விவகாரங்களை கையாளுவதற்கான புதிய உத்தியாக ஒரு விடயத்தை ஊகிக்க முடிகின்றது. காரணம் காபூல் விமான நிலைய பாதுகாப்பை துருக்கி பொறுப்பேற்றுக்கொண்டதும் அங்கு பாதுகாப்புக்காக தெரிவு செய்யப்பட்ட துருக்கியின் வாடகை இராணுவங்களின் தொடர்புகளை ஆராயும்போது சந்தேகம் வலுக்கின்றது. மேலும் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு நடத்திய உரையாடலில் உய்குர் முஸ்லிம்களின் பின்னணியில் இயங்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கு உதவுவதை நிறுத்திக்கொள்ளுமாறு சீனா கேட்டுக்கொண்டதாகவும் தெரிகிறது. இதிலிருந்து வரப்போகும் சிக்கல் நிலைமைகளையும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எதுவாகினும் ஆக்கிரமிப்புக்கும், அதிகார வேட்கைக்கும் இந்த நாட்டு மக்கள் தங்கள் அமைதியையும், உயிரையும் அதிகமாக தியாகம் செய்துள்ளார்கள். பயங்கரவாதத்தாலும் பிரிவினைவாதங்களாலும் அண்டை நாடுகள் அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து இனக் குழுக்களின் நலன்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டு பதற்றமற்ற அமைதியான ஆப்கானிஸ்தான் தேசமே அமைதியை விரும்புபவர்களின் தேவையாக உள்ளது.

# நிவாரணக் கலாசாரமல்ல

"சொந்தக் காணி இல்லாவிட்டால் அரசாங்கத்தினது வீட்டுத் திட்டமும் கிடையாது. ஏனைய வாழ்வாதாரங்களும் கேள்விக்குறி தான். இதனால் நிவாரணக் கலாச்சாரத்தில் தங்கி இருப்பதனைத் தடுக்க முடியாது. நாளாந்தக் கூலி உழைப்பில் தங்கி இருக்கும் மக்கள் கூலி வருமானம் வராத போது நிவாரணக் கலாச்சாரத்தில் தங்கி இருப்பதனைத் தவிர்க்க முடியாது."



வேதநாயகம் தபேந்திரன்

சொந்தக் காணி இல்லாவிட்டால் அரசாங்கத்தினது வீட்டுத் திட்டமும் கிடையாது. ஏனைய வாழ்வாதாரங்களும் கேள்விக்குறி தான். இதனால் நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதனைத் தடுக்க முடியாது. நாளாந்தக் கூலி உழைப்பில் தங்கி இருக்கும் மக்கள் கூலி வருமானம் வராத போது நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதனைத் தவிர்க்க முடியாது



தாயகத்தில் வாழும் வறிய மக்களுக்கு நாம் நிவாரணக் கலாசாரத்தையல்ல உற்பத்தித் திறன் கலாசாரத்தை வழங்கவே விரும்புகின்றோம்.

புலம் பெயர் தேசங்களில் வாழும் கொடையாளிகளில் ஒரு சாராரின் கருத்து இது. இந்தக் கருத்தை வரவேற்கின்றோம். ஆனால் நிவாரணக் கலாச்சாரத்தை நம்பி வாழும் நிலைக்குரிய காரணங்களையும் ஆராய வேண்டும்.

இந்த நிவாரணக் கலாசாரம் தொடர்பாகவும் உற்பத்தித் திறன் கலாசாரம் தொடர்பாகவும் எமக்குத் தெளிவு தேவை.

நிவாரணக் கலாசாரம் ஏன் வந்தது? உற்பத்தித் திறன் கலாசாரம் ஏன் தோல்வியடைகிறது?

உணவு, உடுதுணி, இருப்பிடம், கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத மக்கள் கூட்டம் நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதை யாரும் தடுக்க முடியாது. அது போல போரில் அனைத்தையும் இழந்த மக்கள் கூட்டம் நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதனைத் தவிர்க்க முடியாது.

அதே வேளை உற்பத்தித் திறன்மிக்க மக்கள் கூட்டமாக மாற மாட்டோம். எவ்வளவு உதவிகள் தந்தாலும் நாம் அசையவே மாட்டோம். தருவதைச் சாப்பிட்டபடியே நாம் நிவாரணக் கலாசாரத்தில் தான் இருப்போம் எனப் பிடிவாதம் பிடிப்போரை யாருமே திருத்த முடியாது.

தமது உறவுகள் கஸ்டப்படக் கூடாதெனப் புலம்பெயர் தேசங்களின் கொடும் குளிருக்கு மத்தியில் தம்மை உருக்கித் தமது தேவைகளைத் தியாகம் செய்து உழைத்துத் தாயகத்திற்குப் பணம் அனுப்புவோர் பலர். அவர்களது மாதாந்த பண அனுப்புதல்களைப் பெற்று எந்தவித உழைப்புக்கும் பிழைப்புக்கும் போகாது சோம்பேறியாக இருக்கும் குடும்பங்களும் உள்ளன.

உற்பத்தித் திறனை அதிகரிக்கவென புலம்பெயர் தேசங்களிலிருந்து உறவுகள் அனுப்பும் பணம், பொருள்கள் ஒரு வகை. தாயகத்தில் இயங்கும் உள்ளூர், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கவென வழங்கும் பொருள்கள், பணங்கள் இன்னொரு வகை.

உற்பத்தித் திறனை அதிகரிக்க தரும் உதவிகளைத் துஸ்பிரயோகம் செய்து "இந்த நிறுவனம் போனால் இன்னொரு நிறுவனம் வருமெனத் திமிராகக் கதைக்கும் மக்களும் உள்ளனர்.

சொந்தமாக நிலம் உள்ள ஒரு மக்கள் கூட்டம் தான் தமது திறமைகளால் உயர்ந்து கொள்வார்கள். இது அனுபவம் கற்றுத் தந்த பாடம். ஆனால் இன்று சொந்தமாக நிலம் உள்ள போதும் சோம்பேறிகளாக வாழ்பவர்களும் அதிகரித்து வருகின்றனர்.

இஸ்ரேலிய யூதர்களைப் பாருங்கள். இரண்டாயிரம் வருடங்களாகப் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உள்ளாகிப் பல மில்லியன் மக்களைப் பலிகொடுத்தனர். தமக்கென தமது ஆண்டவரால் வாக்களிக்கப்பட்ட பூமி மேற்காசியா எனப்பட்ட மத்திய கிழக்கில் உள்ளது. அதை நோக்கி நாம் போவோம்.

அது எங்கள் தாயக மண். அங்கு நாம் எமக்கான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவோம். முன்னேறுவோம் எனக் கருத்துகளை விதைத்தனர். நில வங்கியை உருவாக்கிப் பணம் தேடினர்.

1948 மே 14 ஆம் திகதி அதன் அறுவடையைக் கண்டனர். ஆனால் அப்பாவி பலஸ்தீன மக்களும் அருகிலுள்ள அரபு நாடுகளின் மக்களும் இவர்களால் பாதிக்கப்பட்டது பின்னைய துன்பியல் வரலாறு.



சொந்த நிலமற்ற மக்கள் கூட்டம் தான் நிவாரணக் கலாசாரத்தில் கையேந்தி நிற்க வேண்டியுள்ளது.

வெளிநாட்டுக் காசு உள்நாட்டுக் காணிகளின் விலையை பல மடங்கு உயர்த்தி வருகின்றது. காணி வீட்டுடன் இருந்த பலமான மத்தியதர வர்க்கமும் வாடகை வீட்டுக் கலாசாரத்தினுள் ஆளும் காலம் வந்து விட்டது.

சொந்தக் காணி இல்லாவிட்டால் அரசாங்கத்தினது வீட்டுத் திட்டமும் கிடையாது. ஏனைய வாழ்வாதாரங்களும் கேள்விக்குறி தான். இதனால் நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதனைத் தடுக்க முடியாது. நாளாந்தக் கூலி உழைப்பில் தங்கி இருக்கும் மக்கள் கூலி வருமானம் வராத போது நிவாரணக் கலாசாரத்தில் தங்கி இருப்பதனைத் தவிர்க்க முடியாது. இதற்கு மிக நல்ல உதாரணம் கொவிட் 19 பெருந்தொற்றுத் தடுப்புக்காக ஊரடங்குச் சட்டம், நடமாடத் தடை விதிக்கப்பட்ட காலங்களில் கூலித் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கிய கஸ்டங்களைக் கூறலாம்.

வளர்ந்த நாடுகளைப் போல சமூக பொருளாதாரக் காப்புறுதித் திட்டங்கள் சரிவர நடைமுறைப்படுத்தப்பட்டால் வருமானமற்ற நாள்களிலும் சமூக நலன் புரிக் கொடுப்பனவுகள் மூலமாகச் சிறப்பான ஒரு வாழ்க்கைத் தரத்தை அடையலாம்.

வன்னிப் பெரு நிலப்பரப்பையும், கிழக்கு மாகாணத்தின் உற்புறங்களையும் எடுத்து நோக்கினால் கணிசமானோர் உற்பத்தித் திறன்மிக்க சமூகமாக

மேலுயர்வதற்கான தடைகள் பல உண்டு. ஏன் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நிலமற்ற பரம்பரை வறுமைக்குள் வாழும் - வாடும் குடும்பங்கள் பல உள்ளன. இவர்களைப் பண்பாட்டு ரீதியாக, கல்வி ரீதியாக மேலுயர்த்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் இதுவரையில் இல்லாதது கசப்பான உண்மை தான்.

வாழ்வாதாரத்திற்கென்று அரச, அரச சார்பற்ற அமைப்புகளால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் 30 000 ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபா வரையில் மட்டுமே உள்ளன. இது போன்ற நுண்பாகக் கருத் திட்டங்களால் சரியான முறையில் தொழிலைச் செய்ய முடியாமல் இடர்படுகின்றனர். அது மட்டுமல்ல முறையான தொழிற்பயிற்சி இன்றி அவர்களால் தொழில்களை வெற்றிகரமாக நடத்த முடியாதுள்ளது.

பயனாளிகள் தெரிவில் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யாதமையும் பெரும் குறைபாடாக உள்ளது. பலவகைத் தலையீடுகளும், திறமையற்ற திட்ட நடைமுறைப்படுத்துவோரும் இதற்குக் காரணமாகும்.

வாழ்வாதாரத்தின் மூலமாக செய்யப்படும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்திப் பணம் உழைப்பதிலும் பல கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர். தென் பகுதியிலிருந்து மலிவு விலையில் தரமானதாக வரும் பொருள்களுடன் போட்டி போட முடியாமல் சீரழிகின்றனர்.

புலம் பெயர் தேசங்களில் உள்ள இலங்கை மக்களில் மிகப் பெரும்பான்மையினராக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தோரே உள்ளனர். இவர்களில் கணிசமானோரிடம் ஒரு குற்ற உணர்வு உண்டு. போரினால் உயிரிழப்பைச் சந்திக்காமலே நாம் புலம் பெயர்ந்து விட்டோம். அதனால் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் ஏதாவது உதவிகள் செய்ய வேண்டும் என நினைக்கின்றனர். நேரடியாகப் பணத்தைக் கொடுக்கின்றனர். அல்லது தாம் நம்பும் ஒருவருக்குப் பணத்தைக் கொடுத்து உதவிகளைச் செய்ய முற்படுகின்றனர். இந்த நினைப்பு வராமல் நாட்டுக்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென நினைப்போரும் உள்ளனர்.

தாயகத்தில் வாழ்வாதார உதவித் திட்டங்களைச் செய்வோரில் ஒரு பகுதியினர் மிகவும் நேர்த்தியாகச் செய்கின்றனர். இன்னொரு பகுதியினர் நுள்ளுப் பிறாண்டி கிள்ளுப் பிறாண்டி வேலைகள் செய்து கொடுப்பார்கள். இதனைச் சாட்டி வயிறு வளர்க்கும் ஒரு பகுதியினரும் உள்ளனர்.

போர் முடிந்து 12 வருடங்களைக் கடந்தும் தாயகத்திலுள்ள நலிவுற்ற மக்களை உற்பத்தித் திறன்மிக்கவர்களாக மாற்றுவதற்கு மிகச் சிறந்த திட்டமிடல்களோ நடைமுறைப்படுத்தல்களோ இதுவரை இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். ■

இ.சு.முரளிதரன்



# ஒட்டு மீசை

பறை மிடுக்காக ஒலித்துக் கொண்டிருக்கப் பிரேதப் பெட்டியைச் சுமந்தபடி அந்திம சேவை வாகனம் மெதுவாக ஊர்ந்தது. வாகனத்தின் முன்னாலே போய்க்கொண்டிருந்த செம்பன் பாதையின் இருமருங்கும் எள்ளை விசிறியபடியே சென்றான். பஞ்சமி தினத்திலே இறந்தவர்கள் ஆவியாக வந்து பலி எடுப்பார்கள் என்பது எங்களூரின் ஐதீகம்!
சுடுகாட்டிலிருந்து ஊர்நோக்கி வருகின்ற ஆவி, வழியிலிருக்கும் எள்ளைப் பொறுக்கிக் கொண்டுதான் வரவேண்டும். இல்லையேல் காவு வாங்கும் சக்தி கிட்டாது. ஆவி உலகில் இச்சட்டத்தினை நிறைவேற்றிய மேதாவி யாரென்பதை நானறியேன். இதைக் குறித்துப் பெரியவர்களிடம் கேட்டால் "ரொம்பப் படிச்ச திமிரா?" என்று கோபப்படுவார்கள். ஆவி பாதையெங்கும் விசிறப்பட்ட எள்ளை மொத்தமாகப் பொறுக்கி எடுப்பதற்குள் அந்தியேட்டிக் கிரியையினைச் செய்து, இறந்த வரின் ஆத்மாவைச் சாந்தியாக்கி விடுவார்கள். பலி எடுப்பதைத் தடுக்கவே எள்ளுத்தூவல்.

பஞ்சமியில் இறந்தோர் இதையும் மீறி ஓரிரு வரைப் பலியெடுத்த சம்பவங்களும் உண்டு. இறந்தவரின் உறவினர் ஒருமாத காலத்துள் இறந்தால் பஞ்சமிச் சாவு காவு வாங்கியதாகவே ஊரார் நம்புவார்கள். ஒருவேளை எள்பொறுக்கும் எந்திரமோ புதிய நுட்பமோ அந்த ஆவிகளுக்குக் கிடைத்திருக்கலாம். அத்தகைய ஆவிகள், ஆவி உலகிலே 'பெரும் பொறுக்கியாக' கொண்டாடப்படவும் வாய்ப்புள்ளதாக எனக்குத் தோன்றுவதுண்டு. கறுப்புக்காரில் வைக்கப்பட்டுள்ள பிரேதப் பெட்டியில் கிடத்தப் பட்டிருக்கும் கந்தப்புத் தாத்தா யாரையும் காவு வாங்க மாட்டார் என உறுதியாக நம்பலாம். இந்த நம்பிக்கையினையும் மீறிப் பஞ்சமிப் பலியெடுப்பதாக இருப்பின், எள்ளை முழுமையாகப் பொறுக்கிக் கொண்டு அவர் என் வீட்டைத் தேடித்தான் வரவேண்டும்.

****

அந்த ஒட்டு மீசையை விரல்களால் தடவிப் பார்த்தேன். எனது ஸ்பரிசத்திற்காகக் காத்திருப்பது போலவே தோன்றியது. கவனமாகக் கையிலே எடுத்து மேலுதட்டுக்கும் மூக்கிற்கும் இடையிலே வைத்தேன். ஏதோவொரு கம்பீரத்தைத் தருவது போன்ற உணர்வு துளிர் விட்டது. கண்ணாடியைப் பார்த்தேன். சிரித்தேன். எனது சிரிப்புப் போதுமானதாக இல்லாததால் மீண்டும் சற்றுப் பலமாக ராஜ சிரிப்பொன்றினை உதிர்த்தேன். திருப்தியாக இருந்தது.

"அடேய்! எத்தன தடவதான் அத வச்சுப் பார்ப்பாய்! இருந்த இடத்தில வச்சிட்டு இஞ்சால வா குட்டி"

கந்தப்புத் தாத்தாவின் பேச்சினை நான் காதிலே வாங்கவில்லை. ஒட்டு மீசையின் உரோமங்களை மறுபடியும் தடவினேன். உயிருள்ள பிராணி போலவே எனக்குத் தோன்றியது. திரும்பவும் மூக்கின் கீழே வைத்துப் பார்த்தேன். எனக்குச் சலிப்பதாக இல்லை. ஒட்டு மீசை என்னைப் பெரிய மனிதனாய் மாற்றியதை உணர்ந்தேன். என்னைப் பொறுத்த வரையில் மீசை வெற்றியின் அடையாளம். அம்மன் கோவிலில் நடைபெற்ற கூத்துக்களில் மீசை வைத்திருந்தவர்களே வெற்றி பெற்றார்கள். கூத்தில் நடிப்பவர்களுக்குக் கந்தப்புத் தாத்தா ஒப்பனை செய்யும்போது அவர்கள் சாதாரணமாகவே இருப்பார்கள். இறுதியாக இந்த மீசையை ஒட்டியதும் வீர பராக்கிரம ராஜாவாக மாறி விடுவார்கள்.

கந்தப்புத் தாத்தா வீட்டுக்கு நான் அடிக்கடி வருவதற்கு இந்த ஒட்டு மீசை தான் காரணம். இதுதான் என்னை இழுத்து வருகிறது.

அப்பாவை நான் மீசையோடு பார்த்ததில்லை. பெரும்பாலும் ஒன்று விட்ட ஒரு நாளிலே மழித்து விடுவார்."அப்பா...! கந்தப்புத் தாத்தாவிடம் உங்களுக்கு ஒரு ஒட்டு மீசை வாங்கித் தரவா?" என்று கேட்ட போது சிரித்தபடியே என்னைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினார். கன்னத்தைக் கிள்ளி விட்டுப் பதிலேதும் சொல்லாமல் போய்விட்டார். நான் "ஸ்கொலசிப்"சோதனை "பாஸ்" பண்ணிய நாளில்,

"செல்லத்துக்கு என்ன வேணும்? அம்மா வாங்கித் தாறன்"

"எனக்கு ஒரு மீசை வேணும்"

அம்மா பலமாகச் சிரித்தார். அதைச் சீரியஸாகவே எடுக்கவில்லை. அன்றிலிருந்து மீசை பற்றி நான் யாரிடமும் கதைப்பதில்லை.

**"கந்தப்புத் தாத்தாவின் வீட்டில் ஏகப் பட்ட பொருள்கள் உள்ளன. வாள், வில், அம்பு, சூலம், கதாயுதம், சதங் கைத் தொகுதி ஒரு புறமும் வர்ண மணிகளாலும் வட்டக் கண்ணாடித் துண்டுகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஆடைகள் மறுபுறமும் கிரீடம், தோடுகள், ஒட்டியாணம், ஏகாவடம், கைப்புஜம், தலை மயிர்த் தொகுதி, முகமூடிகள் இன்னொரு புறமும் அடுக்கப்பட்டிருக்கும். எவ்வளவு பொருள்கள் இருந்தாலும் என் கால் கள் எப்போதும் மீசை வைக்கப்பட் டிருக்கும் இடத்தை நோக்கியே செல் லும். கந்தப்புத் தாத்தா ஒப்பனை செய்கின்ற அழகைப் பார்க்க ஆசை யாக இருக்கும். அப்பாவித்தனமான முகங்களை, அவர் எப்படியெல்லாம் மாற்றி விடுவார்."**

கந்தப்புத் தாத்தாவின் வீட்டில் ஏகப்பட்ட பொருள்கள் உள்ளன. வாள், வில், அம்பு, சூலம், கதாயுதம், சதங்கைத் தொகுதி ஒரு புறமும் வர்ணமணிகளாலும் வட்டக் கண்ணாடித் துண்டுகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஆடைகள் மறுபுறமும் கிரீடம், தோடுகள், ஒட்டியாணம், ஏகாவடம், கைப்புஜம், தலை மயிர்த் தொகுதி, முகமூடிகள் இன்னொரு புறமும் அடுக்கப்பட்டிருக்கும். எவ்வளவு பொருள்கள் இருந்தாலும் என் கால்கள் எப்போதும் மீசை வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கியே செல்லும். கந்தப்புத் தாத்தா ஒப்பனை செய்கின்ற அழகைப் பார்க்க ஆசையாக இருக்கும். அப்பாவித்தனமான முகங்களை, அவர் எப்படியெல்லாம் மாற்றி விடுவார்.

ஒப்பனை செய்வதற்கு முன்னர், கூத்துப் பழக்கும் வேலப்பன் தாத்தாவின் கால்களில் எல்லோரும் விழுந்து வணங்குவார்கள். அவரிடம் திருநீறு பெற்று நெற்றியிலே பூசிக் கொள்வார்கள். அதற்குப் பிறகுதான் கந்தப்புத் தாத்தா ஒப்பனை செய்யத் தொடங்குவார்.

"அது என்ன தாத்தா"

"ஆமணக்கு எண்ணை"

"இது"

"முத்து வெள்ளை"

கந்தப்புத் தாத்தா முத்து வெள்ளையோடு குங்குமத்தைக் கலப்பார். ஒவ்வொரு முறையும் கண்ணை மூடி "கடவுளே கலவை பிழைக்கக் கூடாது" என்று வேண்டிக் கொள்வார். அது ரோசாப்பூ நிறத்திலே வரும் பார்க்க ஆசையாக இருக்கும்.!

அன்று அம்மன் கோயிலில் நடந்த கூத்து எனக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. மீசையற்றவர்கள் பயந்தவர்கள். தோல்வியாளர்கள், மீசையின்றி வெற்றி பெற முடியாது என்று நினைத்தே கந்தப்புத் தாத்தாவின் வீட்டிலே மீசையினை அடிக்கடி எடுத்து ஒட்டி விளையாடுவேன். பார்வையினைப் புரிந்து கொண்டே தானம் செய்து விடும் பக்குவம் கர்ணனுக்கு இருந்ததாம்! கர்ணவேடம் ஏற்றுப் பலமுறை நடித்த கந்தப்புத் தாத்தாவிடம் அந்தப் பக்குவம் இருந்திருந்தால் அவர் வீட்டில் வைத்திருந்த மீசைகளில் ஒன்று காணாமற் போயிருக்காது. இன்றைய கூத்தினை நான் முன்பே பார்த்திருந்தாலும் அச்சம்பவம் நிகழ்ந்திருக்காது. மேடையிலே பெரிய மீசை வைத்திருந்த சூரன் தோல்வியடைந்தான். மீசையே இல்லாத முருகன் வெற்றி கண்டு கலகலவென்று சிரித்தான். சீட்டுக்கட்டுக் கோபுரம் காற்று வீசத் தரையிலே வீழ்வதைப் போல நான் மீசை குறித்துக் கட்டிய கோட்டையும் நொருங்கி வீழ்ந்தது. அந்த ஒட்டு மீசையைத் திரும்பவும் கந்தப்புத் தாத்தாவின் வீட்டிலே கொண்டு சென்று வைத்து விட வேண்டும் என எண்ணினேன். வருடங்கள் பல கடந்து விட்டன. ஆனாலும் நான் மீசையைக் கொண்டு சென்று வைக்கவேயில்லை.

****

சுடலையில் விறகு அடுக்குகளின் மீது கந்தப்புத் தத்தாவின் உடலைக் கிடத்தியிருந்தார்கள். ஒவ்வொருவராக வாய்க்கரிசியினைப் போட்டுக் காலைத் தொட்டு வணங்கிவிட்டு நகர்ந்தனர். சிலர் மாலை போட்டு வணங்கினர். ஓலைப் பெட்டியிலிருந்த வாய்க்கரிசியினை எடுத்தேன். விழிகளை ஒரு தரம் மூடினேன். பின்பு கந்தப்புத் தாத்தாவின் வாயிலே போட்டேன். "ஜீன்ஸ் பொக்கேற்றுக்குள்" கையை விட்டு அதை மெதுவாக எடுத்தேன். கந்தப்புத் தாத்தாவின் காலைத் தொட்டுக் கும்பிடும் போது கை நழுவ விட்டேன். ஒட்டு மீசை விறகுகளின் இடுக்கிலே விழுந்தது.

சுடலையை விட்டுப் புறப்படும் போது திரும்பிப் பார்த்தேன். கந்தப்புத் தாத்தாவின் சிதை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. ■

# பசிலின் நகர்வுகளும் தமிழ் மக்களும்

சி.அ.யோதிலிங்கம்

> இன்று நெகிழ்ச்சியாக நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. பசிலும் இவ்வாறே செயற்படப்போகிறார் எனத் தெரிகிறது. இந்த இடத்தில் தமிழ்த்தரப்பு எவ்வாறு நடந்து கொள்ளலாம்? கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கலாம்? என்பது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.



பசில் ராஜபக்ஷவின் வருகையோடு தென்னிலங்கை அரசியலில் பரபரப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. அவர் அமெரிக்காவிலிருந்து வந்து தனிமைப்படுத்தல் கடமையை முடித்தவுடன், பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

அரசுக்கு இத்தனை காலமும் இனவாத முகம்தான் இருந்து வந்துள்ளது. இவர் தற்போது மிகச் சிரமப்பட்டு அரசாங்கத்திற்கு லிபறல் முகத்தைக் கொடுக்க முயற்சிக்கிறார். மூன்று ராஜபக்ஷக்களிலும் லிபறல் முகம் இவருக்கு மட்டும் தான் உண்டு. மற்ற இருவரும் போரோடு நேரடியாகத் தொடர்புபட்டிருந்த காரணத்தினாலும் ஒரு இனவாத அரசியலுக்குள் செயற்பாட்டாலும் லிபறல் முகத்தை இழந்துள்ளனர். அமெரிக்கா, மேற்குலகம், இந்தியா போன்ற நாடுகளைச் சமாளிக்கின்ற முகமும் இல்லை. ஆனால் பசில் ராஜபக்ஷவிற்கு மேற்குலகத்தோடு உறவு கொள்கின்ற முகமும் இந்தியாவோடு நட்புப் பாராட்டுகின்ற முகமும் உள்ளது. இதனால் தான் இவர் அரசுக்கு இப்போது தேவையாக உள்ளார்.

பெரும்தேசியவாதத்தின் இனவாத முகத்தோடு ஆட்சி நடத்தலாம் என்று இவ்வளவு காலமும் அரசாங்கம் நினைத்திருக்கிறது. இப்போது, அவ்வாறு நடத்த முடியாது எனத் தெரியத் தொடங்கியுள்ளது. இதனால் தமது இருப்பினைத் தக்கவைப்பதற்காகவே இவர் களமிறக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தற்போது

அரசாங்கம் மூன்று நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. ஒன்று, இந்திய, அமெரிக்க அணியுடன் மோத வேண்டிய சூழல்- இது சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலோங்கத் தொடங்கியதால் நிகழ்ந்த ஒன்று. அதிலும் கொழும்புத் துறைமுக நகரத்தில் சீனாவின் ஆதிக்கம் வலுவடைந்ததைத் தொடர்ந்து இந்நாடுகள் இலங்கையுடன் எதிர்ப்பு நிலையினைக் காட்டி வருகின்றன. இதற்கு கனடா ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் எடுத்த இன அழிப்பு வாரத் தீர்மானம், ஐரோப்பிய ஒன்றியத்தின் G.S.P வரிச் சலுகை நீக்கம், அமெரிக்க காங்கிரஸ் தமிழர்களுக்குச் சார்பாக கொண்டுவந்த பிரேரணை என்பவை வெளிப்படுத்துகின்றது. இதனைச் சமாளிப்பதற்கு இலங்கை பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இத்தகைய விவகாரத்தைத் தீர்க்க வேண்டியது - தணிக்க வேண்டியது அவர்களது தேவையாக உள்ளது. அவர்கள் நினைத்திருந்தார்கள் இலங்கைக்குள்தான் உலகம் உள்ளது என்றும், ஆனால் இப்போதுதான் அவர்களுக்குத் தெரிய வந்துள்ளது உலகத்திற்குள் தான் இலங்கை உள்ளது என்று.

இரண்டாவது, பெருந்தேசியவாதத்தினுடைய எதிர்ப்பு கோத்தபாஜ ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் பெருந்தேசியவாதிகளுக்கு நிறைய எதிர்பார்ப்பு இருந்தது. அவர்களுடைய எதிர்பார்ப்பினை இவர் நிறைவேற்றத் தவறிவிட்டார். இதனால் அவர்கள் எதிர்க்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. இது கிட்டத்தட்ட பண்டார நாயக்கவிற்கு ஏற்பட்ட நிலையை நினைவூட்டுகிறது. **1956** ஆம் ஆண்டு பண்டார நாயக்க மிகப் பெரிய பெரும் தேசியவாத அலையோடு ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வந்து பெரும் தேசியவாதம் எதிர்பார்த்ததைப் போல அவர் செயற்படவில்லை என்பதற்காக ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்களில் அவர் பௌத்த பிக்குவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். இங்கு ஒரு வருடத்திலேயே ஆட்சி முடிவுக்கு வரும் நிலை உள்ளதுபோல் தெரிகிறது. பண்டார நாயக்கவிற்கு வந்த நெருக்கடியை விட இவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி அதிகமானது. ஆகவே இந்தப் பெரும் தேசியவாதத்திற்கு முகம் கொடுத்தல் என்பது மிகவும் நெருக்கடியான விடயம் தான்.

மூன்றாவது, கூடுதலான இராணுவமயம், கொரோனா காலத்தை அரசியல் செயற்பாடுகளை ஒடுக்குகிற கருவியாகப் பயன்படுத்துகின்ற நிலைமையும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் சிங்கள மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர். இதனைத் தணிக்கவேண்டிய தேவை உள்ளது. இதனால் பசில் ராஜபக்ஷ முன்னிலைப்படுத்தப்படுகின்றார். இவரிடம் ஒழுங்கமைக்கும் திறன் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒழுங்கமைக்கும் திறன்தான் மொட்டுக் கட்சியின் வெற்றிக்குக் காரணமாகும். இதனால்தான் கட்சி தொடங்கிக் குறுகிய காலத்திலேயே பெருவெற்றியுடன் ஆட்சியமைக்கக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் பசில் பதவியேற்றதும் அமெரிக்கத் தூதுவர், இந்தியத் தூதுவர், சீனத் தூதுவர், ரஷ்யத் தூதுவர், ஜேர்மன் தூதுவர், ஐரோப்பியத் தூதுவர்கள் போன்றோரைச் சந்தித்துப் பேசியுள்ளார். அதில் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்தபோது கெரவலப்பிட்டிய மின் நிலையத்தில் **51** வீதத்தினை அமெரிக்கக் கம்பனிக்குக் கொடுத்து அதனை அபிவிருத்தி செய்யும்படி கோரியுள்ளார். அதேபோல திருகோணமலைத் துறைமுகத்தை ஐந்து வருடங்களிற்குக் குத்தகைக்கு ஒப்பந்தம் செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இது அமெரிக்காவின் எதிர்ப்பினைச் சமாளிப்பதற்கான முன்முயற்சியாகக் கருத முடிகின்றது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கும் நாடுகளை வசப்படுத்த முடியும் என்பது பசிலின் அசைக்க முடியாத எண்ணமாக இருக்கிறது. இந்திய, அமெரிக்க நாடுகளும் தாங்கள் இலங்கையில் காலூன்ற ஒரு இடம் தந்தால் போதும் என்றே நினைக்கின்றார்கள்.

இவர் இவ்வாறு செயற்பட்டாலும் கூட அவருக்கு இந்த விடயத்தில் நிறையச் சவால்கள் உள்ளது.

முதலாவது, யார் நினைத்தாலும் சீனாவின் செல்வாக்கைத் தணிக்க முடியாத அளவிற்கு சீனாவின் ஆதிக்கம் நிலைத்துவிட்டது. ரணிலின் ஆட்சியின் போதும் மேற்குலகம் நினைத்தது சீனாவின் செல்வாக்கைத் தணித்து தன்னை மேல் உயர்த்துமென. ஆனால் அதைச் செய்ய முடியவில்லை. அவர்தான் அம்பாந்தோட்டை ஒப்பந்தத்தை எழுதியவர். துறைமுக நகர்ப் பிரச்சினையையும் கூட சமாளித்து அதைச் செயற்பட வைத்தவர். அவரால் கூட சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்க முடியவில்லை. சீனாவின் செல்வாக்கு குறைக்கப்படும்வரை வல்லரசுகளுடன் மோதவேண்டிய நிலையொன்று உள்ளது.

இரண்டாவது, பொருளாதாரச் சரிவைத் தடுத்து நிறுத்த முடியுமா? என்பது. ஆனால் சரிவைத் தடுத்து நிறுத்த முடியாத அளவிற்கு அது சரிந்து விட்டது. அதற்குக் கொரோனாவும் ஒரு காரணம். அவ்வாறு சரிந்த பொருளாதாரத்தைக் கொஞ்சமாவது நிமிர்த்தாமல் இவரால் தன்னுடைய இலக்கை நோக்கி நகர முடியுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மூன்றாவது, பெருந்தேசியவாதத்திலிருந்து வருகின்ற எதிர்ப்பு. அவர்களைத் திருப்திப்படுத்தாமல் மற்றவர்களைத் திருப்திப்படுத்துகின்ற நிலைமையில் தான் அவர்கள் பிரச்சினைகளை எழுப்புகின்றனர். இதனால் அரசின் ஆதரவுத் தளமே பலவீனப்பட்டிருக்கின்றது. இதுவும் அவர் எதிர்நோக்கும் சவால்களில் ஒன்று.

நான்காவது, ஏனைய இனங்களிடம் இருக்கும் அதிருப்தி. தமிழ், மலையக, முஸ்லிம் இம் மூன்று தரப்புமே அரசாங்கத்தின் மீது பாரிய அதிருப்தியில் உள்ளது. ஆகவே, அவர்களைத் திருப்திப் படுத்தக் கூடிய வகையில் இவர் என்ன செய்யப் போகிறார். ஏனெனில் இத்தரப்பினரைத் திருப்திப்படுத்துவதற்கு நிறைந்த வேலைத்திட்டம் செய்யவேண்டியிருக்கும்.

மற்றையது, உட்கட்சிப் பிரச்சினை, பொது ஜன முன்னணி தவிர்ந்த ஏனைய பங்காளிக் கட்சிகள் முரண்பாட்டு நிலையிலேயே இருக்கின்றன. இதில் தேசிய சுதந்திர முன்னணி, இடதுசாரிக் கட்சி பலமான கட்சிகளாக இல்லாததனால் அவர்களின் முரண் பாதிப்புக்குரியதில்லை. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முரண்பாடு என்பது அரசின் இருப்பினையே கேள்விக்குள்ளாக்கிவிடும்.

இச் சூழலை முழுமையாக விளங்கிக் கொண்டு தமிழ்த் தரப்பு என்ன செய்யலாம்? என்ற கேள்வி வருகின்றது.

இன்று நெகிழ்ச்சியாக நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. பசிலும் இவ்வாறே செயற்படப்போகிறார் எனத் தெரிகிறது. இந்த இடத்தில் தமிழ்த்தரப்பு எவ்வாறு நடந்து கொள்ளலாம்? கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கலாம்? என்பது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். எதிர்க்கட்சிகள் இணைந்து சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் சார்பில் மாநாட்டை நடத்தியுள்ளார்கள். அம் மாநாட்டில் அரசாங்கத்தை முழுமையாக எதிர்ப்பதற்கு இணைந்து செயற்படுவது என்ற தீர்மானத்தினை எடுத்துள்ளார்கள். மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கலந்து கொண்ட சுமந்திரன் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஏற்படாமல் எதிர்க் கட்சியோடு இணைந்து செயற்படுவதில் பயனில்லை என்று தெரிவித்திருக்கிறார். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்ட போதும் தாங்கள் அதனைச் செய்வோம் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருக்கவில்லை. தமிழர் தரப்பினை விட்டு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கையை எடுக்க இயலாது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இது ஒரு சாதகமான சந்தர்ப்பம். இதனைத் தமிழ் அரசியல் தலைமை சரியாகக் கைக்கொண்டு தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.

தமிழ் மக்கள் கிட்டத்தட்ட ஐந்து வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

ஒன்று, அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினை அது அரசியல் தீர்வோடு தொடர்பான பிரச்சினை.

இரண்டாவது, பொறுப்புக் கூறல் பிரச்சினை, இவ்விரண்டும் அரசினுடைய நடவடிக்கையால் வந்தபடியினால் அதை உடனடியாகச் செய்வார் என எதிர்பார்க்க முடியாது. எந்த அரசாங்கம் வந்தாலும் அதைச் செய்யக் கூடிய சூழல் இல்லை, ஆனால் இதைக் கைவிட இயலாது. ஏனெனில் இது தான் எங்கள் இருப்பைப் பாதுகாக்கின்றது. இதை ஒரு நீண்டகாலக் கோரிக்கையாக வைத் துக் கொண்டு நாங்கள் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி அழுத்தங்களைக் கொடுக்கலாம்.

இவை இரண்டையும் விட ஆக்கிரமிப்புப் பிரச்சினை, இயல்பு வாழ்கையைக் கொண்டு வருகின்ற பிரச்சினை, காணாமல் போனோர் பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை இவ்வாறு ஐந்து வகையான பிரச்சினைகள் உண்டு. இதில் முன்னர் குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகளை ஒரு நீண்டகால திட்டத்திற்குள் வைத்துக் கொண்டு மீதி மூன்றையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுக்கலாம். முக்கியமாக இதனை எதிர்க் கட்சிகளுடைய நிகழ்ச்சிகளுக்குள் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இதன் மூலம் எதிர்க்கட்சியினூடாக அழுத்தத்தைக் கொண்டுவருதல் வேண்டும். மற்றையது மேற்குலகம், இந்தியா போன்ற வல்லரசுக்குள்ளால் ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். அடுத்து, தமிழ்த் தரப்பு தானாகவும் ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். இவ்வாறு மூன்று முனைகளிலிருந்தும் அழுத்தங்களைக் கொடுக்கின்ற போது அவை நிறைவேற்றப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

இந்நிலையினைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் இருப்பினைப் பாதுகாக்கக் கூடிய செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இருப்புத் தொடர்பான அச்சுறுத்தலைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குத் தற்போதைய சூழலைச் சரியாகக் கைக்கொள்ள வேண்டும். ■

சிக்மலிங்கம் றெஜினோல்ட்


> **நம்முடைய வரலாறு முழுவதிலும் வெளிப்படையாகவே வலதுசாரிய சக்திகள் இனவாதத்தையே தமது அரசியல் முதலீடாக்கி வந்திருக்கின்றன. இன்னும் அப்படித்தான் செய்து வருகின்றன. இன்றைய நிலையில் இது தேசியவாதக் கட்சிகளாகவும் சக்திகளாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. சிங்களத் தேசியவாதம், தமிழ்த் தேசிய வாதம், முஸ்லிம் தேசியவாதம் என. மெல்லியதொரு தோற்ற நிலையில் மலையகத் தேசியவாதமாகவும் தான்.**

# இலங்கையின் மீட்பர்கள் யார்? இனவாதிகளா? இடதுசாரிகளா?

(பகுதி 03)

அறிவும் மனச்சாட்சியும் உள்ள எவரும் இலங்கையில் நிகழ்ந்திருக்கும் கெடுவினைகளுக்கு இடதுசாரிக் கட்சிகளில் பெரிய குற்றம் காணமுடியாது. முடிந்தளவுக்கு அவர்கள் நாட்டையும் மக்களையும் காப்பாற்றவே முயற்சித்தனர்.

“ஒரு மொழி ஒரு நாடு என்றால் நிச்சயமாக இலங்கை இரண்டாகப் பிரியும் நிலை வரும்” என்றார் கொல்வின் ஆர்.டி சில்வா. இந்த யதார்த்தத்தை - இந்த உண்மையைப் புரிந்து கொள்ள மறுத்தது இனவாதமே. இதன் விளைவாக நாற்பது ஆண்டுகள் அழிவில் கழிந்தன.





இன்றும் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டே ஆக வேண்டும் என வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறார் விக்கிரமபாகு கருணாரத்ன. அடி நிலை மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் பாராளுமன்ற அதிகாரம் என்பது கட்சி நலனாகச் சுருங்கியிருப்பதைப் பற்றியும் எதிர்ப்புக்குரல் எழுப்புகிறது ஜே.வி.பி.மக்கள் நலன், தேசநலன் ஆகியவற்றுக்கு எதிராகச் செயற்படுமிடத்து ஆட்சியதிகாரத் துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்துகிறது புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிசக் கட்சி மற்றும் முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றவை அரசாங்கத்தோடு இணைந்திருந்தாலும் தமிழ் பேசும் சமூகத்தினரின் அரசியல் உரிமைகள், ஜனநாயகச் செழிப்பு உள்ளிட்ட முன்னேற்றகரமான விடயங்களில் சரியான நிலைப்பாட்டைக் கொண்டவர்களே வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றோர்.

எதிர்நிலையில் வேகமெடுத்து ஓடும் குதிரைகளுக்குக் கடிவாளமாக இவர்களே இருக்கிறார்கள். இல்லையென்றால் இன வாதம் இன்னும் கொடுவினையாற்றும்.

அப்படியென்றால் இதற்குப் பொறுப் பாளிகள் யார்? சந்தேகமேயில்லை. வலதுசாரிகளே. நம்முடைய வரலாறு முழுவதிலும் வெளிப்படையாகவே வலதுசாரிய சக்திகள் இனவாதத்தையே தமது அரசியல் முதலீடாக்கி வந்திருக்கின்றன. இன்னும் அப்படித்தான் செய்து வருகின்றன. இன்றைய நிலையில் இது தேசியவாதக் கட்சிகளாகவும் சக்திகளாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. சிங்களத் தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம், முஸ்லிம் தேசியவாதம் என மெல்லியதொரு தோற்ற நிலையில் மலையகத் தேசிய வாதமாகவும்தான்.

வெளித்தோற்றத்தில் இந்தத் தேசியவாதத்தில் தவிர்க்க முடியாத தர்க்க நியாயங்கள் உள்ளது போலத் தோன்றினாலும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இவை இனவாதத்திலேயே வேரூன்றியிருக்கின்றன என்பதைக் கண்டறிய முடியும்.

இனவாதத்தின் அடிப்படையே பகையும் தன்மோகமுமாகும். எதிர்த்தரப்பை அந்நியமாக நோக்குவதன் வழியாகப் பகை உணர்வு மேலோங்குகிறது. இதற்குத் தன்மோகம் - தன்னினமே சிறந்தது, ஆதியானது, மகத்தானது என்ற எண்ணம் - துணை செய்கிறது. இது எப்படியென்றால், அவரவர் தமக்குத் தமக்கு ஒரு நாயை வளர்த்துக் கொள் வதைப்போல. அந்த நாய் அடுத்த நாயை அங்கீகரிக்காது. சண்டைக்குப் போகும். அல்லது கடுமையாகக் குரைத்தாவது தீரும்.





இப்படி வளர்க்கப்பட்ட தேசியவாத - இனவாதமே இலங்கைத் தீவை இரத்தத் தீவாக்கியது. யுத்தம் முடிந்தாலும் இன்றும் பகைமை உணர்வு நெருப்பாகவே உள்ளும் வெளியும் கொதித்துக் கொண்டும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டும் இருக்கிறது. இது குறித்து எந்த விதமான மறுபார்வைகளும் விமர்சனங்களும் கிடையாது. அதற்கு இந்த இனவாதம் ஒரு போதுமே இடமளிக்காது. அப்படியென்றால் தவறுகள் தொடர்ந்து கொண்டிருக்கப்போகிறது என்றே அர்த்தமாகும்.

இதனால்தான் யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும் நல்லிணக்கத்தையோ பகை மறைப்பையோ ஒருங்கிணைப்பையோ மேற்கொள்ள முடியாத நிலை நீடிக்கிறது. தொடர்ந்தும் மக்களை முரண் நிலையிலேயே வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

இது மக்களைத் திசைதிருப்பும் முயற்சியாகும். நாடு எதிர்கொள்கின்ற சவால்கள், மக்களுடைய பிரச்சினைகள், அதற்கான தீர்வு என்பதையெல்லாம் இரண்டாம், மூன்றாம் நிலைக்குத் தள்ளி விட்டு, இனரீதியாகவே ஒவ்வொருவரும் சிந்திக்கவும் அணிதிரளவுமாக இந்தப் பொறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதை இனவாத சக்திகள் கச்சிதமாக கால மாற்றங்களுக்கு ஏற்ப புதுப்பித்து நடத்துகின்றன.

இதற்கமைய கட்சிகள், தலைவர்கள், சனங்கள், ஊடகங்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், மதகுருக்கள், மதநிறுவனங்கள் என எல்லாமே இனவாத மயப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால் நாடே இனவாத மயப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களிலும் இனவாதம் ஒரு பெரிய நோயைப் போலவும் முள்ளாலான நிழலைப்போலவும் ஊடுருவிப் பரந்துள்ளது.

ஏன், நீதி பரிபாலனத்திற் கூட இனவாதம் உள்ளது. அரசியலமைப்பே இனவாதத்தில்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இப்படி எல்லாவற்றிலும் இனவாதம் தாராளமாகிப் பெருகியிருக்கிறது. இது ஏட்டிக்குப் போட்டி என்ற நிலையை உருவாக்குகிறது. பகை என்றாலே எதிரெதிர் - ஏட்டிக்குப் போட்டி என்ற மனநிலையையே உருவாக்கும்.

இதில் தாராளமான வசதிகள் ஒவ்வொரு தரப்புக்கும் உண்டு. ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொண்டு, அந்தக் குற்றச்சாட்டுகளில் உண்டாகும் வெப்பத்தில் வைத்தே தமக்கான வெற்றி என்ற புரியாணியை ஒவ்வொரு தரப்பும் போட்டுக் கொள்கின்றன.

அதிகம் இதைப்பற்றி ஏன் விபரிக்க வேண்டும்? பதிலாக ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும் கேட்டால் மட்டும் போதுமானது.





சுதந்திர இலங்கையில் ஐ.தே.கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே மாறி மாறி ஆட்சியிலிருந்திருக்கின்றன. இப்பொழுது சுதந்திரக் கட்சியின் இன்னொரு முகமான பொதுஜன பெரமுன ஆட்சியை நடத்துகிறது. அதுவும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்தே.

ஆகவே இந்த இரண்டு கட்சிகளும்தான் தொடர்ந்து ஆட்சியை நடத்தியுள்ளன. இவை இலங்கையை வளர்த்தெடுத்துள்ளனவா? அழித்துள்ளனவா? என்றால் அழித்துள்ளன என்பதே மிகத் தெளிவான பதிலாகும்.

இந்த அழிவு பலவகைப்பட்டது. பொருளாதாரத்தை, நாட்டின் இயற்கை வளத்தை, போரினாலும் வன்முறைகளினாலும் மக்களை - மனித வளத்தை இப்படி அனைத்தையுமே அழித்துள்ளன. மேலும் ஒரு தொகுதி மனித வளத்தை நாட்டை விட்டே வெளியேற்றியுள்ளன. ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துள்ளன. மோசமான அரசியல் முறையை உற்பத்தி செய்து விட்டுள்ளன. ஊழலை உருவாக்கிப் பெருப்பித்துள்ளன. நல்விளைவுகளை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக இன - சமூக முரண்பாடுகளை உற்பத்தி செய்து விட்டிருக்கின்றன. எல்லையற்ற அளவில் பிராந்திய, சர்வதேச சக்திகள் என வெளியாரின் தலையீடுகளுக்கு தாராளமான இடத்தைக் கொடுத்துள்ளன. கடன்பொறிக்குள் நாட்டையும் மக்களையும் தள்ளி விட்டுள்ளன. நாட்டின் உற்பத்தி முறைமைகளையும் உற்பத்தித்திறனையும் கொன்றழித்துள்ளன.

இப்படி ஒரு பெரிய தீமைகளின் பட்டியல் நீளமாக உண்டு.

இதைப்போலத்தான் தமிழ்த்தரப்பிலும் உள்ளது.

இங்கும் இனவாதத்தை அரசியல் முதலீடாக்கும் அதே சிந்தனையும் ஒத்த அரசியல் இயல்புமே உள்ளது.

தமிழரசுக் கட்சி இதில் முதற்பாத்திரமும் முதன்மைப் பாத்திரமும் வகிக்கிறது.

ஐ.தே.க, சு.க, பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்கு இணையாக இனவாதத்தை தமிழ்த் தேசியவாதமாக முன்னிறுத்தி வலது அரசியலை - மக்களுக்கும் நாட்டுக்கும் எதிரான அரசியலை - முன்னெடுக்கிறது. இதனிடம் ஜனநாயக விழுமியம் கிடையாது. சமூக நீதி கிடையாது. சமத்துவ நோக்குக் கிடையாது. பாரபட்சமற்ற தன்மை கிடையாது. அறம் கிடையாது. பரந்து பட்ட நோக்கம் கிடையாது. மனித நேயம் கிடையாது. உண்மை கிடையாது.

இப்படிப் பல எதிர்மறையான அம்சங்களோடுதான் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் செயற்படுகிறது.

தமிழரசுக் கட்சி போட்ட குட்டிகளே ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளும் அமைப்புகளும். அவையும் அதே ஒழுங்கிலேயே மக்கள் விரோத அரசியலைச் செய்கின்றன.

இதனால் தமிழ் மக்களும் தங்களுக்கான அரசியல் அறுவடையைச் செய்ய முடியாமல் தொடர்ந்தும் பிரச்சினைகளின் மையத்துக்குள்ளேயே சிக்குண்டுள்ளனர்.

இதிலிருந்து மீண்டு கொள்வதற்கு இவற்றினால் முடியாது. அதற்கு இவை தயாராகவும் இல்லை. இவற்றினால் அது முடியவே முடியாது.

ஆகவேதான் நாம் இடதுசாரிகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. அவர்களே உலகத்தையும் சமூகத்தையும் வரலாற்றையும் விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கிறார்கள். சிந்திக்கிறார்கள். தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். மக்களுக்கான அரசியலை மக்களோடு இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். சமூக நீதியை, பால் சமத்துவத்தை, சுற்றாடல் பேணுகையை, நாட்டின் வளங்ளை, மக்களை, அவர்களுடைய எதிர்காலத்தை ஏன் இந்தப் பிரபஞ்சத்தையே பாதுகாத்திட வேண்டும் என்ற வேட்கையோடிருக்கிறார்கள்.

ஆனால் அவர்களிடம் அதிகாரமில்லை. அதை மக்கள் வழங்குவதுமில்லை. இனவாத அலையின் முன்னே - அழிவரசியற் கவர்ச்சியின் முன்னே அவர்களுடைய மனிதாபிமான - அறம் நிறைந்த அரசியல் எடுபடாமல் போய்விடுகிறது.

கடவுளின் சொல்லை விடவும் சாத்தானின் வார்த்தைக்குக் கவர்ச்சி அதிகம் என்பார்கள். உண்மையை விடவும் பொய் அதிக கவர்ச்சி உடையது. மெய்யை விடவும் மாஜா ஜாலத்திற்கு அதிக ஈர்ப்புண்டு என்று சொல்வார்கள். அதைப்போல இடது என்ற மக்கள் அரசியலுக்கு மக்களிடம் வரவேற்பும் குறைவு. மதிப்பும் குறைவு.

நோய், பிணி, காயம், வலி, வேதனை எல்லாவற்றோடும் இருந்தாலும் இவற்றுக்கு மருந்தும் மருத்துவமும் வேண்டும் என்றாலும் அது எல்லோருக்கும் கசப்பாக இருக்கிறது அல்லவா. அதைப்போலத்தான் இந்த இடது அரசியலும் கசப்பானதே. ஆனால், அதனால்தான் தகுந்த சிகிச்சையை அழிக்க முடியும். நோயைக் குணப்படுத்த முடியும். ■

செல்வழகன்



# கொரோனாவில் விழுந்தவர்களை ஏறி மிதிக்கும் விலைவாசி


நாடு முடக்கத்தில் இருந்து பல்வேறு தளர்வுகளுடனும், சில கட்டுப்பாடுகளுடனும் மீண்டுள்ளது. சாராம்சத்தில் நாடு திறக்கப்பட்டு விட்டது. மக்கள் உத்தியோகப்பற்றற்ற வகையில் ஒன்று கூட ஆரம்பித்து விட்டனர். பாடசாலைகள் கூட ஓரளவு இயல்பை நோக்கி நகர ஆரம்பித்து விட்டன. கற்றல் மத்திய நிலையங்களாக குறிப்பிட்டளவு பாட-சாலைகள் ஆரம்பித்துள்ள, அதேவேளை முறைசார் வகுப்புகளும் சிறிய அளவில் நடைபெறத் தொடங்கியுள்ளன. மறுபுறம் சிறு குழுக்களாகத் தனியார் வகுப்புக்களும் ஆரம்பித்து விட்டன. பரீட்சைக்கான அறிவிப்பு வந்துள்ள சூழலில் இந்த நடவடிக்கைகள் மேலும் முனைப்புப் பெறப் போகின்றன. எல்லாமே உத்தியோகப் பற்றற்ற செயற்பாடுகளே!

இவற்றுக்கு மத்தியில் மக்கள் வீதிக்கு வந்து விட்டனர். அரசியல் கட்சிகளும், அமுக்கக் குழுக்களும் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்ய, அதில் சாமானிய மக்கள் பலரும் இணைந்து வீதிகளிலும், சுற்றுவட்டங்களிலும் போராடத் தலைப்பட்டுள்ளனர். விலை உயர்வுக்கு எதிராக, முக்கியமாக எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக தினந்தோறும் நடைபெறும் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தொடர்பு சாதனங்கள் தினசரி கவனப்படுத்தி வருகின்றன. விலைவாசி உயர்வைக் காரணம்காட்டி அரசைக் கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம் என்று புதிதாகப் பதவியேற்ற நிதி அமைச்சர் விநயமாகக் கேட்குமள வுக்கு இப்போராட்டங்களின் தாக்கம் வலிதானதாக அமைந்துள்ளது.

கொரோனாப் பெருந் தொற்றும், அதையடுத்து வந்த பொதுமுடக்கமும் பலரது வாழ்வையும் புரட்டிப் போட்டுள்ளது. மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். “பயணத் தடை விலக்கப்பட்ட தினத்தன்றும், மறுநாளும் பொருட்களை வாங்க மக்கள் குவிந்தனர். அதன் பிறகு ஈயோட்டிக்

சேதன உரப் பயன்பாடுடைய இயற்கை விவசாயம் என்று வெளியே அரிதாரம் பூசினாலும், டொலர் கையிருப்பின்மையால் உலக நாடுகளிடமிருந்து இவற்றை இறக் குமதி செய்ய முடியாமல் இருக்கும் இயலாமையே இந்த நிறுத் தம் என்பது பொருளாதார வல்லு நர்களின் கணிப்பீடு. இலங்கையின் விவசாயத் தேவைக்கு உள்ளூரில் சேத னப் பசளையை உற்பத்தி செய்யும் இய லுமை உள்ளதா என்றால் அதுவும் இல்லை. சேதனப் பசளையைக் கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில்தான் நாடு உள்ளது.

கொண்டிருக்கிறோம்” என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர் பலசரக்கு வியாபாரிகள். தமது வியா-பாரம் அரைவாசியாகக் குறைந்து விட்டது என்கின்றனர் அவர்கள்.



மக்களிடம் கொள்வனவு சக்தி குறைந்துள்ளது. அவர்கள் பெருமளவில் வருமானத்தை இழந்துள்ளனர். எல்லா வழிகளிலும் தொழில் வாய்ப்புகள் அருகி வருகின்றன. நாளாந்த வேலைகளைச் செய்வோர் பெரிதும் திண்டாடுகின்றனர்.

“எனக்கு இப்போது தொழில் குறைவு. அதனால் முன்னர் கொடுத்த சம்பளத்தை என்னால் வழங்க முடியவில்லை. வரும் வேலைக்கு ஏற்ப எனக்கான கட்டிட வாடகை, மின்சாரச் செலவு என்பவற்றைக் கழித்து மீதியாக வருபவற்றில் பகிர்ந்து வழங்குகிறேன்” என்றார் ஒரு வாகனத் திருத்தக உரிமையாளர்.

“என்னிடம் 12 பேர் வேலைக்கு நின்றனர். அவர்களில் வேறு வேலைகள் செய்யத் தெரிந்தவர்களை அனுப்பி விட்டேன். இப்போது 5 பேர்தான் வேலை செய்கின்றனர். ஆட்கள் வரத்து குறைந்து விட்டது. இருப்பவர்களுக்குச் சம்பளம் வழங்கவே வருமானம் போதாதுள்ளது” என்று சலித்துக் கொண்டார் பிரபல சைவ உணவக உரிமையாளர்.

“பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ளதால் வருமானமில்லை. மாதக் கடைசியில் வங்கிக் கடன் செலுத்தவே பெருங் கஸ்டமாக உள்ளது. பேப்பர் விற்பனையும் அரைவாசியாகிப் போச்சுது” என்று அழாக் குறையாகச் சொன்னார் புத்தகசாலை உரிமையாளர்.

“சொன்னால் நம்ப மாட்டீர்கள். இந்தக் கொரோனாவுக்குப் பிறகு மருந்து விற்பனையும் குறைந்து விட்டது. சனம் இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்துவதாலும், வீடுகளில் இருப்பதாலும் வருத்தம், மருந்து என்று வருகிறார்கள் இல்லை” என்று மருந்தக உரிமையாளர் ஒருவர் சொன்னார்.

பஸ்களில் சனமில்லை. அப்படி சனம் சேர்ந்தாலும் ஏற்ற முடியாது. வாடகை வாகனக்காரர்கள் ஓட்டமில்லாமல் கஸ்டப்படுகிறார்கள். பாடசாலைச் சேவை, அலுவலக சேவைகளை நடத்திய குறிப்பாக வெளிமாவட்ட ஆசிரியர்களை ஏற்றி இறக்கிய தனியார் வாகனங்கள் வீட்டின் மூலையில் முடங்கிக் கிடக்கின்றன.

மறுபுறம் விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன. இயற்கை விவசாயத்தை அழித்து உரத்தையும், மருந்துகளையும் அறிமுகப்படுத்திய அரசாங்கமே பல தசாப்தங்கள் கழித்து திடுதிப்பென அவற்றின் இறக்குமதியை நிறுத்தி விட்டது. சேதன உரப் பயன்பாடுடைய இயற்கை விவசாயம் என்று வெளியே அரிதாரம் பூசினாலும், டொலர் கையிருப்பின்மையால் உலக நாடுகளிடமிருந்து இவற்றை இறக்குமதி செய்ய முடியாமல் இருக்கும் இயலாமையே இந்த நிறுத்தம்



என்பது பொருளாதார வல்லுநர்களின் கணிப்பீடு. இலங்கையின் விவசாயத் தேவைக்கு உள்ளூரில் சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் இயலுமை உள்ளதா என்றால் அதுவும் இல்லை. சேதனப் பசளையைக் கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில்தான் நாடு உள்ளது.

உரம், கிருமி நாசினி, களை நாசினி இன்மையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர்கள் நோயாலும், பீடைத் தாக்கத்தாலும், வளர்ச்சி குன்றியும் வாடுகின்றன.

“இரண்டரை இலட்சம் செலவு செய்து நாட்டிய வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு, வெறும் எழுபதாயிரம் ரூபாவுக்கே விற்க முடிந்தது. ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா நட்டம். சென்ற வருடமும் மழையால் வெங்காயம் அழிந்து இரண்டு இலட்ச ரூபா நட்டம். நாங்கள் எப்படித் தாங்குவது?” என்று பெருந்துக்கத்துடன் சொன்னார் விவசாயியொருவர்.

விவசாயம் இப்படியென்றால் உள்ளூர் தொழில்கள் எல்லாவற்றிலும் பாதிப்புத்தான். பண்ணையாளர்கள், சிறு கைத்தொழில்களை மேற்கொள்வோர், ஏனைய வியாபாரிகள் என ஒவ்வொரு தரப்பும் வருமானம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால்தான் அவர்களில் பலர் வீதிக்கு இறங்கியுள்ளனர். அரசியல் கட்சிகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு கலந்து கொள்வதன் மூலமாவது தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடலாமா என அங்கலாய்க்கின்றனர்.

எல்லாப் பொருட்களின் விலைகளும் கடந்த இரு மாதங்களில் உயர்ந்து விட்டது. சவர்க்காரங்கள் முதற்கொண்டு பிஸ்கட் வகைகளில் இருந்து அனைத்துப் பொருட்களுமே விலை கூட்டப்பட்டு விட்டது. எரிபொருளைப் பேசுபவர்கள் எவரும் இந்த விலையேற்றத்தைக் கண்டு கொள்வதில்லை. அத்தியாவசியப் பொருட்களுக்கு விலை குறிக்கப்பட்ட போதும் அது ஏட்டளவில்தான். நடைமுறையில் அவற்றின் விலைகளும் அதிகம்.

ஆக, கொரோனாப் பெருந் தொற்றில் நலிந்து போயிருக்கிற மக்களை விலைவாசி ஏறி மிதிக்கிறது. இப்போதுள்ள நிலைமைகளின் சமூகத் தாக்கங்கள் இனித்தான் வெளிவரப் போகின்றது.

# எழுத்தின் இயங்கியல்

## செயல் மொழி

ந.மயூரரூபன்

எழுத்தின் மொழியைப் பயன்படுத்துவதிலும் ஒரு பிரதியில் மொழியைக் கண்டடைவதிலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு அனுபவம் கிடைக்க வாய்ப்புண்டு. எனினும் மொழியைக் கண்டடைதல் என்பது மொழியின் செயல் விளைவில் இருந்தே கிடைக்கிறது. ஒரு பிரதியை மொழி முழுமையாக ஆட்சி செய்கிறது என்றால் மறுப்பதற்கில்லை. மொழியின் செயல் என்பது அந்த மொழி குறித்த பிரதியை உருவாக்க முனைந்த அனைத்துக் கூறுகளின் இயல்புகளினாலும் அந்தக் கூறுகளின் இணைவுக்கான தேவையின் காரணங்களில் இருந்தும் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது, மொழியின் கூறுகள் என்பது இதுவரை நாங்கள் பார்த்த அனைத்துச் சேர்க்கைகளுமான கருத்தியல், மனம், விருப்பம், சமூகக் கூறுகள் என அனைத்தையும் சொல்ல முடியும். கூறுகளின் இணைவுக்கான காரணம் என்பது, ஒரு விருப்பமும் (தனியனின் அல்லது குழுவின்) ஒரு தேசியப் பற்றும் ஒரு புள்ளியில் இணைவதன் அரசியலைக் குறிப்பது.

“போரும் மழையுமே கடவுளராய்த் துவங்கிய
மாயன் நகரத்தை
கடல் கொள்ளவில்லை
கடலோடி எரியூட்டினான்

மலை முகடுகளிலும் கடலோரத்திலும்
அவன் எழுப்பிய ஆயிரக்கணக்கான சிலுவைகளில்
மூன்று நூற்றாண்டுகள்
தொடர்ந்து அறையப்பட்டனர்
கறுப்பு நிறத்தில் கோடிக்கணக்கான ஏசுக்கள்

புதிய காலம் என்றனர்
ஆனால் கனவு அழிந்தது
மொழியும் அழிந்தது
குருதி சுமந்த கடலோ
எல்லோரையும் தாங்கியபடி
வெட்கத்துடன் அடங்கிச் சிறுக்கிறது”

(சேரன், மீண்டும் கடலுக்கு / 69)

இந்தக் கவிதையின் மொழி, அது தருகின்ற சேரனின் கருத்தியல் மற்றும் அரசியற் பார்வை இரண்டினதும் இணைவு இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு நாம் மொழியின் செயலை மூன்று அடிப்படைகளில் விளங்கிக் கொள்ளலாம்.

1. பேசுதல்
2. பேச மறத்தல்
3. பேச மறுத்தல்

இங்கு பேசுதல் என்பது ஒரு மொழியினூடாகப் பிரதி ஒன்று எதனைப் பேசுகிறது என்பதாக அமையும். அந்த வகையில் ஒரு பிரதி,

- அர்த்தத்தைச் சொல்கிறது.

ஒரு பிரதியின் மொழி; என்ன வகையான செய்தியை எமக்குச் சொல்லமுடியும்; ஏதோவொரு தகவலை, பரிமாற்றத்தை சமூகத்தின் மொழி கண்டடைந்து வைத்திருக்கும் அர்த்தமாகப் பேச விளைகிறது.

- அர்த்தத்தை புனைகிறது.

அர்த்தத்தைச் சொல்வது என்பதைக் கடந்து பிரதியின் / மொழி வழிப்பிரதியின் இன்னொரு செயல் அர்த்தத்தை புனைந்து தருவது. கற்பனை கொண்ட மனவெழுச்சியில் தோய்ந்த மொழி ஒரு உலகத்தை, ஒரு காட்சியை, ஒரு சமூகத்தை, ஒரு உணர்ச்சியை, ஒரு அரசியலை, ஒரு பகையை, ஒரு பழிவாங்கலை, ஒரு அவமானத்தை, ஒரு சித்திரவதையை, ஒரு மகிழ்ச்சியை, ஒரு வேட்கையை என வெவ்வேறுபட்ட அர்த்தப் பரிமாணங்களில் உருவாக்கித்தரவல்லது.

- அழகியலை உணரச் செய்கிறது.

மொழியாலான ஒரு பிரதி தனக்கான ஒரு அழகியலை, இரசிக்கக் கூடிய உள்ளடக்கத்தை, மொழிப் பிரயோகத்தில் கண்டடையக் கூடியது. ஒரு கவித்துவத் தன்மையை, பிரதியின் எழுத்துகள் வாசித்த பின் கொண்டிருக்கும் அருட்டுணர்வை, வாசகன் கண்டடையும் இரசனையுணர்வின் காரணத்தை நாம் அழகியலாக அறிந்து கொள்கிறோம்.

- அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது.

மொழி எப்போதும் அதிகாரத்தனத்தைக் கொண்டதாக உணரப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் ஒரு மொழிப் பிரயோகம் / மொழி பிரதி காட்டுகின்ற சாட்சி என்பது எல்லைகளால் ஆனது. வரையறை கொண்டது. அது இதைத்தான் காட்டுகிறது; நீ இதைத்தான் வாசிக்க வேண்டும் என்பது ஒன்று. இன்னொன்று நேரடியாக நீ இந்த அர்த்தத்தைத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தை வாசகன் மேல் சுமத்துகின்ற பிரதிகள் கொண்டுள்ள மொழி அதிகாரத்தால் உருவாக்கப்பட்டதாகும்.

இன்னொரு வகையில் ஆண்மையச் சிந்தனை, சாதிய அடக்கு முறை, முதலாளித்துவ எண்ணம், அரசியல் சிந்தனை, குறித்த தேசிய சிந்தனை, வரலாறு என்பவற்றால் பிணைந்து மொழி ஒரு பிரதியை உருவாக்குமானால் அந்த மொழி குறித்த சிந்தனை மையங்களில் அதிகாரத்தை வெளிப்படுத்தும் வகையிலேயே அமைந்திருக்கும்.



- சமூகத்தை, வாழ்வை, வரலாற்றைப் பேசுதல்.

மொழி பேசுகின்ற விடயங்களில் ஒரு சமூகத்தின் இருப்பை, வாழ்வியலை, இரத்தமும் சதையுமாகப் பேசுவதோடு ஒரு குறித்த சமூகத்தின், இனத்தின் வரலாற்றைப் பேசுகின்ற பண்பையும் தன்னிடத்தில் கொண்டுள்ளது.

- உண்மையாவதற்கு அல்லது சாட்சியமாவதற்கு விருப்பப்படல்

எழுத்துக்களின் விருப்பங்களில் அல்லது எழுத்தாளர்களின் விருப்பங்களில் முதன்மையானது. சமூகத்தினுடைய, அரசியல் பிரச்சினையினுடைய, போராட்டத்தினுடைய, வரலாற்றினுடைய சாட்சிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது. அத்துடன் தங்கள் பிரதி “உண்மை” என்ற பிரதிபலிப்பை வாசகனிடத்தில் உருவாக்க வேண்டும் என்கிற பேரவாவும் உள்ளது. இந்த ஆசைகளின் திரட்சியால் குறித்த பிரதி கள் உண்மைக்கான மாதிரி ஒன்றைப் பேச முனைகின்றன.

மொழியின் செயல்களில் இந்தப் “பேசுதல்” என்பது மிக அடிப்படையானது. பிரதி எவ்வாறெனினும் ஏதோவொன்றைப் பேசத்தான் வேண்டும்.

சேரன் சொல்லச் சொல்ல எங்கள் நெஞ்சங்கள் கொதித்து உயர்ந்து வந்தன. “ம்... ம்...” என்று கதை கேட்டு முறைத்து முறைத்து வீசியது சோளகம் “பாரும் ஐசே இந்தத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரரை இது ஏதோ இரண்டு குழுக்களின்ர சண்டை எண்ட மாதிரி சமரசம் பேசிக்கொண்டு திரிகினம் அவர்களுக்கு இரண்டு பக்கத்தில இருந்தும் வோட் வேணுமெல்லோ? இது அப்பட்டமான சாதி வன்முறை. இதற்கு எதிராக உணர்வுள்ள எல்லாரும் போராட வேணும். குறிப்பிட்ட சில சாதிகளை அடக்கி வைச்சுக்கொண்டு சிங்கள அடக்கு முறைக்கு எதிராக எப்பிடி நாங்கள் போராட முடியும்?”

(அ. இரவி, வீடு நெடும் தூரம் /67)

இது வீடு நெடும் தூரம் என்கிற நாவலில் வருகின்ற ஒரு சின்னஞ் சிறு பந்தி இங்கு மொழியினுடைய பேசுதல் என்கிற பண்பை நாம் உணர்ந்து கொள்வதற்கான அனைத்துக் கூறுகளும் உண்டு. மொழியினுடைய செயற் பண்புகளில் இரண்டாவது பேசமறத்தல் என்பதாகும். இந்தப் பேச மறத்தல் என்பது இரண்டு வடிவங்களில் பேசப்படலாம்.

1. எழுத்தாளன் மறத்தல்
2. காலச் சூழ்நிலைகளால் மறக்கடித்தல்

எழுத்தாளன் மறத்தல் என்பது, ஒரு பிரதியில் தனது எழுத்துக ளுக்கான எல்லைகள், இயல்புகள், சம்பவங்கள் என்பவற்றுள் அவனது மொழி நகர்ந்து குறித்த எல்லைகளை பேணிக் கொள்வதால் பிரதிக்கான இன்னொரு பக்கத்தை அல்லது பேச வேண்டிய ஒரு பக்கத்தை எந்தவித நெருக்கீடுகளுமின்றி மறந்து விடுதல் அல்லது கவனிக்காது விடுதல். இதனால் குறித்த பிரதியின் மொழி பேச வேண்டிய விடயங்களை மறந்து விடுகின்ற சூழல் ஏற்பட்டு விடுகிறது.

அதேபோல் ஒரு குறித்த காலம், சூழல் என்பன ஒரு குறித்த உணர்வை, எண்ணத்தை, வடிவத்தைப் பேசுவதற்கான இயல்பூக்கத்தை வழங்குவதால் அதனை மட்டும் பேசிக் கொண்டு அந்த மொழி நின்று விடுகிறது.

மொழியினுடைய செயல் வடிவங்களில் மூன்றாவதாக பேச மறுத்தல் என்பதைப் பார்க்க முடியும். பேச மறுத்தல் இரண்டு அடிப்படைகளில் நிகழலாம்.

1. அகச் சூழல்
2. புறச்சூழல்

அகச்சூழல் என்கிற போது ஒரு எழுத்தாளன் தான் நம்பிக்கை கொண்டுள்ள கருத்துருவங்கள், சித்தாந்தங்கள், கோட்பாடுகள் என்பவற்றைக் கடந்து எழுத மாட்டான். தமிழர்களின் போராட்டத்தை எழுதுபவர்களில், புலி ஆதரவை மட்டும் எழுதுபவர்களும் புலி எதிர்ப்பை மட்டும் எழுதுபவர்களும் காணக் கிடைப்பது ஒரு எடுத்துக்காட்டு.

இதேபோல் சமூகத்தின் மீதான பயம், அச்சுறுத்தல் என்பவற்றின் காரணமாகவும் பேச மறுத்தல் நிகழ்கிறது. இதைவிட சமூக இயக்கத்தின் தொடர்ச்சியைப் பேணுவதற்காகவும், சமூகச் செயல் இயக்கத்தை உடைக்காமல் இருப்பதற்காகவும் நன்றாகத் தெரிந்தே பேச மறுத்தல் எழுத்துகளில் நிகழ்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

சமூகத்தின் காணப்படுகின்ற புறச் சூழலின் அமைவுகள் மொழியில் பேச மறுக்கும் இயல்பைக் கொண்டு வந்து விடுகிறது.

ஒரு நாட்டின் அரசியல் காரணங்களும், அடக்குமுறைகளும் சர்வாதிகார ஆட்சிமுறையும் பேச வேண்டியவற்றைப் பேசமறுக்க வைக்கப்படுகின்றன. ஒரு சமூகம் கொண்டிருக்கக்கூடிய ஒதுக்கி வைக்கின்ற அல்லது குழுவில் இருந்து விலக்கி வைக்கின்ற சமூக இயல்புகளால் ஒரு எழுத்தாளனின் மொழி தனக்குள் இருந்து சில இயல்புகளைக் களைந்து விடுகிறது. பேச மறுத்தலை உட்கார்த்தி வைத்து விடுகிறது.

ஒரு பிரதி கொண்டிருக்கக்கூடிய செயற்பண்புகளான இந்த மூன்று பேசுதல் மற்றும் பேசாமை வகைமைகள் எழுத் தின் இயங்கியலின் புரிதலில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. ■




மணி விழா வாழ்த்து

எங்கள் புலோலிக் கல்வி நிலையத்தின் ஆசிரியர்கள்,
உதவியாளர்கள், மாணவர்கள் என எல்லோரையும்
ஒரு குடும்பமாய்எண்ணி எமக்கெல்லாம்
வழிகாட்டியாய் திகழும்

உயர்திரு.நவரட்ணம் சிவலிங்கம்

(Com.Trd.B.A.PGDE,M.Ed)
பிரதி அதிபர் யா/ புனிதநகர் தமிழ் வித்தியாலயம்.
(நிர்வாகி. புலோலிக் கல்வி நிலையம் )
17.07.2021 அன்று மணிவிழா காண்கின்றார்.

வாழ்த்துப்பா

புற்றளை யூரின் மைந்தன் எங்கள்
புன்னகை சிந்தும் கண்ணன்: புனித
நற்றவ மாக நிலந்தில் வாய்த்த
நாயகன் அவனின் நேரிய பண்பை
அற்புதம் எனவே ஏற்றுச் சீராய்,
அருமணி விழாவில் அரிய தாயொரு
பொற்பதம் போற்றும் பெருங்குருச் சேவையால்
பேறாய் ஆகிய பெரியனை வாழ்த்துவோம்.

வணிகத்து ஆசானாய் வழிகாட்டும் ஆளுமையாய்
வாய்த்தகல் நேர முகாமையின் சிகரமாய்
பணிவான செயலின் பொதுநல வாதியாய்
பாரி லுதித்த பண்பான நெஞ்சனாய்
துணிவுடன் இயங்கும் தூயநற் தோழனாய்
தூளியில் வாய்த்தவா! திருவாழ்வின் உச்சமாய்
மணிவிழாக் காண்கின்ற மகத்தான மனிதமே!
மனதார வாழ்த்துகிறோம்: வாழி! வாழி!

வாழ்த்துவோர்:
புலோலிக் கல்வி நிலையக் குடும்பம்



# இராணுவப் பயிற்சி ஒழுக்கத்தை மேம்படுத்துமா? அப்படியென்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே வேளை இன்றைய சூழ்நிலையில் கட்டாய இராணுவப் பயிற்சியை எந்தளவுக்கு மக்கள் விரும்புவார்கள் என்பதும் கேள்விக்குரியதே. இதனை விட முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்ற சரத் பொன்சேகா, நாட்டில் கட்டாய இராணுவப் பயிற்சி என்பது பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவே அமைந்துவிடும். ஆதலால் இது சாத்தியமற்ற ஒன்று எனவும் தெரிவித்திருக்கின்றார் என்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும். இவ்வாறான நிலைமையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கட்டாய இராணுவப் பயிற்சி அளிப்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்துவதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை. ஆனால் கட்டாய இராணுவப் பயிற்சியினூடாகத்தான் ஒழுக்கத்தை நிலைநாட்ட முடியும் என்பது எந்த அடிப்படையிலானது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

அமைச்சரின் மேற்படிக் கருத்து, பாடசாலைக் கல்வி முறையின் தோல்வியை எடுத்துக் காட்டுவது போல இருக்கின்றது. 13 ஆண்டுகள் பாடசாலையில் இருக்கும் மாணவர்களிடம் ஒழுக்கம், விழுமியம் எதையுமே கட்டியெழுப்ப முடியவில்லை என்றால் அரசு மறைமுகமாக ஆசிரியர்களின், கல்வித்துறை சார்ந்தவர்களின் நிபுணத்துவத்தின் மீதும் குறை கூறுவதாகவே படுகின்றது. பாடசாலைகள், பாடத்திட்டங்களுக்கு அப்பால் மாணவர்களின் விழுமியங்களைக் கட்டியெழுப்புவதற்கான பொறிமுறையை கொண்டிருக்கின்றன. அதற்கான தொடர்ச்சியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலைக் கல்வியின் அடிப்படை நோக்கமே 'நாட்டுக்கு உகந்த நற்பிரசைகளை உருவாக்குவதுதான்' இதனாலேயே பாடசாலைக் கல்வித் திட்டத்தில் சமயம் சார்ந்த கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. சமயத்தினூடாக ஒழுக்கமும் விழுமியமும் கட்டியெழுப்பப்படுமென நம்பப்படுகின்றது. அத்தோடு பாடத்திட்டங்களைத் தயாரிக்கின்றபோது மாணவர்களின் விழுமியம் சார்ந்த பண்புகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதனைவிட, பாடசாலைக் கல்வியை வினைத்திறனாக வழிநடத்துவதே முக்கியமானது. நாட்டில் உள்ள எல்லாப் பாடசாலைக்கும் கற்றலுக்கான வளங்கள் கிடைக்கின்றனவா என்பதை முதலில் ஆராய வேண்டும். கல்வியில் சம வாய்ப்பு என்பது கல்வியை அனைவரும் பெறுவதற்கான உரிமை மட்டுமல்ல. கல்விக்கான வளங்களை அனைத்து மாணவர்களும் பெறவேண்டும் என்பதுமாகும். இன்றைய நெருக்கடிக் காலத்தில் இணைய வழியிலான கல்வியின் பயன் சரியான விதத்தில் அனைத்து மாணவர்களையும் சென்றடைகிறதா எனச் சிந்திக்க வேண்டும். கல்வித்துறையில் இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆசிரியர் சங்கங்கள் நீண்ட காலமாக கேள்விகளை எழுப்பி வருகின்றன. இன்று வரையிலும் எந்த அரசும் அப் பிரச்சினைகள் தொடர்பாக முன்னேற்றகரமான தீர்மானங்களை எடுப்பதில்லை. கொத்தலாவலப் பல்கலைக்கழகச் சட்ட மூலத்துக்கு எதிரான போராட்டம் என்பது செவி சாய்க்காத அரசுக்கெதிரான போராட்டத்தின் திரண்ட வடிவமாகவே இருக்கின்றது.

கட்டாயக் கல்வி, அனைவருக்கும் கல்வி என்ற சட்டங்கள் நாட்டில் இருக்கின்ற நிலையில் அண்மைக் காலத்தில் 13 ஆண்டு கல்வி என்னும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி ஒழுக்கத்தையும் விழுமியத்தையும் போதிக்கவில்லை என்றால், பாராளுமன்றத்திலிருக்கும் அமைச்சர்களும் இந்தக் கல்வி முறைமையினூடாகவே வந்தவர்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் நாட்டுக்கான தீர்மானங்களை எடுக்கின்றவர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால் இலங்கைப் பாராளுமன்றத்துக்குள் கடந்த காலங்களில் நிகழ்ந்த அடிபிடிகள் கொஞ்சநஞ்சமல்ல. செங்கோலை தூக்கிக் கொண்டு ஓடுவதும் ஓடுபவர்களை படைக்கலச் சேவிதர்கள் துரத்திப்பிடிப்பதும் மிளகாய்த் தூளை வீசுவதும் தண்ணீர்ப் போத்தல் தாக்குதல்களை மேற்கொள்ளுவதும் என பல நடந்து முடிந்திருக்கின்றன. இந்தப் பாராளுமன்றப் பாரம்பரியத்தினூடாக வந்தவர்கள் தீர்மானங்களை எடுக்கின்றபோது அவை எந்தளவுக்கு மக்கள் நலன் சார்ந்து அமையும் என்பதும் கேள்விக்குரியதே. முதலில் பாராளுமன்றத்துக்குள் நுழையும் அமைச்சர்களுக்கு ஒழுக்க விழுமியங்கள் பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவையிருக்கின்றது.

நாட்டில் உள்ள எல்லாத் துறைகளிலும் இராணுவத்தை நுழைப்பதென்பது நாட்டின் இறையாண்மை தொடர்பான கேள்வியை எழுப்புகின்றது. வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் இராணுவமயமாக்கல் என்பது யுத்தத்தின் முடிவோடு ஆரம்பமாகிய ஒன்று. வடக்குக் கிழக்கு மக்களுக்கு இது ஒன்றும் புதிய விடயமல்ல. இராணுவம் சிவில் சமூக வாழ்வில் தலையிடுகின்றது என தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றன. இராணுவ முகாம்களுக்காக காணிகளைப் பிடிப்பதும், பொது மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படாமலிருப்பதும், பொது மக்களின் நிலங்களில் இராணுவம் விவசாயம் செய்வதும், சட்டவிரோதமான முறையில் விகாரைகளை நிறுவுவதும் என இராணுவமயமாக்கல் தொடர்கின்றன. இவை யாவும் தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரையில் வெறும் செய்திகளாகவே பார்க்கப்பட்டன. இராணுவ முதன்மைப்படுத்தல் என்பது சிவில் சமூக வாழ்வை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதையும் அவர்கள் உணரத் தொடங்கியிருக்கின்றார்கள். தெற்கில் இன்று போராட்டங்கள் தீவிரம் பெறுவதற்கு இதுவும் முக்கிய காரணங்களில் ஒன்றாக மாறியிருக்கின்றது.

இறுதி யுத்தத்திற்கு பின்னராக இலங்கை இராணுவத்திற்கு எதிராக சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் போர்க்குற்றங்கள் தொடர்பாக பேசப்பட்டு வருகின்றது. இறுதி யுத்தகாலத்தில் இராணுவம் மனிதாபிமான முறையில் மக்களை மீட்டுள்ளதாக அரசுதான் தொடர்ந்து சொல்லிவருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களோ மனித உரிமை அமைப்புக்களோ ஐ.நாவோ இலங்கை அரசின் இராணுவத் தூய்மைவாதத்தை ஏற்றுக்கொள்வதாக இல்லை என்பது வெளிப்படையானது. அரசு இராணுவத்தை எவ்வளவுக்குப் புனிதப்படுத்தி வந்தாலும், யுத்தகாலத்தில் இராணுவம் நடந்து கொண்ட விதம், இலங்கை இராணுவத்தை ஒழுக்க விழுமியப் பண்புமிக்கதா? என்ற கேள்வியையே எழுப்புகின்றது. இராணுவம் தூய்மையுடையது என இந்த அரசு சொல்லிக் கொண்டிருப்பது உண்மை எனின், அரசு சர்வதேச விசாரணைகளுக்கு ஏன் அஞ்சுகின்றது என்ற கேள்வியும் கடந்த காலங்களில் எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்க வேண்டும் என்ற அமைச்சரின் கூற்று எந்த வகையில் ஏற்புடையதாக அமையும்.

தெற்கில் இடம்பெறுகின்ற பல்வேறு குற்றச் செயல்களோடு தொடர்புடையவர்களாக முன்னாள் இராணுவ வீரர்களும் இருக்கின்றார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒழுக்க விழுமியம் என்பது நீண்ட காலத்துக்கு நிலைத்திருப்பதாக இருக்க வேண்டும். இராணுவத்தில் இருக்கும் வரை ஒழுக்கமுடையவர்களாக இருப்பதென்பதும் இராணுவத்திலிருந்து விலகியதும் ஒழுக்க நெறியிலிருந்து விலகுவதுமான நிலை இருக்குமாக இருந்தால். இராணுவத்தின் ஒழுக்க விழுமியம் குறித்துச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இராணுவ விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதென்பது இராணுவத்தில் இருப்பவர்களுக்கு கட்டாயமாக இருக்க வேண்டியதாகும். இதனை இராணுவ ஒழுக்கம் என்ற வரையறைக்குள் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் இதை சமூக ஒழுக்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டதிட்டங்களுக்கும் ஒழுக்கத்துக்குமிடையில் வேறுபாடு இருக்கின்றது என்பதை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கை முழுமைக்குமான நீடித்த விழுமியப் பண்புகளை கட்டியெழுப்புவதுதான் கல்வியின் நோக்கமாக இருக்கின்றது. அதற்கு ஏற்ற முறைமையில்தான் கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மாறிவருகின்ற உலக ஒழுங்குக்கு ஏற்ற விதத்தில் கல்வியில் பல்வேறுபட்ட மாறுதல்கள் ஏற்படுத்தப்படுகின்ற போதும் கல்வியின் அடிப்படையான நோக்கத்தில் நிபுணத்துவம் சார்ந்தவர்கள் கூடுதல் கவனம் எடுக்கின்றார்கள் என்றே நம்பப்படுகின்றது. இன்றைய நடைமுறை அரசு நாட்டை தொழில்நுட்பத் திறனுடன் முன்னெடுக்க வேண்டும் என்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்துகின்றது. அது கலைத்துறை சார்ந்த விருத்தியில் கூடுதல் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. தொழில்நுட்ப அறிவு என்பது இன்றைய உலக ஒழுங்கைப் பொறுத்தவரையில் அவசியமானதுதான். அதைப் புறக்கணித்துவிட்டு நாட்டின் வளர்ச்சி என்பதைக் கற்பனை செய்ய முடியாது. தொழில் நுட்ப வளர்ச்சி என்பது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கான உழைப்பாளர் படையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இதேவேளை வெறும் தொழில்நுட்ப வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியாக அமையாது. ஒவ்வொரு நாடும் தனக்கான பண்பாடு, கலாசார விழுமியம்சார் பண்புகளைக் கொண்டிருக்கும். அவற்றைத் தொடர்பறாது பேணுவதிலும் நாட்டின் வளர்ச்சி தங்கியிருக்கின்றது. நாட்டின் பிரசைகளிடம் சகிப்புத்தன்மையும் விட்டுக்கொடுப்பும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். நாட்டில் வாழுகின்ற பிற இனத்தவர்களின் பண்பாடுகளை மதிக்கின்ற பக்குவம் அனைத்து இனத்தவர்களிடமும் ஏற்பட வேண்டும். இதனை வெறும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியினால் ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு விழுமியம் சார்ந்த கல்வி அவசியமாகின்றது. அதனால்தான் கலைத்துறை சார்ந்த பாடங்களின் உள்ளடக்கம் என்பது அவசியமாகின்றது. இலங்கைக் கல்வி முறையில் க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறை ஒரு தனித்துறையாக இருக்கின்றது. விஞ்ஞானம், கணிதத் துறையைத் தேர்ந்தெடுக்கின்ற மாணவர்கள் சாதாரண தரத்துடன் கலைத்துறைப் பாடங்களை இழந்துவிடுகின்றனர். கலைத்துறை சார்ந்த பாடங்களே மாணவர்களிடம் கலைத்துவ ஈடுபாட்டையும் இரசனை முறையையும் மன ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும். கலைத்துறை என்பதை ஒரு தனித்துறையாக கொள்வதை விடுத்து அனைத்துத் துறைகளுக்குள்ளும் கலைத்துறை சாரந்த பாடங்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்னும் பொது அபிப்பிராயம் நிபுணத்துவ மட்டத்தில் நிலவிவருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல்லின கலாசார நாடாக விளங்குகின்றது. எனவே மக்களிடம் விட்டுக்கொடுப்பும் சகிப்புத்தன்மையும் மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் நாட்டில் பௌத்த கலாசாரமே முதன்மை கலாசாரம் என்ற நிலையே பெரும்பான்மை இன மக்களிடம் காணப்படுகின்றது. அரசும் அதனையே முன்னிலைப்படுத்துகின்றது. இலங்கை அரசு என்பது பௌத்த சிங்கள மக்களுக்கான அரசு என்பதை நிலைநிறுத்தும் விதமான செயற்பாடுகளை, மாறிமாறி வருகின்ற அரசாங்கங்கள் தொடர்ந்தே வருகின்றன. இதன் இன்னொரு வடிவந்தான் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவமயமாக்கல் என்பது தெளிவாகின்றது. முன்னைய அரசுகள் இராணுவத்தை முதன்மைப்படுத்தினாலும் சிவில் விடயங்களில் அதை தலையிட அவ்வளவுக்கு அனுமதிப்பதில்லை. இன்றைய ஜனாதிபதி முன்னாள் இராணுவ வீரராக இருந்தமையினால். அனைத்து சிவில் விடயங்களிலும் இராணுவத்தையே முதன்மைப்படுத்துகின்றார். இந்தப் பின்னணியோடு தொடர்புபடுத்திப் பார்க்கத்தக்கதாகவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றும் அமைந்திருக்கின்றது. ■



# என்ன உலகமடா பரமானந்தா?




⊖ தமிழ்க்கவி

“எட ஏன்ரா மனிசக்குஞ்சுகளுக்கு. மன்னிக்கவும் மனிதன் விலங்கு. அப்பிடியெண்டா மனிசக்குட்டியளுக்கு உது விளங்குதில்ல. ரண்வேயில ஓடுற மெண்டு நினைச்சு ஓடி அந்தர் பல்டியடிச்சு விண்வெளிக்கே பறக்கிறியளே. உங்கட உறவுகள் சுத்தி நிண்டு கத்திறதைக் கேட்க எங்களுக்கெல்ல கதிகலங்குது. இன்னும் ஆசுப்பத்திரியில போய்நிண்டு பாக்க வேணும். கொத்துப் பட்ட கோழி குறாவினமாதிரி வருவினம். என்னண்டா அக்ஸிடெண்டாம். காலமுறிச்சு கைய முறிச்சுப்போட்டு வாழ்நாளெல்லாம் சொல் லித்திரியப் போகினம்.”

எடேய் ‘வித்தாரக்கள்ளி விறகுக்குப் போனாளாம் கத்தாளை முள்ளு கொப்போட ஏறிச்சாம்’ விசர்க்கதையெல்லே பறையிறாய். நா..மோட்டச்சயிக்கிள் வேணுமோ மோட்டச்சயிக்கிள். இஞ்ச வா கதை சொல்ல. எடேய் அந்த நாளயில சனமென்ன வாகனங்களில ஏறியே சவாரி செய்தவை. அப்பாவிப் பிராணியள, குதிரையெண்டும் ஆனையெண்டும் காளை மாடுகளெண்டும் கொண்டு வந்து பழக்கிப்போட்டு அதுகளின்ர முதுகில தான் கண்டியோ உந்த தேசமெல்லாம் சுத்தினதும் நாட்டுக்கு நாடு சண்டைபிடிச்சதும்.

பின்ன இப்பானெல்லோ உந்த இரும்புக்குதிரையளக் கண்டுபிடிச்சு அதுகளுக்கு எண்ணையப் பனுக்கி ஓட வைக்கினம். உவர் செல்லையற்ற பேரன் குட்டி இருக்கிறானெல்லே அவன்தான்ராப்பா எங்கட ஊருக்க முதல் கார் கொண்டு வந்து ஓடினவன். காரின்ர விலை கேக்கப் போறியோ மூவாயிரம் ரூவா. என்னடா கெக்கப்பிக்கெயெண்டு சிரிக்கிறாய். மூவாயிரமெண்டா முந்நூறு தங்கப்பவுண் வாங்கலாம்.

அந்த நாளையில என்ர அப்பாத்தை கடைக்குப் போகேக்க ஒரு அஞ்சு ரூவா கொண்டு போனா குட்டிச் சாக்கு நிறைஞ்ச சாமான் கொண்டுவருவா. அதையும் ரெண்டு தலகணி உறைக்க மாத்திக் குறைச்சு, எங்கட கையிலும் ஒரு தூக்குத் தருவா. இப்ப குட்டிச் சாக்கு நிறையக் காசு கொண்டு போனாலும்,.. கைநிறைஞ்ச சாமான் வாங்க ஏலுமோ? சொல்லு பாப்பம். குட்டிச்சாக்கெண்டா உந்த உருளைக்கிழங்கு கட்டிவாற பை போல ஒரு அல்லரியன் சாக்கில கைப்பிடி வைச்சு தைச்சு கடையில விக்கும். ஒரடி அகலம் ஒண்டரையடி உயரமான பை. வீட்டுக்கு வீடு கடைக்கு வெளிக்கிட்டா அதைக் கொண்டுதான் போவம். கடையிலும் சாமான்கட்டவெண்டே ஆக்கள் நிப்பினம். பேப்பர அளவளவா வெட்டி வைச்சிருப்பாங்கள். ஒரு றாத்தல், அரை றாத்தல், கா றாத்தல் எண்டு நாங்கள் கேக்கிற பொருளுகளை, பேப்பர சுருட்டி சரை செய்து போட்டுத் தருவாங்கள். இப்பிடி சரைகட்டிவாற பேப்பரக் கூட நாங்கள் படிச்சிட்டுத்தான் கிழிப்பம் . ஏன் கிழிக்கிறமோ. எட விசரா அந்த நாளையில வீட்டுக்கு வீடு பிள்ளை குட்டியள் நிறம்பவடா. அதுகள் வீட்டுக்கக்கா இருந்தா கடதாசியாலதான் கிள்ளிக் கொண்டே குப்பையில போடுவம். கக்கூசு அந்த நாளையில எங்கடா இருந்தது. நாங்களே வெறுங்காணியள், பத்தையள் தேடித்தான் போவம். எனிப் புத்தகங்களுக்கு உறை போட எங்கட அப்பரென்ன உன்ர கொப்பர் மாதிரி புறவுண் பேப்பரே வாங்குவார். ஹஹ அவருக்கு அந்த அஞ்சியேம் பொயிலைக்கு உதவும்.

உதெல்லாம் உனக்கொரு நக்கல். அவனாரோ சொன்ன மாதிரி “எவன் பெண்டில் எவனோட போனா எனக்கென்ன என்ர பெண்டில் நாலு பேரோட போனாத் தானே எனக்கு மதிப்பெண்டு” நடக்கிறியள். எடஎட பொறடா அதுக்கேன்ரா கட்டையத் தூக்குறாய்..நா.. நாலு பேரோட எண்டே சொன்னநான். நா.. மூக்கு மயிரப் புடுங்கித் தும்மினா ஆள்பாரங் குறையிறதே.. ‘நாலு பேரப் போல’ எண்டு மாத்தி யோசி. சும்மா ரங்க் சிலிப்பாயிட்டுதடா. இவங்களுக்காகத்தான் சிலிப்பெண்ட நான் இப்பத்தையில் பெடி பெட்டையளுக்கு நாலு பேரோட தாங்களும் மாற வேணுமெண்டதுதான் குறிக்கோள். பின்ன, நான் என்ன கதையே சொல்லுறன். அப்ப பொலித்தீன் இல்ல. நைலோன் இல்ல கடையள்ள சொப்பிங் பாக் இல்ல இப்பானெல்லோ கடைக்குப் போறவை கை விசுக்கிக் கொண்டு போறதும் கண்டமாதிரி பொலித்தீன் பையளக் காவிக் கொணந்து வளவுகளுக்க போடுறதும் அதுகள் காத்தில பறந்து வேலிவிராய், கரண்டுக்கம்பி, மரஞ்செடி எண்டு கண்ட இடத்திலும் பட்டம் பறக்கிற மாதிரி பறக்கிறதும் நல்லாவே இருக்கு.

இவன் என்ர பூட்டனுக்கு மோட்டச்சயிக்கிள் வேணுமாம் பிடியாளா நிக்கிறான். இப்ப மோட்டச்சயிக்கிள் என்னத்துக்கு? இப்பான் ஓயெல் எழுதிப்போட்டு நிக்கிறான். பக்கத்தை கிடக்கு ரீசன் கொட்டில் பள்ளிக்கூடமும் ஒரு பெர்லாங்கில கிடக்கு இப்ப சைக்கிளும் நிக்குது. பிறகேன்ரா தேவையில்லாத சிலவ. எட ரோட்டு நிறைய மோட்டச்சயிக்கிளுகள் தானே ஓடித்திரியுது. அதிலயும் உந்த இளந்தாரிப் பெடியள் விமானப்படைக்கு ரெயினிங் எடுக்கிறாங்கள் போல. ஏ.நைன் வீதியில சும்மா மின்னி மறையிறாங்கள். அவ்வளவு வேகம். பொட்டிட்டாப்போல நிதானமா கடக்கயில்லயோ கடக்கிறவைக்கு நாளண்டைக்குக் காடாத்துத்தான். எடேய் நான் பாக்கிறன். உந்த பரந்தனுக்குக்கிட்டவா மேயப்போற பசு மாட்டுக் கூட்டமொண்டு ரோட்டக்கடக்க மஞ்சள் கோட்டடிக்குப்போய் அதால தானும் தன்ர கூட்டத்தையும் கொண்டு கடக்குது. அது மாட்டை மேய்க்கிறவன் பழக்கி பழக்கி மாடுகளுக்கு பாடமாகிற்றுது.

எட ஏன்ரா மனிசக்குஞ்சுகளுக்கு. மன்னிக்கவும் மனிதன் விலங்கு. அப்பிடியெண்டா மனிசக்குட்டியளுக்கு உது விளங்குதில்ல. ரண்வேயில ஓடுறமெண்டு நினைச்சு ஓடி அந்தர் பல்டியடிச்சு விண்வெளிக்கே பறக்கிறியளே. உங்கட உறவுகள் சுத்தி நிண்டு கத்திறதைக் கேட்க எங்களுக்கெல்ல கதிகலங்குது. இன்னும் ஆசுப்பத்திரியில போய்நிண்டு பாக்க வேணும். கொத்துப்பட்ட கோழி குறாவினமாதிரி வருவினம். என்னண்டா அக்ஸிடெண்டாம். காலமுறிச்சு கைய முறிச்சுப்போட்டு வாழ்நாளெல்லாம் சொல்லித்திரியப் போகினம்.

புதினத்தைக்கேள், ‘தம்பி இந்த சாக்க ஒருக்காப் பத்தி தூக்கிவிடப்பா’ எண்டொரு கிழவி வசுஸ்ராண்டில கேக்க, பெடியன் கொஞ்சமும் கூசாம ‘ணேய் எனக்கு முறிஞ்ச கையெணை பாரம் தூக்க ஏலாதெண்டான். கிழவி சொல்லிச்சு தன்ர விரலில்லாத கையைக்காட்டி ‘எனக்கும் விபத்தில தான்ரா கை முறிஞ்சது. ஒரு படுபாவி விழுந்தவழுக்கு மேல மோட்டச்சயிக்கிளை ஏத்திப்போட்டான். விரல் நசுங்குனதால பிடுங்க வேண்டியதாப்போச்சடா’ எண்டு சொல்லிக் கொண்டே மனிசி சாக்கை நிமித்திச்சுது. இன்னொருவன் கை குடுக்க கிழவி ஒரு எம்பு எம்பி அதை தன்ர தோளுக்கு மாத்திச்சு. “ கிழவிடா” என்று யாரோ கத்திறது கேட்டிச்சா - கிழவி கம்பீரமாக வசுவில சுமைய ஏத்திச்சுது. முதல் இவளுக்கு வாங்கிக் குடுங்கடா ஒரு மோட்டச்சயிக்கிள. தேவைப்படாத சாமானுகளை ஏன் வாங்கிறியள்? ■

---

# அமெரிக்காவின் தந்திரோபாய நகர்வுகள் கியூபாவை வீழ்ச்சி காண வைக்குமா?

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின் வழங்கல் இயந்திரங்களின் பாகங்கள் மாற்ற முடியாமல் இருப்பதன் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகள் நான்கு முதல் ஆறு மணி நேர மின்வெட்டினை எதிர்கொண்டுள்ளன. மேலும் அங்கு கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. உணவுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் மக்கள், வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராக போராடத் தூண்டப்பட்டனர்.

கியூபாவுடன் நீண்ட காலமாகக் கசப்பான உறவைக் கொண்டிருக்கும் அமெரிக்கா போராட்டங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளது. கியூபாவின் மக்களுக்கு ஆதரவாகத் தாங்கள் இருப்பதாகவும், அரசில் இருப்பவர்கள் வன்முறையிலிருந்து விலகி மக்களின் குரலைக் கேட்க வேண்டும் எனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. “கியூபா மக்கள் அடிப்படையான மற்றும் உலகளாவிய உரிமைகளைத் துணிச்சலாகக் கேட்கிறார்கள்” என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கியூபாவில் 1959 ஆம் ஆண்டு புரட்சியின் மூலம் பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைப் பிடித்ததிலிருந்து இரு நாடுகளுக்குமிடையே மோதல் ஆரம்பித்திருந்தது. பிடல் காஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கும் கியூபாவில் குழப்பத்தை விளைவிக்கவும் அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. ஆனால் இப்போது காஸ்ரோ மறைவுக்குப் பிறகு கொரோனா பரவல் மூலம் உணவுப் பற்றாக்குறை பிரச்சினையால் மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் டிரம்ப், கியூபா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதித்ததும் அந்நாட்டை வெகுவாகப் பாதித்துள்ளது. மேலும் கியூபாவில் மனித உரிமை அத்து மீறல் நடைபெறுவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது.

மாபெரும் ஆயுதப் புரட்சியின் மூலம் 1959 இல் கியூபாவில் அமெரிக்கா ஆதரவு சர்வாதிகாரி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர் பிடல் காஸ்ரோ. 2006 ஆம் ஆண்டு வரை கியூபாவில் பிடல் காஸ்ரோ ஜனாதிபதியாக இருந்தார். பிடல் காஸ்ரோ 2016 இல் மரணிக்கும் வரை அரசியலில் அதிகாரம் செலுத்தும் தலைவராகவே காணப்பட்டார். கடந்த ஆண்டு ராவுல் காஸ்ட்ரோ பதவி விலகிய பின்பு கியூபாவின் காஸ்ரே பரம்பரையில்லாத ஆட்சியாளர் அதிகாரத்திற்கு வந்தார். இந்நிலையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி மிகுயேல் டையாஸ், இது அமெரிக்காவின் சதி, அமெரிக்க ஆதரவாளர்களே அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துகின்றனர். இந்தப் போராட்டங்கள் ஒடுக்கப்படும் என்று கூறினார். அத்துடன் கம்யூனிச ஆதரவாளர்கள், போராடும் அமெரிக்க ஆதரவாளர்களுடன் மோதலில் ஈடுபடுங்கள் என பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். இதனால் போராட்டக்காரர்களுக்கும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்கும் இடையே வன்முறைகள் வெடித்துள்ளன.

பொருளாதாரத்தின் முக்கியமான அம்சங்கள் முடங்கி விட்டதால், அரசின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்து கொண்டே வருகிறது. அதனால் பற்றாக் குறையை ஈடுசெய்ய வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யவும் முடியாது என்பது தான் இன்றைய கியூபாவின் நிலையாகவுள்ளது. மேலும் கியூபாவில் ஏற்பட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடி பல ஆண்டுகளாக மெதுமெதுவாக வளர்ந்து வந்த போதிலும் கொரோனா இவ் நெருக்கடியினை மேலும் சிக்கல் நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. கியூபாவில் முதலீடு என்பது வரையறைக்குட்பட்ட ஒன்றாகும். ஆகவே கியூபாவின் பொருளாதாரக் கொள்கைகளும் கியூபாவின் ஸ்திரமின்மைக்கு வழிகோலியுள்ளது.

மேலும் கொரோனாவிற்கு அடுத்ததாக கியூபா மீதான அமெரிக்காவின் நீண்டகால, கடுமையான பொருளாதாரத் தடைகளும் கியூபாவின் ஸ்திரத்தன்மைக்கான பின்னணிக்கான காரணமாகும். இந்நிலையில் கியூபாவில் மனிதாபிமான நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதால் டிரம்ப் காலத்தில் விதிக்கப்பட்டுள்ள தடைகளை தளர்த்துமாறு சில அமெரிக்க சட்டமியற்றுபவர்கள் அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இவ்வாறு தடைகளை நீக்குவதன் மூலம் கியூபாவின் நிலைமை சிறிதளவு மேம்பாடு அடையக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம் என்கின்றனர். அதாவது டிரம்ப் காலத்தில் அமெரிக்கா வாழ் கியூபா மக்கள் கியூபாவிலுள்ள தமது உறவினர்களுக்கு பணத்தினை அனுப்புவதற்கு தடையினை விதித்திருந்தது இதனை நீக்குவது குறித்தும் கோரிக்கை வலுப்படுத்தவுள்ளது.

கியூபா மீதான பைடனின் கொள்கையினை பொறுத்தவரை டிரம்ப் காலத்து தந்திரோபாயத்தினையே பைடன் பின்பற்ற விரும்புகின்றார் என்பது அவரது உரையில் இருந்து தெரிய வருகிறது. புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்தின் அமெரிக்க வரலாற்றின் பேராசிரியர் மைக்கேல் புஸ்ட்மண்டே (Michael Bustamante) கியூபா மீதான அமெரிக்கக் கொள்கையின் பொருட்டு இப்போராட்டம் தொடர்பான பைடனின் கருத்துக்கள் கியூபாவின் ஸ்திரத்தன்மையைத் தூண்டும் நோக்கம் கொண்டதாக குறிப்பிட்டார். ஆகவே பைடனின் தந்திரோபாய நடவடிக்கைகள் கியூபாவினை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லுமா? என்பதையும், கியூபா அமெரிக்காவின் சவால்களுக்கும் உள்நாட்டு பொருளாதார நெருக்கடிக்கும் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது? என்பதை பற்றி தேடுவதே கியூபாவின் நகர்வாக அமையவுள்ளது. ■

## அவற்றோரன்ன.. இவற்றோரன்ன



பேராசிரியர்
அ.ராமசாமி

# புலம்பெயர் எழுத்துகள்: வரலாறாக்கப்படும் புனைவுகள்

இலங்கையின் தமிழ்ப் பகுதியில் நடந்த போர்க்காலம் தொடர்ந்து புனைகதைகளாக எழுதப்படுகின்றன. போர் நிகழ்ந்த காலத்தில் வந்த எழுத்துகளைவிட, போருக்குப் பின் அந்தக் காலங்களை நினைவில் கொண்டு எழுதப்படும் புனைவு எழுத்துகள் - நாவல்களும் சிறுகதைகளும் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கின்றன. அதனை எழுதுபவர்களில் பெரும்பாலோர் புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களாக இருக்கின்றனர்.

### போரின் காலம்

“போர்க்காலம்” என்ற பரப்பிற்குள் சிங்களப் பெரும்பான்மைப் பேரினவாத ஆதிக்கத்திற்கெதிராக நடந்த மக்கள் திரள் போராட்டங்களை விடவும், ஆயுதம் ஏந்தவேண்டிய நெருக்கடிகள் தொடங்கிய காலத்தைத் தொடக்கப்புள்ளிகளாகக் கொண்டே அதிகம் புனைவுகள் எழுதப்பெற்றுள்ளன. ஆயுதப்போருக்கான காரணங்களில் தொடங்கி, பல்வேறு இயக்கங்களின் தோற்றம், அவற்றிற்கிடையே எழுந்த உள் முரண்பாடுகள், மாறி மாறிக் கொன்றொழித்துக்கொண்ட சண்டைகள், அதிலிருந்து மேலெழும்பிய தமிழீழ விடுதலைப்புலிகள் பேரினவாத அரசோடும், அதற்கு உதவிய இந்திய அமைதி காக்கும் படையெனத் தமிழ்ப்பகுதிக்குள் இறங்கிய ராணுவம் நடத்திய அத்துமீறல்களும், அது வெளியேறிய பின்னர் சிங்களப்படையின் போர்நெறிகளைப் பின்பற்றாத அழித்தொழிப்பு யுத்தங்களும் என விரிவாகப் போர்க்காலத்தை நினைவில் கொண்டுவந்து பதிவுசெய்த நாவல்கள் எனத்தேடித் தொகுத்தால் அரைநூறு என்ற எண்ணிக்கையில் கிடைக்கக்கூடும். அதே பின்னணிகளைக் கொண்ட பலநூறு சிறுகதைகளும் கிடைக்கும்.

புலம்பெயர்ந்து தூரதேசங்களில் வாழ்பவர்கள் எழுதிக்கடக்கும் ஒன்றாக நினைத்து எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இப்போதும் இலங்கைத் தமிழ்ப் பகுதியில் வாழ்பவர்களுக்கு அந்த நினைவுகள் எழுதியும் கடக்க முடியாத ஒன்றாக இருக்கக்கூடும். அதனால் குறைவாகவே எழுதுகிறார்கள். அதிகமாக எழுதப்படும் புலம்பெயர் எழுத்துகளுக்கும் குறைவாக எழுதும் புலத்துவாழ் எழுத்தாளர்களின் எழுத்துகளுக்கும் ஒற்றுமைகள் காணப்பட்டாலும் அடிப்படையான வேறுபாடுகளும் இருக்கவே செய்கின்றன. நடந்த நிகழ்வுகளை வரலாற்றின் பகுதிகளாகக்காட்ட நினைப்பதை ஒற்றுமைக்கூறுகள் எனவும், அதற்குக் கையாளும் உத்திகளை வேற்றுமைகள் எனவும் அடையாளப்படுத்தலாம்.

போர்க் காலப்பேச்சுகளை உள்ளடக்கிய புனைவுகள் என்பது அடிப்படையில் அரசியல் சொல்லாடல்களை முன்வைப்பதே. அரசியல் சொல்லாடலைப் புனைவாக்கும் எழுத்தாளர், நடந்து முடிந்த நிகழ்வுகளின் மீதான தன் பார்வையை - தனது நிலைபாட்டை - தனது விமர்சனத்தை வைப்பதின் மூலமாக தனது அரசியல் நிலைப்பாட்டை உருவாக்க முடியும். அதே நேரம் தனது புனைவு முன்வைக்கும் விமர்சனம் காரணமாகத் தனது எழுத்துக்குத் தடைகளும் தனது இருப்புக்கு ஆபத்தும் ஏற்படக்கூடும் என நினைக்கும்போது எழுத்து முறைமைசார்ந்த உத்திகளுக்குள் நுழைந்துகொள்வார்கள். உலக இலக்கியப் பரப்பில் குறியீட்டுப் பாத்திரங்கள் வழி பகடியாடுவது, தொன்மத்தை மறுவாக்கம் செய்வது, வரலாற்றிற்கு மறுவிளக்கம் கொடுப்பது போன்றன அவ்வகை உத்திகளாக இருக்கின்றன.

### பிரிந்துழல்வதின் துயரங்கள்

பிரிந்துழல்வதைப் பேசுவது இலக்கியத்தின் முதன்மையான உரிப்பொருள். தமிழ்ச் செவ்வியல் காலத்துப் புலம்பெயர்வுக்குப் போரும்பகையும் காரணமானது போல, நிகழ்காலத்துப் புலம்பெயர்வுக்கும் அவை காரணமே. சரியாகச் சொல்வதனால், அதுவே முதன்மைக்காரணம். ஆனால் செவ்வியல் காலப் பொருண்மையில் பகையும் போரும் இப்போது இல்லை. செவ்வியல் காலப் போர்வலியின் பிரிவு, எதிரியின் மீது படை யெடுத்துச் சென்ற சொந்த நாட்டுப் படையின் பகுதியாக இருப்பது. நிகழ்காலப் பகைகள் உட்பகையாலும் புறப்பகையாலும் ஏற்பட்டவை. இவ்வகைப் பகைகளால் ஏற்பட்ட போரில் பங்கெடுக்கத் தயாராக இல்லாத நிலையில் வெளியேறிய புலப்பெயர்வுகளே புனைவுகளில் அதிகமும் இடம்பெறுகின்றன. போர் நிறுத்தம் நிகழ்ந்துவிட்ட நிலையில் தண்டிக்கப்படும் ஆபத்தைத் தவிர்ப்பதற்காகவும், போர்க்களப்பகுதியில் வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாது என்ற நிலையில், புதுவாழ்க்கைக்கான பொருள்தேடிப்போன பெயர்வுகளும் உண்டு. இவை குறித்த எழுத்துகள், போருக்குப் பிந்திய தொடர்ச்சியில் குற்றமனத்தின் வெளிப்பாடுகளாகவும், நாட்டிற்குத் திரும்பாமல் இருப்பதற்குத் தேடும் காரணங்களாக வெளிப்பட வாய்ப்புண்டு.

இணைய இதழ்களின் வரவுக்குப் பின், இலங்கைத் தமிழ்ப்பகுதியில் நடந்த போர்க்காலத்தை எழுதும் புலம்பெயர் எழுத்துகள் வாசகர்களை வந்தடைவதில் இருந்த கால இடைவெளிகள் இப்போது முற்றிலும் இல்லை. கிடைக்கும் பனுவல்களில் அதிகமும் முள்ளிவாய்க்கால் பேரழிவைத் தொடர்ந்து நினைவுபடுத்தப்படுகின்றன. அப்படி நினைவுபடுத்தும் பனுவல்கள் ஒற்றைப்பரிமாணமாக இல்லாமல் பலதளங்களுக்குள் செல்கின்றன என்பதைக் கவனித்துப் பேசவேண்டியுள்ளது. அவை புதுவகை விமர்சனச் சொல்லாடல்களை முன்வைக்கின்றன, முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குச் சிங்களப் படைகள் மட்டுமே காரணம் என்று சுட்டும் முந்தைய போக்குக்குப் பதிலாக வேறு காரணங்களையும் முன்வைக்கின்றன. நீண்டகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் புதிய உலகமய வணிக நோக்கங்கள், தடையின்றி நடைபெறும் என்று திட்டமிட்ட பன்னாட்டு வணிகக் குழுமங்கள், அவற்றின் நலனை முழுமையாகப் பாதுகாக்க நினைக்கும் அந்நாட்டு அரசுகள் போன்றனவும் காரணிகளாக்கப்படுகின்றன. தமிழர்களுக்கெனத் தனி நிலமும் தனி அரசும் உருவாவதைத் தடுக்க நினைத்த எதிர்த் தரப்பைச் சுட்டுவதைத் தாண்டி, நிலவியல் மற்றும் புதிய உலகமயச் சூழலையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் பிடிவாதமாகப் போரை நடத்தியே தீரவேண்டும் என்று முடிவெடுத்த போராளிகளையும் படுகொலைகளின் பங்காளிகள் எனப் பேசத் தொடங்குகின்றன. இப்படிப் பேசத் தொடங்கும் எழுத்துகள் புனைவாக்கத்தில் புதுவகைச் சொல்முறையாகப் புனைவுப்பாத்திரங்களை முன்வைப்பதோடு அறியப்பட்ட வரலாற்றுப் பாத்திரங்களையும் புனைவின் பகுதிகளாக மாற்றுகின்றன.

### புனைவை வரலாறாக்குதல்

புனைவை வரலாறாக மாற்றுவதற்குப் புனைகதைக்கு நம்பகத்தன்மையை உண்டாக்க வேண்டும். புனைவின் காலத்தையும் வெளிகளையும் குறிப்பானவைகளாக மாற்றுவதன் மூலம் அதனைச் சாத்தியமாக்கலாம். எதிரெதிர்ப் படையணிகள் பற்றிய தகவல்களை இடம்பெறச் செய்வதன் மூலம் குறிப்பான காலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல் தாக்குதல் நடந்த இடங்களின் பெயர்கள் உண்மைப்பெயர்களாகவே தரப்பட்டுள்ளன. இவ்விரண்டும் உண்டாக்கும் நம்பகத் தன்மை வழியாகப் புனைவுக்குள் விவரிக்கப்படும் ஆயுதப்பொழிவுகள், கொரில்லாத் தாக்குதல்கள் முதலான போர்க்காட்சிகளும், இடப்பெயர்வுகளும் உண்மை நிகழ்வுகள் என நிறுவ முயன்றுள்ளன புனைவுகள். வட்டாரமொழிப் பயன்பாடும் பண்பாட்டு நடவடிக்கைகளும் கூடுதல் பங்களிப்பு செய்துள்ளன. அதேநேரம், புனைவுகளில் பாதிக்கப்படும் மனிதர்களாக இருந்தவர்கள் பெரும்பாலும் புனைவுக் கதாபாத்திரங்களாக இருக்க, போராளிகளும், சிங்கள ராணுவமும் படைப்பிரிவுப்பெயர்களாலும், பதவிப்பெயர்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வகையான நம்பகத்தன்மை கொண்ட சித்திரிப்புகள், நாவல் இலக்கியத்தின் போக்காக இருக்க, சிறுகதைகள் இன்னும் குறிப்பான பின்னணிக்குள் நகரத்தொடங்கியுள்ளன. அதற்கு எடுத்துக் காட்டாக அண்மையில் லண்டனிலிருந்து பதிவேற்றம் பெற்றுள்ள அகழ் இணைய இதழில் இடம்பெற்றுள்ள இரண்டு கதைகளைச் சொல்லத் தோன்றுகிறது. அவ்விதழில் இடம் பெற்றுள்ள ஏழு கதைகளில் மூன்று கதைகள் புலம்பெயர் எழுத்தாளர்களின் கதைகள். முள்ளும் மலரும் என்ற கதையை நட்சத்திரன் செவ்விந்தியனும், வெப்பச் சூத்திரம் என்ற கதையைச் சக்கரவர்த்தியும், புத்தரின் மௌனம் என்ற கதையை நெற்கொழுதாசனும் எழுதியுள்ளனர். இவர்கள் மூவருமே இதற்கு முன்பே கவிகளாகவும் கட்டுரை ஆசிரியர்களாகவும் அறியப்பெற்ற புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களே. நெற்கொழுதாசனின் கதை, புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடொன்றில் தனியனாக வாழும் இளைஞன் ஒருவனின் காமம் சார்ந்த நகர்வை முன்வைக்கும் கதையாக எழுதப்பெற்றுள்ளது. அத்துடன், முழுவதும் புலம்பெயர் வாழ்வை- புலம்பெயர் தேசத்து வெளியின் பின்னணியில் பேசுவதால் முழுமையான புனைவை வாசிக்கும் தோற்றத்தைத் தருகிறது. ஆனால் மற்ற இரண்டு கதைகளும் தனிநாட்டுக் கோரிக்கைப் போரில் அறியப்பெற்ற பெயர்களை இடம்பெறச் செய்துள்ளன. இரண்டு கதைகளின் தொடக்கமுமே வெளிப்படையாக அதனை முன்வைத்துவிட்டே கதைக்குள் வாசிப்பவர்களை அழைத்துச் செல்கின்றன:

“ஒற்றன் பிரிகேடியர் கரும்புலி மொஹமட்,

ஒரு 19 வயதுக் கரும்புலி. ஒற்றன். 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி நாட்களில் பொட்டம்மானின் தொடர்பறுபட்டுக் கொழும்பில் மாட்டிக்கொண்டான்.

இது முள்ளும் மலரும் என்ற கதையின் (நட்சத்திரன் செவ்விந்தியன்) தொடக்கம்.

“எனது பெயர் ஷாரிகா. எனது அம்மாவின் பெயரைச் சொன்னால் என்னைத் தெரிந்து கொள்ள இன்னும் உங்களுக்கு இலகு. விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் மருத்துவர் ராஜினி திரணகமவின் மகள். ஷாரிகா திரணகம.”

இது வெப்பச்சூத்திரம் (சக்கரவர்த்தி) கதையின் தொடக்கம். இப்படித்தொடங்கும் இவ்விரு கதைகளும் புனைவுத்தன்மை கொண்ட நிகழ்வுகளை முற்றிலும் ஒதுக்கியிருக்கின்றன என்றும் சொல்லமுடியவில்லை.

கரும்புலி மொஹமட், தனது பெயரையும் பிறப்பிடத்தையும் மாற்றி, கொழும்பில் கல்வி கற்கும் காலத்து வாழ்க்கையையும் தேரரின் நட்புப் புனைவை அதிகப்படுத்திய மொழியோடும் காட்சிகளோடும் விரித்துள்ளார் நட்சத்திரன் செவ்விந்தியன். அதேபோல சக்கரவர்த்தியின் கதையில், நேர்காணலைப் பதிவுசெய்யும் ஷாரிகா திரணகமவிடம் பேசுபவன், தன் கதையைச் சொல்வது போலத் தொடங்குகிறான். அந்த விவரிப்பில் இடம்பெறும் இடமாற்றங்களைக் கொண்டு, சொல்லப்படும் கதை - கதையில் வரும் ‘ யூட்’ என்பவன் நீ அல்லதானே என்று அவள் கேட்கும் போது, உண்மைப் பதிவு என்பது மாறி, புனைவின் பகுதியாக மாற்றம் அடைகிறது.

இருவரது புனைவாக்கத்திற்குள்ளும் புனைவெழுத்துகள் வழியாக அல்லாமல் வரலாற்று நூல்கள் வழியாகவும், அரசு அறிக்கைகள் வழியாகவும் அறியப்பெற்ற பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இப்பெயர்கள் மட்டுமல்லாமல், இவ்விரு கதைக்குள்ளும் இடம் பெறும் நிகழ்வுகளும் வெளிகளும் முரண்களும் கூடப் புனைவல்லாத எழுத்துகளின் வழியாக வாசிக்கப்பட்ட தகவல்களை முன்வைக்கின்றனவாக இருக்கின்றன. தமிழ் பேசும் மக்களுக்கிடையே இருக்கும் - கிழக்கு மாகாணம், மலையகம், யாழ்ப்பாணம் என்ற வட்டார வேறுபாடுகளும் அவ்வட்டாரத்து மனிதர்களுக்கு இருந்த மனக்குறைகள் போன்றனவற்றையும் தருகின்றன. குறிப்பாக இப்பெயர்களும் தகவல்களும் புனைகதை எழுத்தைக் கட்டுரை எழுத்து என்னும் நிலைக்கு நகர்த்தக்கூடியன.

ஒரு புனைவெழுத்தை வரலாற்றின் பகுதியாக - நம்பகத்தன்மை கொண்ட உண்மை நிகழ்வுகளைப் பேசும் புனைவெழுத்தாக ஆக்குவதின் மூலம் அப்புனைகதை உருவாக்கும் அரசியல் சொல்லாடல் காத்திறமானதாக வலுவடைய வாய்ப்புகள் உண்டு. அதே நேரத்தில் அக்கதைக்குள் இடம்பெறும் புனைவுப்பகுதிகள் நம்பகத்தன்மையைக் குறைத்து புனைவை வாசித்து முடித்த மனநிலையை உருவாக்கவும் வாய்ப்புண்டு. இவ்விரு கதைகளை வாசித்தபோது பின்னைய நிலையே உருவானது. இவ்வகையான இருநிலை எழுத்துகள் உருவாக்கும் மனநிலைகளும் வாசிப்பனுபவங்களும் அரசியல் நிலைபாட்டு நகர்வுகளும் இன்னும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டியவை.

■

தரிசனன்

# நிலைக்கண்ணாடி
# விம்பம் - 07



மனிதனோடு கூடவே பிறந்து அவன் வளரும் காலத்தில் அவனோடு சேர்ந்து வளர்ந்து, ஒரு கட்டத்தில் அவனது உண்மையான முகத்தினை வெளிக்காட்டும் சில எதிர் மறையான பண்புகளை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அதில் முக்கியமான ஒன்று தான் சுயநலம்.

நமது அறிவிலிருந்து இருளுக்குள் எம்மைத் தடுமாற வைக்கும் சுயநல இயல்பு பல வரலாறுகளைத் திசை மாற்றி எழுதிப் போயிருக்கிறது. நமது சுயநல உணர்வு நாம் செய்யக் கூடிய பல தர்மச் செயல்களை அதர்மத்தின் திசைநோக்கி மாற்றி விடுவதுமுண்டு.

நியாயத்துக்கு மாறான மிதமிஞ்சிய கோப உணர்வும் கூட 'நான்' எனச் சுருங்கிப்போய் வெறும் அகந்தையாய் உருக்கொண்டு எதிராளியைப் புண்படுத்தி விடும் விலங்காக எம்மைமாற்றி விடுவதுமுண்டு.

அவ்வாறான ஆபத்துமிக்க உளம் சார் விபத்துகள் நிகழ்ந்துவிடாமல் எமது தெளிந்த அறிவையும் பரந்த சிந்தையையும் துணைகொண்டு தனிமனித மேன்மையைக் காப்பாற்றி நல்லொளியில் எமது செயற்பாடுகள் நிலை கொண்டிருக்க விழிப்பு நிலையை நாம் என்றும் துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

காலங்காலமாக மனிதர்களின் அடிமட்ட சுயநல உணர்வு அவர்களை இருள் வழியிலேயே நடாத்தி வருகிறது. சரியான நேரத்தில் விழிப்புற்றுத் தன்னைத்தானே தன்னிடமிருந்து காத்துக் கொள்ளத் தெரிந்தவன் தனக்கும் பிறருக்கும் நன்மைகள் நிகழும் சூழலை கனிய வைத்துக் கொள்கின்றான்.

அத்தகைய உத்தமமான ஆத்மாக்கள் தான் மகாத்மாக்களாய் உலகில் ஒளிர்ந்திருக்கிறார்கள். ஞானிகளாய் தமது சூழலையே மகிமைப்படுத்திக் கொள்கிறார்கள். தான் ஒரு மனிதன் என்னும் உண்மையை உள்ளார்ந்தமாக உணர்ந்து அந்த உணர்வின் வழி தனது இருப்பை நிலைப்படுத்திக் கொள்பவன் மனிதனாகப் பிறந்து வாழும் பெரும் பேற்றினையே உலகுக்கு உணர்த்துபவனாகிறான். ஆனாலும் பல சந்தர்ப்பங்களில் துரதிஸ்டவசமாய் மனிதன் உருவாக்கிக் கொண்டுள்ள தன்னிருளில் தானே அகப்பட்டுக் கொண்டவனாய் விழியிருந்தும் பார்வையிழந்த துர்ப்பாக்கியசாலியாய் தடுமாறிக் கொண்டிருக்கும் துயரத்தை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டு கொண்டிருக்கிறோம்.

## சுயநல இருளில் திசை தவறும் அறிவு

இந்த நிலை அரசியல், சமூக, குடும்பத் தளங்களில் பலருக்கும் ஏற்பட்டபடியே இருக்கிறது. இதில் இருக்கிற பெரிய வேடிக்கையான நிலை எதுவெ னில் பலருக்கும் தமது நிலை விளங்குவதில்லை, என எண்ணிக்கொண்டு தமது செயல்களை நியாயப்படுத்திக் கொள்ளும் பரிதாபத்துக்குரிய மனிதர்களாய் வாழும், வாழ்ந்த பலரை காலங்காலமாய் நாம் கண்டு கொண்டே வருகிறோம். இம் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும். இதற்கு நிதானமான அறிவின் ஒளியில் நாம் செய்து கொள்ளக் கூடிய சாத்தியமான விடயங்களை இனம்கண்டு நம்மைத் தெளிவாக வைத்துக் கொண்டு நமது ஆளுமையை வளர்த்து கொண்டு, சூழலையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படும் போது தான் இப் புவியில் பிறப்பெய்தியதற்குரிய பேறினை அடைந்து கொள்ள முடியும். சுயநலம் என்பது எல்லோரிடமும் இயல்பாக இருக்கும் ஒன்று தான். ஆனால் அதில் அளவு வேறுபாடுகள் உண்டு. அளவு கூடும் போது அவன் மிருகத்தனத்துக்கும் அளவு குறையும் போது அவன் மனிதப் பண்புக்கு உரியவனாகத் தன்னை அடையாளம் காட்ட முடிகிறது.

எல்லாக் குண இயல்புகளையும் உருவாக்கவும் கட்டுப்படுத்தவும் கூடியதான வல்ல சக்தி மனிதனிடம் உண்டு. அதனைப் புரிந்து கொண்டு செயற்படும் போது அவன் சார்ந்த சமூகம் ஒளிபெறும். மகாத்மாவாக அல்லாது விட்டாலும் மனிதனாகவாவது வாழுவோமே. ■

# நின்ற கொக்கு ஆசனம்

நின்ற நிலையில் செய்யும் ஆசன வரிசையில் பாதஹஸ்தாசனம் என்றும் அழைக்கப்படும் நின்ற கொக்காசனம் ஒரு முக்கியமான ஆசனமாகும். ஹஸ்தம் என்றால் விரல்கள் என்று பொருள். கால் விரல்களும் கை விரல்களும் மிக அண்மையாக வருவதனால் இப்பெயர் வந்துள்ளது. உடலின் முக்கிய பகுதியாக பல நரம்புகள் இணையும் முள்ளந்தண்டு இவ்வாசன நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. எமது நுட்ப உடலின் சக்கரங்கள் கூட மேருதண்டம் என்று அழைக்கப்படும் இந்த அச்சிலேயே அமைந்துள்ளதால், ஆன்மீக ரீதியிலும் பயன்களைக் கொண்டு வரும்.

எந்த அளவிற்கு இவ்வாசனத்தைச் செய்வதால் பயன் உண்டோ, அதே அளவிற்கு மிகுந்த கவனத்துடன் எம்மால் வளையக்கூடிய அளவிற்குச் செய்தால் போதுமானது. பலநாள் பயிற்சியின் பின்னர் எம்முடல் நெகிழ்வுத்தன்மை அடையும் போது ஆசனத்தின் பூரண நிலையை எய்த முடியும். இவ்வாசனத்தில் உடலின் பின்பகுதிகளான காலின் பின்பகுதித் தசைகள் (calf muscles), தொடையின் பின்பகுதித் தசைகள் (Hamstring muscles), ஆசனப்பகுதி, இடுப்புப் பகுதி, முதுகுப் பக்கத் தசைகள் என்பன நீட்டப்படுகின்றன. அதேவேளை வயிற்றுப்பகுதித் தசைகள் அமுக்கப்படுகின்றன.

எமது முழு உடலையும் நோயின்றி வைத்திருக்க, சகல உடலியல் தொழிற்பாடுகளுக்கும் மூலமாக இருப்பதும், நரம்பு மண்டலத்தின் நெடுஞ்சாலையாக அமைந்திருப்பதுமான முள்ளந்தண்டினை ஆரோக்கியமாக பேண வேண்டியது அவசியமானது. 33 தனித்தனியான எலும்புகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டது போன்ற அமைப்பில் முள்ளந்தண்டு உள்ளது. பக்க வாட்டில் பார்க்கும் போது 3 வளைவுகளைக் காணக் கூடியதாக இருக்கும். உடல் இயக்கம் மற்றும் அதிர்வுகளைத் தாங்கக் கூடியதாக, வலுவான எலும்புகள், தசைகளால் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் வயிற்றுப்பகுதி பெரிதாக இருந்தால் இத்தசைகள் வலுவிழப்பதோடு, முள்ளந்தண்டானது அதன் சரியான நிலையில் இருந்து இடம்பெயர்வதால் (Misalignment) தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**செய்யும் முறை**

- கால்கள் இடுப்பு அளவு இடைவெளியில் அல்லது ஒன்றாக இருக்க நிமிர்ந்து நிற்க வேண்டும்.
- கைகளை தலைக்கு மேலே தூக்க வேண்டும்.
- மூச்சை வெளிவிட்டவாறு, கால்களை முழுமையாக நிமிர்த்தாமல் சிறிது தளர்ந்த நிலையில் இருக்க, இடுப்புப் பகுதியின் மேற்பகுதி நீட்டப்பட்ட நிலையில், இடுப்புப் பகுதியை வளைத்து, பாதங்களை அல்லது கால்களின் பின் பகுதியைக் கைகளால் பிடித்துக் கொள்ளலாம்.



- இந்த நிலையில் சாதாரண மூச்சை எடுத்து விட வேண்டும். உடலின் இறுக்கமான பகுதிகளுக்குள் இந்த மூச்சானது சென்று அவற்றின் இறுக்கத்தைப் போக்குவதாக கற்பனை செய்வது, இறுக்கத்தைப் போக்குவதற்குத் துணை புரியும்.
- இந்த நிலையில், தளர்வாகவுள்ள கால்களை படிப்படியாக நிமிர்த்துவதன் மூலம் ஆசனத்தின் பூரண நிலைக்கும், பயனுக்கும் வரமுடியும். இவ்வாறு செய்யும் போது ஆசனப்பகுதி மேலே உயர்வதையும், கால்பாதம் நிலத்தில் உறுதியாக நிலைப்பதையும் உணர முடியும்.

எனினும் ஆரம்ப ஆசன நிலையில் உள்ளவர்கள் தங்களால் முடிந்த அளவு கால்களை நேராக்கினால் மட்டும் போதுமானது. காலப்போக்கில் முற்றான ஆசன நிலையை அடைய முடியும்.

- இந்த நிலையில் முடிந்த அளவு நேரம் நின்றபின், மூச்சை உள் இழுத்தவாறு மிகவும் மெதுவாக, முள்ளந்தண்டின் 33 எலும்புகளும் படிப்படியாக நிமிர்வதாகக் கற்பனை செய்தபடி கைகளை மேலே தூக்கி, பழைய நிலைக்கு வரவேண்டும்.

**பயன்கள்**

- இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் இவ்வாசனத்தைப் பற்றிக் கூறும் போது "பாத ஹஸ்தாசனத்தை உங்கள் வாழ்க்கையின் நாளாந்தப் பயற்சியாக்கும் போது, அது உங்கள் உடலை ஆரோக்கியமாகவும், மனதை அமைதியாகவும் மாற்றிவிடும். இதை விட வேறு என்ன வேண்டும்." என்கிறார்.
- உடலின் பின்பகுதிகள் நீட்டப்படுவதால், அவற்றின் தொழிற்பாடு சிறப்படைகிறது.
- நரம்புகள் தூண்டப்பட்டு, முறுக்கேற்றப்படுகின்றன.
- இடுப்பு, முழங்கால் தசைகள் சுருங்கும் தன்மை அடைந்தவர்களுக்கு (contractures) நிவாரணம் கிடைக்கிறது.
- உடற்பருமன் கட்டுக்குள் வருவதோடு, இளமைத் தன்மை திரும்புகிறது.
- ஞாபகசக்தி அதிகரிக்கிறது.
- உணவு செரிக்கும் தன்மை, சக்தி அதிகரிக்கிறது.
- நீரிழிவு நோயினை கட்டுக்குள் வைத்திருக்கும் ஆசனங்களில் ஒன்று.

**யாரேல்லாம் செய்யக்கூடாது**

தண்டுவடச் சில்லுகளில் பிரச்சினை உள்ளவர்கள், சில்லுகளின் பாதிப்பால் உடலின் கீழ் முதுகுப்பகுதியில் உள்ள நரம்பு வேர் அழுத்தப்படுவதால் ஏற்படும் வலி உள்ளவர்கள் (Sciatica pain ), இதய நோய், உயர் இரத்த அழுத்தம், வயிற்றுப் பகுதி குடலிறக்கம் உள்ளவர்களும் இந்த ஆசனத்தைச் செய்யக்கூடாது.

மாற்று ஆசனம் ஒரு ஆசனம்

செய்த பின்னர் அதன் தாக்கத்தை சமநிலைப் படுத்த, அதற்கு எதிர்நிலையான ஆசனத்தைச் செய்வதால் ஈடுசெய்யலாம். அந்த வகையில் முன்புறமாக வளையும் ஆசனமான நின்ற கொக்கு ஆசனத்துக்கு மாற்றாசனமாக பின்புற வளைவை முக்கியமாகக் கொண்ட வில்லாசனத்தைச் செய்யலாம்.

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)



## ஹிஷாலினி வெளிப்படுத்திச் சென்றுள்ள உண்மை:

# மலையகச் சிறுவர்களும் வாழப்பிறந்தவர்களே

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சட்டத்தைப் பொறுத்தவரையில் சிறுவர் தொடர்பில் முக்கியமான மூன்று விடயங்கள் அவதானிப்புக்குரியது. ஒன்று, 16 வயதுக்குட்பட்ட அனைவரும் கட்டாயம் கல்வி கற்றுக் கொள்ளவேண்டும். இரண்டாவது, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது குற்றம். மூன்றாவது, சிறுவர்களின் விருப்பத்துடனோ விரும்பமின்றியோ தகாத உறவு கொள்வது பாரிய தண்டனைக்குரிய குற்றம். இந்த நிலையில் டயகம பிரதேசத்துச் சிறுமிக்கு நிகழ்ந்துள்ள கொடூரத்திற்குக் கிடைக்க இருக்கும் நீதி எத்தகையது? என்பதே இங்கு எழும் முக்கியமான கேள்வியாக அமைகின்றது.

பொதுவாக மலையகப் பகுதியில் இருந்து இவ்வாறு வேலைக்குத் தரகர்கள் மூலம் கொழும்பிற்கோ அல்லது ஏனைய பிரதேசங்களுக்கோ கொண்டு செல்லப்படுவது சாதாரணமான விடயம் என்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக வேலை செய்து வருகின்றனர் என்றும் தகவல்கள் வருகின்றன.
அப்படியென்றால் சிறுவர்கள் தொடர்பிலான உரிமைகள் மலையகம் தவிர்ந்த பிரதேசச் சிறுவர்களுக்கு மட்டுமானதாகவா இருக்கிறது? என்ற கேள்வி இங்கு முக்கியமானதாகிறது. ஏனைய பிரதேசங்களைப் பொறுத்தவரையில் 90 வீதத்திற்கும் அதிகமான பிள்ளைகள் இலவசக் கல்வியைப் பெறுவதற்கும் பாதுகாப்புக்கு உட்படுத்துவதிலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றனர். அதேவேளை இலங்கையில் பலதரப்பு அரச வேலைத் திட்டங்களிலும் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வும் வழிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையும் உண்டு. இவ்வாறு இருக்கும் போது இலங்கையின் வரைபடத்துக்குட்பட்ட மலையகத்தில் மட்டும் சிறுவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதற்குப் பிரதான ஆறு காரணங்கள் அடிப்படையாக அமைகின்றமையை அவதானிக்க முடிகின்றது. ஒன்று, இங்குள்ள மக்களின் வறுமைநிலை. இரண்டாவது, அங்கு கல்வியறிவு போதுமானதாக இல்லை அதனால் போதுமான விழிப்புணர்வு அற்றிருத்தல். மூன்றாவது, அங்குள்ள அரசியல் தலைமைகள் தங்கள் சுய இலாபம் கருதி அம்மக்களை அவ்வாறே வைத்திருக்க விருப்பங் கொண்டிருத்தல். நான்காவது, ஏனைய பிரதேசங்களுடனான உறவு ஊடாட்டம் அற்றநிலையிலிருத்தல். ஐந்தாவது, சமூக நிறுவனங்கள் சரியான வகையில் அம் மக்களுக்குரிய விழிப்புணர்வுச் செயற்பாட்டினை எற்படுத்தத் தவறியிருத்தல். ஆறாவது, அரசு அவர்களுக்குரிய வாழ்வாதார விருத்தியினை ஏற்படுத்துவதற்குரிய சரியான வழிமுறைகளைக் கட்டியமைக்கத் தவறியிருத்தல் என்பவையே அவையாகும்.

நாட்டில் உள்ள சட்டங்களும் உரிமைகளும் எல்லா மக்களுக்கும் உரியவை. எந்தவொரு பிரதேசத்திலும் அத்தகைய சட்ட வரன்முறைகள் மீறப்படும் போது அதனைக் கவனத்தில் எடுத்து அதற்குரிய தீர்வினைக் கண்டடைய வேண்டியது அப்பகுதியில் இருக்கும் அரச நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசியல் தலைமைகள் போன்றவற்றின் பொறுப்பாக இருப்பதோடு அரசுக்கும் அதில் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. மலையகத்திலிருந்து சிறுவர்கள் வேறு இடங்களுக்கு வேலைக்காகக் கொண்டு செல்லப்படுவது காலங்காலமாக நிகழ்ந்து வருவது ஒன்று என்று ஹிஷாலினியின் மரணத்துக்குப் பின் பொதுவெளிக்கு வந்துள்ள விடயமாக இருந்தாலும் குறித்த பகுதியில் இருக்கும் கிராம சேவையாளருக்கோ பிரதேச செயலகப் பிரிவினருக்கோ அல்லது அப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்களுக்கோ தெரியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியொரு நிலையில், இந்நிலைமையை மாற்றியமைப்பதற்கு ஏன் இதுவரை எவரும் செயலாற்றவில்லை? எந்தப் பிள்ளை எப்படியானால் என்ன என்ற மனநிலையிலேயே குறித்த தரப்பினர் செயற்பட்டு வந்ததாகவே எண்ணமுடிகின்றது.

இன்று எழுந்துள்ள சமூக விழிப்புணர்வு நிலை முன்பே ஏற்பட்டிருக்குமானால் ஹிஷாலினியை இழந்திருக்க வேண்டிய சூழல் இருந்திருக்காது என்ற மனநிலை ஒவ்வொருவரிடத்திலும் தோன்றினாலும் இனியாவது இத்தகைய சூழ்நிலைகளிலில் இருந்து எவ்வாறு மலையகச் சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது என்ற சிந்தனையினை முன்னிறுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. இங்கு பெற்றோர் தமது வறுமையின் காரணமாகப் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி அவர்கள் அனுப்பும் பணத்தில் தமது வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடத்துகின்ற சூழலும் ஏனைய பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் சூழலும் இருப்பதாக அப்பகுதியில் இருப்பவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் அதனையும் தாண்டி இன்னொரு விடயம் இருப்பதனை நாம் கவனித்தேயாக வேண்டும். இப் பகுதி மக்களின் வறுமை நிலையினைச் சாதகமாகக் கொண்டு ஏனைய பகுதியில் வாழும் செல்வந்தர்கள், பிரமுகர்கள் குறைந்த ஊதியத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வயதுக்கு மீறிய சுமையினை அக்குழந்தைகளின் மீது சுமத்துகின்றனர். இன்னும் சிலர் அத்தகைய பிள்ளைகளை தமது பாலியல் இச்சைகளுக்கும் பலியாக்க முனைகின்றன. அத்தகைய ஒரு நிலையே ஹிஷாலினிக்கும் நிகழ்ந்திருக்கிறது.

இச் சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டி பெண்கள் அமைப்புக்கள்,சமூக ஆர்வலர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இப் போராட்டத்திற்குக் காரணம் ஹிஷாலினியின் மரணமாக இருந்தாலும் மறைமுகமாக இன்னொரு காரணமும் உண்டு. அது இனியொரு பிள்ளைக்கு இப்படியொரு நிலைமை ஏற்படுவதனைத் தடுத்து நிறுத்துவதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே அதுவாகும்.

இன்றுவரை மலையகத்து இச் சிறுமியின் மரணத்துக்கு என்ன காரணம் என்பது தெளிவாக முன்வைக்கப்படவில்லை. எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தபோதும் அவ்வாறு எரிவதற்குரிய காரணம் என்ன என்பது தொடர்பில் தகவல்கள் வெளியிடப்படவில்லை. இன்னிலையில்தான் சந்தேகங்கள் எழுகின்றன. சிலவேளை இது கொலை முயற்சியாகவும் இருக்கலாம் என்ற ஊகமும் உண்டு. அதனை இன்னும் வலுப்படுத்துவதாக அமைகின்ற விடயம் தொடர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் குறித்த சிறுமி உள்ளாகியிருக்கின்றமையே ஆகும். இவ்வாறு அப்பிள்ளையை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியிருந்த நபர் தொடர்பில் அறிந்து கொள்ளவும் முடியவில்லை. பொலிஸ் தரப்பினர் இரண்டு குழுக்களை நியமித்து இம் மரணம் தொடர்பில் ஆய்வினை நடத்திவருவதாகக் குறிப்பிட்டிருந்த போதும் அது எவ்வளவு தூரம் துரிதப்படுத்தப்படுகின்றது என்பதற்கான தெளிவும் இல்லை. ஒருவேளை அரசியல் பிரமுகர் வீட்டில் நிகழ்ந்ததன் காரணத்தினால் தகவல்களை வெளியிடுவதில் ஏதேனும் சிக்கல் இருக்கின்றதோ என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது. இருந்தாலும் குறித்த அரசியல் பிரமுகர் ஏற்கனவே வேறு ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு இருப்பதால் அரசுக்கு அவரை இன்னும் இறுக்குப் பிடிக்குள் உள்ளாக்க இதுவும் ஒரு துணைக்காரணமாக அமையப்போகின்றது என்ற கதைகளும் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. இச் சிறுமியின் மரணத்தில் ரிஷாத் பதியூதினுக்கு எவ்வளவு தூரம் சம்பந்தம் இருக்கிறதோ தெரியாது. ஆனால் அவரும் குற்றவாளியென்பது உறுதியானது. ஏனெனில் பதினைந்து வயதுச் சிறுமியை வேலைக்கு வைத்திருந்தமை சட்டப்படியான குற்றம். அதிலும் நாட்டு மக்களின் வாழ்வினையும் இருப்பினையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடைய அரசியல் தலைவர் இப்படிச் செயற்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இதற்கு எப்படி அவரால் நியாயம் சொல்ல முடியும்? அதனை உணர்ந்துதானோ என்னவோ இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றவுடனேயே அவரும் இந்தியத் திரைப்படங்களில் தோன்றும் அரசியல்வாதிகள் போல் மாரடைப்பென்று நாடகமாடி வைத்தியசாலையில் சென்று படுத்துள்ளார்.

எது எப்படியோ குறித்த சிறுமியின் மரணத்துக்கு நிச்சயம் நீதி வேண்டும். இந் நீதியென்பது ஒட்டுமொத்த மக்களின் எதிர்ப்புக் குரல்களினாலும் தொடர் ஆர்ப்பாட்டங்களினாலுமே கிடைக்கக் கூடியது. அவ்வாறு கிடைக்கக் கூடிய நீதியானது நாட்டில் இவ்வாறான பொறிக்குள் அகப்பட்டிருக்கும் இன்னும் பல குழந்தைகளை விடுவிப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

இந்த இடத்தில் நாம் இன்னும் கவனிக்க வேண்டிய விடயங்கள் உண்டு. மலையகத்தில் மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு வாக்குக் கேட்கும் அரசியல் தலைமைகள், அங்குள்ள தொழிற்சங்கங்கள், பொறுப்புடைய அரச அதிகாரிகள், கிராம சேவகர் இந்தகைய நிலைக்கு என்ன நியாயம் சொல்லப்போகிறார்கள். தனியே இது ஒரு குடும்பத்தின் பிரச்சினையல்ல. ஒரு சமூகத்தின் பிரச்சினை. எதிர்காலச் சந்ததியின் வாழ்தல் பிரச்சினை. யாருமே தங்களுக்கு இவை தொடர்பில் அறிந்திருக்கவில்லை என்று குறிப்பிட முடியாது. காலம் காலமாக நடக்கும் நிகழ்வாக இது இருப்பதாலும். அதற்கென்று தரகர்கள் தொழிற்படுவதாலும் நிச்சயம் மலையகப் பெருவெளியில் இவை தொடர்பான அறிதல் ஏற்கனவே இருந்திருக்கும். ஆனால் அம் மக்கள் தொடர்பில் சரியான அக்கறையின்மையால் எவரும் கவனத்தில் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதும் உண்மை. இனியாவது அவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அங்குள்ள பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதோடு, இப்பிள்ளைகளின் கல்வி தொடர்பில் சிந்திக்க வேண்டும். விழிப்புணர்வுள்ள சமூகத்தினை உருவாக்கினால் தங்களது இருப்பு தகர்ந்துவிடும் என்ற பழைமைவாத எண்ணத்தினை மாற்றிக் கொண்டு மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களாகச் செயற்பட முனைய வேண்டும். அதேவேளை எப்பகுதி சிறுவயதுப்பிள்ளைகளாக இருந்தாலும் வீட்டு வேலைக்கு அமர்த்தும் எண்ணத்தினை விடுத்து அவர்களுக்கான வாழ்வாதாரத்தினையும் கல்வியினையும் உறுதிப்படுத்தக் கூடிய சிந்தனையுள்ளவர்களாக எஜமான் தோரணைகொள்வோர் மாற்றம் பெறுதல் வேண்டும். ■



# ஒலிம்பிக் 2020 டோக்கியோ


சி.விமலன்





நேற்றையதினம் (23.07.2021) ஜப்பான் தலை நகர் டோக்கியோவில் ஆரம்பமாகிய 32 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. சென்ற வருடம் நடை பெற வேண்டிய இந்த ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா காரணமாக ஒரு வருடம் பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது. இதற்கு முன்னதாக ஒலிம்பிக் போட்டிகள் முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர் காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தாலும் போட்டிகள் பிற்போடப்படுவது இதுவே முதன் முறையாகும்.



ஜப்பானில் கொரோனாத் தொற்று தற்போதும் அதிகரித்து வருவதனால் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு பலதரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பிய வண்ணமே இருக்கின்றன. தற்போது போட்டிகள் நடைபெறும் டோக்கியோ நகரிலும் அவசரநிலை இந்த மாதம் 8 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டு அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்தியில் தான் ஒலிம்பிக் போட்டிகளையும் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. இதையடுத்து ஏற்கனவே வெளிநாட்டு ரசிகர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது உள்ளூர் ரசிகர்களின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆசியா சார்பில் ஏற்கனவே 1988 இல் தென்.கொரியாவும் 2008 இல் சீனாவும் ஒலிம்பிக் போட்டியை நடத்தி இருந்தாலும் ஜப்பான் ஒலிம்பிக் போட்டியை நடத்துவது இது இரண்டாவது தடவையாகும். முன்னதாக 1964 ஆம் ஆண்டும் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றிருந்தது. அந்தவகையில் அதிக பட்சமாக ஐரோப்பா கண்டம் 17 தடவைகளும் அமெரிக்கா கண்டம் 8 தடவைகளும் அவுஸ்ரேலியா 3 தடவைகளும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தி உள்ளன. நூற்றாண்டு கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் ஒன்று கூட ஆபிரிக்கக் கண்டத்தில் நடைபெறவில்லை என்பது துரதிர்ஷ்ட வசமானதே.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் போட்டியாளர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டு அதிகாரிகள் என பதினோராயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே உகண்டா குத்துச் சண்டை அணியில் இருவருக்கும் ஒலிம்பிக் கிராமத்தில், இப்பத்தி எழுதும் வரை போட்டியாளர்கள் எண்மருக்கும் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. இது போன்ற விபரீதங்கள் எந்த வேளையிலும் ஏற்படலாம் என்ற அச்சத்தினாலும் காயங்கள் காரணமாகவும் பல போட்டியாளர்கள் விலகி உள்ளதனால் பங்கு பற்றுபவர்களின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் புதிதாக மலை ஏற்றம், அலைச்சறுக்கு, கராத்தே, ஸ்கேட்டிங் ஆகிய விளையாட்டுக்கள் முதன்முறையாகவும் பேஸ்போல், மென்பந்து விளையாட்டுக்கள் 2008 இற்கு பிறகு மீளவும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தவகையில் மொத்தம் 33 விளையாட்டுக்களின் 339 போட்டிகள் 42 இடங்களில் நடைபெறவுள்ளன. பெரும்பாலான போட்டிகள் டோக்கியோவிலும் அதன் அருகில் உள்ள இடங்களிலும் நடைபெற உள்ளதோடு உதைபந்தாட்டம், மரதன் ஆகிய போட்டிகள் ஜப்பானின் வடக்கு நகரான சப்போறோவில் நடைபெறவுள்ளன. ஆரம்ப நிகழ்வு ஜப்பான் தேசிய மைதானத்தில் நடைபெற்றது.

இம்முறை ஒலிம்பிக்கில் அதிக பட்சமாக அமெரிக்காவில் இருந்து 621 போட்டியாளர்களும் ஜப்பானில் இருந்து 552 போட்டியாளர்களும் சீனாவில் இருந்து 406 போட்டியாளர்களும் பிரான்சிலிருந்து 403 போட்டியாளர்களும் பிரித்தானியாவில் இருந்து 376 போட்டியாளர்களும் பங்குபற்ற உள்ளார்கள். இலங்கையில் இருந்து 4 வீரர்கள் 5 வீராங்கனைகள் அடங்கலாக 9 பேர் 7 போட்டிகளில் பங்குபற்ற உள்ளார்கள். அது தவிர மலையகத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியையான ஆர்.அகல்யா பூப்பந்தாட்டப் போட்டியில் தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்ற உள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை ஒலிம்பிக்கில் இதுவரை இருவர் மாத்திரமே பதக்கங்களை கைப்பற்றி உள்ளார்கள். 1948 லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் டங்கன் வைட்டும் 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுசந்திகா ஜெயசிங்கவும் பெற்ற வெள்ளிப் பதக்கங்களே அவையாகும்.

அது போல இந்தியாவில் இருந்து இம்முறை 69 வீரர்கள், 55 வீராங்கனைகள் அடங்கலாக 124 போட்டியாளர்கள் கலந்துகொள்கின்றனர். இதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 14 போட்டியாளர்களும் அடங்குகின்றனர். 2016 றியோ ஒலிம்பிக்கில் அரசியல் நெருக்கடிகள் மற்றும் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து சென்றவர்களை ஒருங்கிணைத்து 'அகதிகள் ஒலிம்பிக் அணி' என்ற பெயரில் பங்குபற்றுவதற்கு முதன் முறையாக அனுமதித்திருந்தார்கள். இவர்கள் ஆரம்ப நிகழ்வில் ஒலிம்பிக் கொடியின் கீழ் மைதானத்தில் கலந்துகொள்வார்கள். அதற்கிணங்க இம் முறையும் அந்த அணியின் பெயரில் 12 நாட்டைச் சேர்ந்த 29 போட்டியாளர்கள் களமிறங்க உள்ளார்கள்.


முக்கியமாக இம்முறை போட்டிகளில் கொரோனா காரணமாக பதக்கங்கள் வெல்பவர்களின் கழுத்தில் அவை அணிவிக்கப்படமாட்டாது. பதக்க மேடையில் தட்டில் வைத்து அவை வழங்கப்படும். அதனை வெற்றியாளர்களே எடுத்துத் தங்கள் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும். பதக்கத்தை தட்டில் எடுத்து வைப்பவர் தொற்றுப்பரவாத வகையில் கையுறை அணிந்து செயல்படுவார். பதக்கத்தை தட்டில் வைத்து வீரர்களிடம் கொடுப்பவரும் பதக்கத்தைப் பெறும் வெற்றியாளர்களும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். இந்த நிகழ்வின் பொழுது கை குலுக்கி வாழ்த்துத் தெரிவிக்கவோ கட்டித் தழுவிப் பாராட்டவோ கூடாது எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■








## வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- ..................................................................................

தரம்:- ..........................................................................................

கற்கும் பாடசாலை:-............................................................................

விலாசம்:- .......................................................................................

.......................................................................................

தொலைபேசி இலக்கம்:-.........................................................................

பிள்ளைகளே!
உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.

*அனுப்பவேண்டிய இறுதித் திகதி **28.07.2021***

# ஆபத்து உதவியும் உறவின் ஆபத்தும்



ஒரு அடர்ந்த காட்டின் வழியே சிங்கக்குட்டியொன்று தனியே நடந்து சென்று கொண்டிருந்தது. அந்த வழியிலிருந்த புதைகுழி ஒன்றினுள் அது தற்செயலாகத் தவறி விழுந்து விட்டது. உடனே கூச்சல் போடத் தொடங்கியது. அச்சமயம் அங்கே மானொன்று குட்டியோடு புல் மேய வந்தது. சிங்கக் குட்டி புதைகுழியில் விழுந்து தவித்துக் கூச்சலிடுவதைக் கண்டது. அருகிலிருந்த மரத்திலே படர்ந்த கொடியினைத் தனது கொம்புகளால் இழுத்து எடுத்தது. அக் கொடியினைப் புதைகுழியை நோக்கி எறிந்தது. அக் கொடியினைப் பிடித்துச் சிங்கக்குட்டி மேலேறி வந்தது. மானுக்கு நன்றி கூறியது. “நாளை எனது பிறந்தநாள். நீங்கள் உங்கள் மகனோடு கட்டாயம் வர வேண்டும்” எனக் கூறி விடை பெற்றுச் சென்றது. மான் குட்டி தனது தாயிடம் “நாங்கள் நாளை விருந்துக்குப் போகலாமா?” என்று கேட்டது. அதற்குத் தாய்மான் “தீயவர்களுக்கு ஆபத்தில் உதவலாம். ஆனால் அவர்களோடு உறவு கொள்வது ஆபத்தானது” என்று பதில் கூறியது.

**மு.கோகனன்**
யா/இந்துக் கல்லூரி
தரம்-7B




நல்ல நல்ல பிள்ளைகள் நாங்கள்
நாலும் தெரிந்த வல்லவர் நாங்கள்
நல்லவர் வழியில் சென்றிடுவோம்
நாட்டை உயர்த்தி வைத்திடுவோம்

**- வர்ணவி -**



கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
**செல்வன் உ.சாய்கார்த்திகன்**
தரம் - 02
யா/இந்து ஆரம்பப் பாடசாலை


### பாராட்டு பெறுபவர்கள்

**சு.அஷ்மிதா**
தரம் - 01
யா/புனித ஜோன் பொஸ்கோ

**சி.அப்சலா**
தரம் - 05
யா/வதிரி வடக்கு மெ.மி.த.க.பா

**க.சபின்**
முன்பள்ளி
கலைவாணி முன்பள்ளி
ஆழியவளை

**சு.ஆயகி**
தரம் - 01
யா/புனித ஜோன் பொஸ்கோ
யாழ்ப்பாணம்



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**



**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564




யாழ்ப்பாணத்தில் கட்டுமானத் துறையில் கால்பதிக்கும் Needa குழுமத்தினர்

Needa Group of Companies (pvt) Ltd.

## Needa Engineering

**உங்கள் காணியில் ஓர் அழகிய இல்லத்தினை அமைத்துக் கொள்ளுங்கள்.**

வங்கிக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும் NDB bank

கனகசபை கட்டடத் தொகுதி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொடர்புக்கு - 0771102395

**வாடகைக்கு வீடு தேவை**
நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு உத்தியோகத்தர்கள் வசிக்கக்கூடிய வீடு தேவை.
தொடர்புக்கு – 0769894190

**விற்பனைக்கு**
மந்திகைப் பகுதியில் 9,1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு - 0771102395

**தேவை**
பருத்தித்துறை, மந்திகை, கரவெட்டி, துன்னாலை ஆகிய பகுதிகளில் 4 - 5 பரப்பில் வீடு கட்டக்கூடிய காணி தேவை.
தொடர்புகளுக்கு:- 0771102395

**விற்பனைக்கு**
பருத்தித்துறை, கிராமக்கோடு பகுதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு - 0771102395


இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 24.07.2021 அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,